விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valamperii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 26 திங்கட்கிழமை (08.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 110

# தமிழர்களின் வடுக்களை ஆற்ற சர்வதேச விசாரணையே தேவை!

## பிரணாப் முகர்ஜிக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் பதில்

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல்தீர்வுகாணுமாறுமகிந்த அரசுக்கு இந்தியா அறிக்கைகள் ஊடாக அழுத்தங்களை மட்டும் கொடுக்காமல் அதற்கு அப்பாற் சென்று ஆக்கபூர்வமான கொள்கைவழிமுறைகளில்மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும்என்றுத. தே. கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)




### இளந்திரையனின் குடும்பம் சுவீடனில் தஞ்சம்

விடுதலைப்புலிகளின் பேச்சாளராக இருந்த இராசையா இளந்திரையனின் மனைவி, பிள்ளைகளுக்கு சுவீடன் தஞ்சம் வழங்கியுள்ளது என்று அவர்களுடன் படகில் சென்றிருந்த இலங்கைத் தமிழ்ப் பெண் லோகினி ரதிமோகன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த இளந்திரையன் உயிரோடு (20ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய தூதுவர்களை தி.மு.க சந்திக்கும்



பொதுநலவாய நாடுகளின் (காமன் வெல்த்) மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது

என்று அதன் நடவடிக்கைக் குழுவின் நாடுகளின் தூதர்களை திராவிட முன்னேற்றக் கழக எம்.பிகளும் டெசோ உறுப்பினர்களும் நேரில் சந்தித்து வலியுறுத்துவர் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இனப் படுகொலையை நடத்தி தமிழீழ மக்களையே அழித்தொழிக்க முயன்ற இலங்கையில் பொதுநலவாய (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுத வர்த்தக உடன்பாடு
## ஐ.நா வாக்கெடுப்பை புறக்கணித்தது இலங்கை

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் ஆயுத வர்த்தகத்தை கட்டுப்படுத்தும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் கொண்டுவரப்பட்ட ஆயுத வர்த்தக உடன்பாடு மீதான வாக்கெடுப்பை இலங்கை புறக்கணித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் கொண்டு வரப்பட்டு 154 நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த உடன்பாட்டுக்கு எதிராக ஈரான், ஈராக் வட கொரியா மற்றும் சிரியா ஆகிய நாடுகள் வாக்களித்திருந்தன.

அதேவேளை, இந்த வாக்கெடுப்பின் போது வாக்களிக்காமல் புறக்கணித்த 23 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அதுபோன்று சீனா, இந்தியா, இந்தோனே ஷியா, ரஷ்யா, குவைத் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளும் இந்த வாக்கெடுப்பை புறக்கணித் திருந்தன.

இந்நிலையில், இந்த வாக்கெடுப்பை புறக்கணித்த 23 நாடுகள் பலவற்றில் மனித உரிமை மீறல்கள் அண்மைக் காலங்களில் மிக மோசமாக இடம்பெற்று வருவதாக நியூயோர்க் ரைம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், பாஹ்ரெய்ன், மியன்மார் மற்றும் இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விஜயத்தை இரத்து செய்யுங்கள்!

### இந்திய குழுவுக்கு மத்திய அமைச்சர் கடிதம்

ஈழத் தமிழர்கள் வேதனை மற்றும் தமிழர்களின் கோபத்தை உணர்ந்து இலங்கைக்கான தங்களுடைய பயணத்தை ரத்துச் செய்யுமாறு இந்திய மத்திய சுற்றுச்சூழல் மந்திரி திருமதி ஜெயந்தி நடராஜன் டில்லியில் உள்ள இந்திய வணிக தொழில் கூட்டமைப்பு தலைவருக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கு இந்திய எம்பிக்கள் குழு ஒன்றை அனுப்பி பேச்சுவார்த்தை நடத்த இந்திய வணிக தொழில் கூட்டமைப்பு பரிந்துரை செய்துள்ளது.

இந்திய குடிமகள் என்ற ரீதியில், குறிப்பாக தமிழ் நாட்டைச் சேர்ந்தவள் என்ற முறையில் 2009ஆம் ஆண்டு போரின்போது, அதற்கு பிறகும் இலங்கை அரசு அப்பாவி தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தியது மிகுந்த வேதனை



யை எனக்கு ஏற்படுத்தியது.

இறுதிக்கட்ட போரின்போது 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு பகுதியில் நிலை கொண்டுள்ள (19ஆம் பக்கம் பார்க்க)


## கிழக்கு சிவில் நிர்வாகத்திலும் இராணுவ தலையீடு அதிகரிப்பு

### மகிந்தவிடம் ஹக்கீம் முறையீடு

வடக்கு சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீடு அதிகரித்திருப்பதாக தமிழ்க் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் குற்றம் சாட்டிவரும் நிலையில், கிழக்கு மாகாணத்திலும் இராணுவத்தின் தலையீடுகள் அதிகரித்திருப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாக முறையிட்டுள்ளார்.

ஆளும் கட்சியிலுள்ள பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை ஜனாதிபதி கடந்த வெள்ளிக்கிழமை மாலை அலரிமாளிகையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதில் அமைச்சர்களான டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார, ரவூப் ஹக்கீம், அதாவுல்லா, ரிஷாட் பதியூதீன், நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மேல் மாகாண



சபை உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாட்டின் தற்போதுள்ள முக்கியமான பிரச்சினைகள் குறித்து இந்தப் பேச்சின்போது விரிவாக ஆராயப் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இளைஞர்களின் கைகளில் ஜே.வி.பியின் தலைமைத்துவம்!

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி)யை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் வகையிலும் நாட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையும் வகையிலும் திறமை கொண்ட இளைய தலைமுறையினரிடம் தலைமைத்துவத்தை ஒப்படைக்கவிருப்பதாக அக்கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

குருநாகலில் கடந்தவாரம் இறுதியில் நடைபெற்ற ஏப்ரல் 71 வீரர்கள் தினத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்படி அறிவிப்பை அவர் விடுத்தார்.

ஜே.வி.பி. தலைவர் ஒரு சக்கர நாற்காலியில் செல்லும் வரையிலும் கட்சி தலைமையாகவே இருப்பதற்கு விரும்பவில்லை.

வாழ்க்கை வர்க்க போராட்டமானது தலைமுறை இருந்து தலைமுறைக்கு செல்லவேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாங்கள் எப்போதும் தலைவர்களாக இருக்க விரும்ப வில்லை என கியூபா தலைவர் ராவுல் காஸ்ட்ரோ சமீபத்தில் தனது ஓய்வு அறிவிப்பை அறிவித்தார்.

அதனை ஒரு முன்னோடியாக அமைந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-4)

## மரண அறிவித்தல்

### டானியல் செல்வநாதன்



உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டானியல் செல்வநாதன் 07.04.2013 அன்று அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற டானியல் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெலஸ்ரினா (இத்தாலி), ஜெயசுதா, ஜெனீபன் (பொலிஸ் உத்தியோகத்தர், முல்லைத்தீவு), சபீனா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஸ்கின் (இத்தாலி), நிசாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ் சென்றவர்களான குணரத்தினம், ஸ்ரான்லி மற்றும் தங்கரட்ணம், ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர், பாக்கியரட்ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) தவரட்ணம், றோசலின், ஜெயரட்ணம் (வலி கிழக்கு, தெ.பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கிளை முகாமையாளர்), ஸ்ரெலா (பிரான்ஸ்), உதயரட்ணம் (ஊழியர் பொருளாதார அமைச்சு திருகோணமலை), அமல்ராஜ் (பாப்பா) (அலு வலகப்பணியாளர் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) ஆகியோரின் அன் புச்சகோதரனும், ஜசிந்தா, ராஜேஸ்வரி, மேரி, சில்வெஸ்ரர் (அலுவலகப் பணியாளர் வலயக்கல்வி அலுவலகம், மருதனார்மடம்), இராஜகுமாரி, விக்டோரியா, மெனிக்கா, யூலியற் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரிபெக்ஸன், றிஜோசா, குருசேர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை அவரது இல்லத்தில் மாலை 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக உடுவில் மல்வம் அப்போஸ்தலர் சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவருக்கு அறியத்தருகின்றோம்.

தகவல் : ஜெனீபன், சக பொலிஸ் உத்தியோகத்தர்கள்.

# நாவாந்துறை வாள் வெட்டு; பிரதான சந்தேகநபர் கைது

(நாவாந்துறை)

நாவாந்துறை பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை கைது செய்துள்ளதாக யாழ்.பொலிஸ் நிலைய சிறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.டபிள்யு. எல் விக்ரமராச்சி தெரிவித்தார்.

யாழ்.நாவாந்துறை பொம்மைவெளி பகுதியில் கடந்த 27ஆம் புதன்கிழமை வயோதிபர் ஒருவர் மீது அசிட் வீசப்பட்டதுடன் வாள் வெட்டு தாக்குதலும் நடத்தப்பட்டது.

முன் விரோதம் காரணமாக குறித்த வயோதிபர் மீது இவ்வாறான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இச் சம்பவத்தில் அதே இடத்தினைச் சேர்ந்த அப்துல் காதர் முகம்மது அலிம் நிஹார் (வயது 53) என்ற வயோதிபர் படுகாயமடைந்த் நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச் சம்பவம் தொடர்பாக புலன் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் இக் கொலையில் 6 பேர் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அதில் பிரதான சந்தேக நபர் புத்தளம் பகுதியில் தலைமறைவாகியிருப்பதாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்திருந்தது.

குறித்த சம்பவத்திற்கு முச்சக்கர வண்டி கொடுத்த உதவிய சந்தேக நபர் முன்னரே கைது செய்யப்பட்டார். இந் நிலையில் பிரதான சந்தேக நபர் நாவாந்துறை பகுதியில் உள்ள வீடொன்றில் மறைந்திருந்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-4)


யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு



## தேவை

கொக்குவில் பகுதியில் இயங்கும் விருந்தினர் விடுதிக்கு அறை பராமரிப்பாளர் (Room boy) தேவை.

தொடர்புகளுக்கு : 0777352165

(சி-2201)



பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829



வீடு வாடகைக்கு உண்டு

சுன்னாகம் வருசப்புலம் அம்மன் கோயில் சூழலும் KKS வீதிக்கும் அண்மையிலும் அமைந்துள்ளவீடுவாடகைக்குவிடப்படும். இது தனியார் ஸ்தாபனங்களுக்கோ,அரச உயர் உத்தியோகத்தர்களுக்கோபொருத்தமானது.

தொடர்புகளுக்கு:- 0757131028, 0771120942

(2338)


# இறுதி விடை கொடுக்கின்றோம்...



கிளிநொச்சி திருநகரை பிறப்பிடமாகவும், கனடா ரொறொன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட

**கனகராஜா ஜெயக்குமார் (ரவி)**

ரவி சூப்ஸ், ரொறன்ரோ, கனடா (Ravi Soups) உரிமையாளர்.

தாயக முகவரி : திருநகர், கிளிநொச்சி



ஊர் இழந்து உறவிழந்து கூடிழந்த பறவைகளாக நாம்
நாதியற்று திசை தெரியாது பறந்த பொழுது
வாராது வந்த சொந்தமென
எமை அணைத்த உறவுகளில் ஒன்று
இன்று எமை விட்டு நீண்ட தூரம் பறந்து சென்றது.



ஆறாத ரணங்களில் இருந்து
மீளமுடியாது தவித்துக்கொண்டிருந்த போது
வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல்
வந்தது உன் செய்தி ஐயா

மண் மகிழ : 22.07.1970

கண் மகிழ : 29.03.2013

புனித பூமியில் உதித்தவனே
புலம்பெயர் மண்ணிலும் புகழ்பூத்தவனே
இன்று உமக்கு இறுதி விடை கொடுக்கின்றோம் ஐயா!
உன் உடல் கலைந்த போதும்
உன் நினைவுகளை சுமந்து கொள்வோம்
உன் நினைவுகள் நீட்சி பெறும்
எம் சந்ததியும் .........

ஞாலத்துணையிழந்து பரிதவிக்கும் உன் மனைவி பிள்ளைகளுக்கும் தாய் சகோதரர்களுக்கும் உற்றார், உறவுகளுக்கும் அமைதி சொன்னோம்.

அமைதி கொள்...

-தில்லையப்பதி நெஞ்சங்கள்

(சி-2900)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வாதத்திக்கு மருந்து

ஒரு ஊரிலே பெரியவர் இருந்தார். அவர் பார்வையிழந்தவர். வாதாடுவதிலே சாலச் சிறந்தவர். தர்க்கத்திலே மேதை.

அவரிடம் சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர் சொன்னார்;

"சூரியன் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. சந்திரன் ஒளியைக் கொடுக்கிறது. விண்மீன்கள் மின்னி மின்னி பிரகாசிக்கிறது. வெளிச்சம் இருப்பதால்தான் நமக்கு எவ்வளவோ உபயோகமாக இருக்கிறது" என்றார்.

உடனே பார்வை இழந்த அந்தப் பெரியவர்; வெளிச்சம் என்ற ஒன்று உண்மையிலேயே இருக்கிறதா?" என்றார்.

"உண்மையிலேயே ஒளி இருக்கிறது!" என்றார்.

"நான் அதை நம்பமாட்டேன்" என்று கூறினார்.

"சூரியன்... சந்திரன்... நட்சத்திரம்... இவையெல்லாம் இருக்கிறதாகச் சொன்னார்கள்"

அதையெல்லாம் ஒப்புக் கொள்கிறேன். ஆனால்... அதையெல்லாம் என்னை சற்றுத் தொட்டுப் பார்க்க விடுங்கள்" என்றார்.

"அவற்றினை தொட்டு அறிய முடியாது" என்றார்.

"அப்படியென்றால்... முகர்ந்து அறிகிறேன். முகர்ந்து பார்க்க விடுங்கள்... ஏதாவது வாசனை வருகிறதா... என்று பார்க்கிறேன்" என்று சொன்னார்.

"அதுவும் முடியாது" என்றார்.

"சரி... அதுவும் முடியவில்லையென்றால், அந்த வெளிச்சத்திலே சிறிதளவு எடுத்து என் கையிலே கொடுங்கள். வாயிலே போட்டு விழுங்கி ருசித்துக் கொள்கிறேன்" என்றார்.

அவரை எந்த வகையிலேயும் ஒப்புக்கொள்ள வைக்க முடியவில்லை.

அவரைச் சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் குழப்பமடைந்தார்கள்.

"என்ன... நாங்கள் சொல்வதை நீங்கள் நம்பவில்லையா?" என்றார்.

என்னுடைய நான்கு புலன்களுக்கும் புலப்படாத ஒன்றை நான் "மாயை" என்கிறேன். நீங்கள் என்னை அவமானப் படுத்துவதற்காக இப்படிச் சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

ஏதோ உங்களுக்கெல்லாம் "பார்வை" இருப்பதாகவும்... அது எனக்கு இல்லை என்று சொல்லி நீங்கள் அவமதிக்கிறீர்கள்" அப்படியென்றார் தர்க்க சாஸ்திரத்திலே மேதையான அந்தப் பெரியவர்.

சுற்றியிருந்தவர்கள் பார்த்தார்கள்... "வெளிச்சம் இருக்கிறதை இவர் நம்ப வேண்டும்... இவரை நம்ப வைக்க வேண்டுமென்றால்... அது புத்தராலேதான் முடியும்" என்று கூறினார்கள்.

"சரி அவரிடம் போவோம்" என்று எல்லோரும் முடிவெடுத்து போய்ச் சேர்ந்தார்கள்.

புத்தரிடம் விபரத்தை எடுத்துரைத்தார்கள்.

புத்தர் சிரித்தார். உண்மை எப்படிப்பட்டது என்று நான் நினைக்கிறேனோ அப்படித்தான் அவரும் நினைக்கிறார். எதையும் அனுபவபூர்வமாக உணர்ந்தால்தான் நம்பமுடியும்.

"ஒளியை அனுபவித்து அறியாத வரையில் அது இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லை. அதனாலே இவர் அதை நம்பாததும் சரிதான்" என்று கூறினார்.

அதன்பின் சொன்னார்; "உங்களைக் குணப்படுத்தி விடலாம்... உங்களுக்குத் தேவை ஞானி அல்ல... மருத்துவர்தான்" என்றார்.

ஒரு வைத்தியரிடம் அழைத்துக்கொண்டு சென்றார்கள். பார்வை கிடைக்கப் பெற்றது... வெளிச்சத்தைக் கண்டதும் அவர் மகிழ்ச்சி அடைந்தார். புத்தரை வணங்கினார்.

"நான் வாதம் செய்தேன்... நீங்கள் எதிர்வாதம் செய்யவில்லை. என்னுடைய பிரச்சினை மருத்துவரால்தான் தீரும் என்று சொல்லி எனக்குப் பார்வை கிடைக்கச் செய்தீர்கள்" என்றார்.

மனித குலத்தின் மிகப் பெரும்பாலானவர்கள் நிலைமை இதுதான் அப்படியென்கிறார் ஓஷோ!

இந்தக் காலத்திலே சில பேர் கண்களைத் திறந்து கொண்டு சில காரியங்கள் செய்வார்கள். அது பிழையென்பது அவர்களுக்குப் பின்புதான் புரியும்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு இந்திய எம்.பிக்கள் குழுவினர் விஜயம்

## பல்வேறு உதவிகளையும் வழங்குவர்

யுத்தத்தினால் பாதிப்படைந்த கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள வர்த்தக நிலையங்களை புனரைமைப்பு செய்வதற்காக இந்திய நாடாளுமன்றக் குழுவினர் 91 மில்லியன் ரூபாவினை வழங்கவுள்ளனர் என யாழிலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய நடாளுமன்றக் குழுவினரின் வடமாகாணத்திற்கான விஜயம் குறித்து யாழிலுள்ள துணைத்தூதரகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தியாவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் மற்றும் இந்திய அரசின் வெளிவிவகார அமைச்சின் உயர் மட்ட திட்டக் கண்காணிப்புக்குழுவின் உறுப்பினர்கள் இருவர் அடங்கிய குழுவொன்று வடமாகாணத்தில் இந்திய அரசால் நடைமுறைப்படுத்தப் படும் அபிவிருத்தி திட்டங்களைப் பார்வையிட எதிர்வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் விஜயம் செய்யவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி முற்பகல் 9 மணி தொடக்கம் 9.30 மணி வரை யாழ். மகேந்திரபுரத்தில் இந்திய அரசாங்கத்தினால் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளைப் பார்வையிடவுள்ளனர்.

இதனையடுத்து முற்பகல் 10 மணி தொடக்கம் 10.45 மணிவரை இந்திய வீட்டுத்திட்டத்தின் 2 ஆம் கட்டத்தில் எழுதுமட்டுவாழில் நிர்மாணிக்கப்படும் வீடுகளை பார்வையிடவுள்ளனர்.

இதனையடுத்து முற்பகல் 11 மணியளவில் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையின் உட்கட்டுமான, பயன்பாட்டுத் தேவைகளை வழங்குவதற்கு என கடந்த பெப்ரவரி மாதம் செய்யப்பட்ட 6 கட்டுமான உடன் படிக்கைக்கு ஏற்ப வேலைகளில் காணப்படும் முன்னேற்றத்தை பார்வையிடவுள்ளனர்.

இந்த அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை இந்திய அரசாங்கத்தின் சுமார் 220 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டைக்கான விஜயத்தினையடுத்து முற்பகல் 11.45 மணி தொடக்கம் நண்பகல் 12.15 மணிவரை குருநகர் பகுதியிலுள்ள வட கடல் வலைத் தொழிற் சாலைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இதனையடுத்து பிற்பகல் 3மணி தொடக்கம் 3.45 மணிவரை இந்திய அரசால் நடைமுறைப்படுத்தப்படும் காங்கேசன்துறைமுக ஆழப்படுத்தும் திட்டத்தின் 3 ஆம் கட்டத்தை பார்வையிடவுள்ளனர்.

இந்திய நாடாளுமன்றக் குழுவினர் யாழ்.மாவட்டத்திற்கான விஜயத்தினை முடித்துக் கொண்டு எதிர்வரும் 11 ஆம் திகதி முற்பகல் 8மணி தொடக்கம் 8.30 மணிவரை இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் பளை பிரதேசத் தின் சோரன்பற்றுக் கிராமத் தில் அமைக்கப்பட்ட வீடு களை பார்வையிடவுள்ளனர்.

இதனையடுத்து முற்பகல் 9. 30 மணி தொடக்கம் 10 மணிவரை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சுதந்திரபுரத்தில் அமைக்கப்பட்டுவரும் இந்திய வீட்டுத் திட்ட வீடுகளை பார்வையிடவுள்ளனர்.

இதனையடுத்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள வர்த்தக நிலையங்களைப் புனரமைப்பு செய்வதற்கான நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவு மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வினை யாழ். இந்திய துணைத்தூதரகம் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனங்களின் இணையத்தினர் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

ஆயிரத்து 230 பயனாளிகள். அதாவது யுத்தத்தால் பாதிப்படைந்த வர்த்தகர்களுக்கு சுமார் 91 மில்லியன் ரூபாவினை இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கவுள்ளனர்.

இதனையடுத்து நண்பகல் 12 மணி தொடக்கம் 1.30 மணிவரை கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் உள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் இயந்திரவியல் பீடம் மற்றும் விவசாயபீடத்தின் திறன்விருத்தித்துறைக்கான கட்டுமாணப் பணிகளையும் பார்வையிடவுள்ளனர் என யாழிலுள்ள இந்தியத் தூதரகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இந்திய பாராளுமன்றக் குழுவில் சௌகத்தா றோய், பிரகர் ஜவதேகர், சந்தீப்திகித், அனுராக் தாகூர், தனஞ்ஜய்சிங், மது கௌட்ஜக் உள்ளிட்டோருடன் வெளிவிவகார அமைச்சை சேர்ந்த உயரதிகாரிகளான பி.எஸ். இராகவன், பிமல் ஜீல்கா ஆகியோர் விஜயம் செய்யவுள்ளனர் என அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 60-140 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 180 | 160 | 120 |
| தக்காளி | 100 | 50 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 40 | 50 | 40 |
| கோவா | 60 | 60 | 60 | 60 |
| கரட் | 100 | 80 | 120 | 120 |
| பூசணி | 60 | 30 | 60 | 60 |
| புடோல் | 60 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 100-140 | 80-120 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | -- | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 100 | 80 |
| லீக்ஸ் | 120 | 110 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 60 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 450 | 400 | 400 | -- |
| போஞ்சி | 120 | 70 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | 30 | -- |
| கீரை – 1 பிடி | 20 | 15-20 | 40 | 20 |
| தேசிக்காய் | 60 | 50 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40-50 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 100 |

# இராசி பலன்

08.04.2013
(மார்கழி 26, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
திரியோதசி பிற்பகல் 3.49 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 8.33 மணிவரை
இராகுகாலம் 7.37-9.07 மணிவரை
சுபநேரம் 12.07-1.37 மணிவரை
நான்காம் பங்குனித் திங்கள்

**மேடம்** தொழில் முன்னேற்றம் கருதி வெளியூர் பயணங்கள் என்பன மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், கொடுக்கல் வாங்கல்களில் அக்கறை காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**இடபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**மிதுனம்** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தூரதேச செய்திகள் மகிழ்ச்சி தரும், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள், மங்கையர்களால் ஏற்பட்ட மனக்கலக்கம் மாறும், பயணங்களால் பலனுண்டு, தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு.

**சிங்கம்** சஞ்சலங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளை கண்டும் காணாமல் இருப்பது நல்லது, விரயங்கள் தவிர்க்க இயலாமல் போகும், கௌரவமான சம்பவங்கள் ஏற்படும்.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**துலாம்** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தேக நலனில் புத்துணர்வு தென்படும் நாள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வ புண்ணிய கருமங்களில் அதிக கவனம் செலுத்துவீர்கள்.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள், வரம்தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும் நாள்.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு பலன் பெற வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

**கும்பம்** பொருட் சேர்க்கைக்கு அத்திவாரம் இடுவீர்கள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் நடைபெறலாம், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், விரதங்களில் நம்பிக்கை கூடும்.

**மீனம்** திடீர் பயணங்களால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், எப்படி நடக்குமோ நினைத்த காரியங்கள் நல்ல படியாக நடைபெறும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலீட்டாளர் தினம் -2013
# யாழில் பயனுள்ள வகையில் நிறைவு

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற முதலீட்டாளர் தினம் 2013 நிகழ்வு சுமார் 150இற்கும் அதிகமான பங்குபற்றுநர்களுடன் வெற்றிகரமாகவும் பயனுள்ள வகையிலும் நடைபெற்றது.

கொழும்பு பங்கு சந்தையின் யாழ்ப்பாணக் கிளை மற்றும் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் மூலம் இந்த முதலீட்டாளர்கள் தினம் 2013 நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மூலதனச் சந்தையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாக வடக்கு பிராந்தியத்தை சேர்ந்த மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில், 2013ஆம் ஆண்டு இலங்கையின் நிதிநிலை அறிக்கையில் மூலதனச் சந்தைக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளைத் தொடர்பு படுத்தி யாழ்.பல்கலைக்கழக பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சந்திரசேகரமும்,

பங்குச்சந்தை முதலீடுகள் தொடர்பாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ். கிளை முகாமையாளர் மு.திலீபனும் கருத்துரை வழங்கினர்.

இதில் யாழ்ப்பாணத்திலுள்ள 8 இற்கும் மேற்பட்ட பங்குத் தரகு நிறுவனங்களின் முதலீட்டு ஆலோசகர்கள் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர்.

இதில் கருத்துரைத்த யாழ்.பல்கலைக்கழக பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சந்திரசேகரம்,

முதலீட்டுக்கு அடிப்படை சேமிப்பு. 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் பல வங்கிகளும் நிதி நிறுவனங்களும் வடக்கிற்கு குறிப்பாக யாழ்ப்பாணத்தில் போட்டிபோட்டுக் கொண்டு தமது கிளைகளைத் திறந்து வருகின்றன.

அவர்கள் இங்கு வைப்புக்களைத் திரட்டியதுடன் ஒப்பிடும்போது கடன் வழங்கியது குறைவு. இதனாலேயே இங்குள்ள பணம் தென்பகுதிக்கு செல்கின்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக முன் வைக்கப்படுகிறது.

எம்மவர்கள் சிறந்த முதலீடு என நினைத்து நிலையான வைப்புக்களில் கொண்டு சென்று முதலிடுகிறார்கள். இதன் வட்டி வீதம் அதிகம் என நினைக்கிறார்கள். குறித்த சில வருடங்களின்பின் அதன் உண்மைப் பெறுமதியைப் பார்த்தால் வீழ்ச்சியடைந்தே காணப்படும். இது பண வீக்கத்தின் விளைவால் ஏற்படுவது இந்த விடயத்தை நாம் கவனிப்பது இல்லை.

இந்நிலையில் நாம் எமது முதலீட்டை நிதி நிறுவனங்களில் மட்டும் தங்கியிராது பன்முகப்படுத்த வேண்டும்.

எமது சேமிப்பின் அல்லது முதலீட்டின் ஒரு பகுதியை பங்குச் சந்தையில் முதலிட முடியும்.

இங்கு நாம் ஒரு பங்கை வாங்கின், அந் நிறுவனத்தின் பங்குதாரர் ஆகிறோம். எமது முதலீட்டைக் கொண்டு தொழில் நடக்கிறது. நேரடியாக எமது முதல் அங்கு பயன்படுகிறது. அத்துடன் மேலும் பல சாதகமான அம்சங்கள் உண்டு. அத்துடன் பாதகமான அம்சங்களும் இருப்பதையும் கவனிக்க வேண்டும்.

இதேவேளை, 2013 வரவு செலவுத் திட்டத்தை நோக்கின், நிதிச் சந்தைக்கு பல்வேறு சலுகைகளை அது வழங்கியுள்ளது.



சிறிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நம்பிக்கை நிதியக் கம்பனிகளின் வரிகளை குறைத்ததைக் குறிப்பிடலாம்.

அத்துடன் சக்தி வள நிறுவனங்களின் வரி குறைக்கப்பட்டது. கட்டுமான நிறுவனங்களின் வரி குறைக்கப்பட்டமை என்பனவும் குறித்து சொல்லக் கூடியவை.

அதேவேளை, ஒரு முதலீட்டாளர் தனது முதலீட்டை தெரிவு செய்யும் போது,

முதலீட்டுக்கான பாதுகாப்பு என்ன?, வருமானம், திரவத்தன்மை அதாவது இலகுவில் வாங்கி விற்கக்கூடிய தன்மை எவ்வாறு உள்ளது?

இடர் அளவு என்ன?, வருமான வரி எவ்வளவு என சில விடயங்களை அவதானித்தே தமது தீர்மானங்களை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.



இந்நிகழ்வில் அடுத்து கருத்துரைத்த கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ். கிளை முகாமையாளர் மு.திலீபன்,

முதலீட்டு வாய்ப்புகள் குறித்து சில அடிப்படைத் தகவல்களை தெரிவித்தார்.

பங்குச்சந்தை தாண்டியும் பல முதலீட்டு வாய்ப்புகள் காணப்படுகின்றன.

கொழும்பு பங்குச் சந்தையை எடுத்து நோக்கின், இலங்கையில் 29 பங்கு தரகு நிறுவனங்கள் காணப்படுவதுடன், 287 கம்பனிகள் பட்டியல்படுத்தப்பட்ட நிறுவனங்களாக காணப்படுகின்றன.

அண்மையில் ஒரு நிகழ்வில் கருத்து வெளியிட்ட அமைச்சர் சரத் அமுனுகம, 5000 கம்பனிகள் பட்டியல்படுத்த தகுதியுடையவையாகக் காணப்படுகின்றன.

ஆனால் 287 கம்பனிகளே பட்டியல்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவித்திருந்தமையை கவனிக்க வேண்டும்.

பங்குச்சந்தை என்பது எப்போதும் ஏற்ற இறக்கங்களுடன் கூடியது. இந்த விடயத்தை கவனிக்க பலர் தவறிவிடுகின்றனர்.

எப்போதும் புதிய முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையின் போக்குகளை தொடர்ந்து சில மாதங்களாயினும் அவதானித்து தெளிந்து கொண்டு முதலீட்டு ஆலோசகர்களின் ஆலோசனைகளுடன் முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.






# தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 450 ரூபாயாக அதிகரிக்க ஒப்பந்தம்

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் 450 ரூபாயாகவும் மொத்தச் சம்பளம் 620 ரூபாயாகவும் வழங்க புதிய கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டது.

ராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை தோட்ட முதலாளிமார் சம்மேளன அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

முதலாளிமார் சம்மேளனத்துடன் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் மலையக தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ், தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் மற்றும் பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி என்பன பேச்சுவார்த்தை நடத்தின.

இதன்படி தோட்டத் தொழிலாளர்களுக்கான அடிப்படை நாள் சம்பளம் 450 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டதுடன் கடந்த முறையிலும் பார்க்க 70 ரூபாய் அடிப்படை நாள் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதுதவிர விலைப்பங்கு கொடுப்பனவாக 30 ரூபாயும் ஊக்குவிப்பு கொடுப்பனவாக 140 ரூபாயும் வழங்கப்படவுள்ளது.

இதன்படி மாதம் 75% வரவை பதிவு செய்யும் தோட்டத் தொழிலாளி ஒருவர் நாள் சம்பளமாக 620 ரூபாயைப் பெறுவார்.

# சிஐஐ புதிய தலைவர் கோபாலகிருஷ்ணன்



நடப்பு நிதியாண்டுக்கான (2013/2014) இந்திய தொழில் கூட்டமைப்புத் தலைவராக இன்போசிஸ் நிறுவனத்தின் நிறுவுனர்களில் ஒருவரான எஸ்.கோபாலகிருஸ்ணன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கோத்ரேஜ் குழுமத் தலைவர் ஆதி கோத்ரேஜுக்கு பிறகு இவர் அந்த பொறுப்பை ஏற்கிறார்.

ஐஐடி முன்னாள் மாணவரான கோபாலகிருஸ்ணன், ஐஐஎம் நிர்வாகக் குழுவில் இடம்பெற்றுள்ளார். பத்மபூஷண் விருதும் இவருக்கு கிடைத்துள்ளது. இவர் சமீபத்தில் ஆசியாவில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவன தலைமை செயல் அதிகாரிகளில் முதலிடம் பெற்றார்.

# இலங்கையின் மொத்த ஏற்றுமதி ஜனவரியில் 18.2 வீதத்தால் சரிவு

இலங்கையின் மொத்த ஏற்றுமதி 2012 ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், கடந்த ஜனவரி மாதத்தில் 18.2 சதவீதத்தால் சரிவடைந்ததாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய ஜனவரி மாதத்தில் மொத்த ஏற்றுமதி 726.7 மில்லியன் ரூபாயாக பதிவாகியிருந்ததாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆடை ஏற்றுமதித் துறையானது 8.9 வீதம் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், இதன் பெறுமதி 333.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது.

தேயிலையை பொறுத்தமட்டில் 2.8 வீழ்ச்சி காணப்பட்டது. இறப்பர் உற்பத்திகள் 19.8 வீழ்ச்சியையும், உணவு மற்றும் பான வகைகள், புகையிலைத் தயாரிப்புக்கள் போன்றன 40 சதவீத வீழ்ச்சியையும் பதிவு செய்திருந்தன.

இதே காலப்பகுதியில் நாட்டின் மொத்த இறக்குமதி 21.3 வீத வீழ்ச்சியை பதிவு செய்திருந்ததாகவும், இதில் நுகர்வோர் பொருட்கள் 14 வீத வீழ்ச்சியை பதிவு செய்திருந்ததென மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருட்களின் இறக்குமதி 47.6 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், இதற்குப் பிரதான காரணமாக, நீர் மின்சார உற்பத்தி அதிகரித்துள்ளமையால் அனல் மின் உற்பத்தி பெருமளவு குறைக்கப்பட்டுள்ளமை அமைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மின்கட்டண அதிகரிப்பு அறிவிப்பால் பாவனை குறைகிறது?

மின்கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளமை தொடர்பில் கடந்த மாதம் வெளியாகியிருந்த அறிவித்தலைத் தொடர்ந்து, மின் பாவனை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

நீரேந்து பகுதிகளில் கடந்த சில வாரங்களில் கிடைத்திருந்த போதியளவு நீர்வீழ்ச்சியின் காரணமாக, நீர் மின்சார உற்பத்தி தற்போது அதிகரித்துள்ளதாகவும், இதன் காரணமாக அனல் மின்சார உற்பத்தியை தம்மால் குறைக்க முடிந்துள்ளதாகவும் இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்தைப் பொறுத்தமட்டில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், மின்சார உற்பத்தி 0.6 சதவீதத்தால் அதிகரித்து 987 கிகாவோற் மணித்தியால அலகுகளாக பதிவாகியிருந்தது. 2011-ம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து போதியளவு மழை வீழ்ச்சியின்மையால் இலங்கை மின்சார சபை நாட்டின் மின்சாரத் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் அதிகளவு அனல் மின் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன்காரணமாக தொடர்ச்சியாக குறுகிய காலப் பகுதியினுள் மின்கட்டணங்கள் அதிகரித்த வண்ணமுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,735.68 | 5,765.94 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,293.57 | 3,312.53 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 4,626.86 |

**[illegible]** சிலோன் லெதர்(W)(3.30), கென்வீனியன்ஸ் பூட்(183.30), யூனியன் வங்கி(22.10), சிலோன் லெதர்(W)(3.10), சிலோன் லெதர்(79.50).

**[illegible]** சிலோன் பிறிண்டேர்ஸ்(811.00), செரண்[illegible] (166.00), பிசிஎச் ஹோல்டிங்ஸ்(4.90), ஏசிஎல் பிளாஸ்ரிக்(83.50), [illegible] ஹோல்டிங்ஸ்(133.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 124.33 | 127.38 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 188.77 | 194.30 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 159.89 | 165.24 |
| சுவிஸ் பிராங் | 131.26 | 136.34 |
| கனேடிய டொலர் | 121.97 | 126.43 |
| அவுஸ்திரேலிய டொலர் | 128.53 | 133.48 |
| சிங்கப்பூர் டொலர் | 99.71 | 103.18 |
| ஜப்பான் யென் | 1.27 | 1.32 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.29 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.29 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங். தமிழர்களுக்கு ஆதரவாக ஆசிரியர்கள் உண்ணாவிரதம்

(நெல்லை)

இலங்கையில் தனிஈழம் அமைக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை போர் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும். ஈழ தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு தொடக்கநிலை பாடசாலை ஆசிரியர் கூட்டணி, அனைத்து ஆசிரியர் கூட்டமைப்பு, அனைத்து ஆசிரியர் சங்கம் ஆகியவை இணைந்து பாளை மார்க்கெட் திடலில் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தினை மேற்கொண்டனர்.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை அனைத்து ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் கிப்சன், அனைத்து ஆசிரியர் கூட்டமைப்பு உயர்நிலை குழு உறுப்பினர் செல்வகுமார், ஆரம்பப்பாடசாலை ஆசிரியர் கூட்டணி நகர செயலாளர் ஜார்ஜ் இனிகோ ஆகியோர் தலைமையேற்றனர்.

அனைத்து ஆசிரியர் கூட்டமைப்பு மாவட்ட செயலாளர் அரிகரன், மாநில தலைவர்கார்த்திகேயன், ஆரம்பப்பாடசாலை ஆசிரியர் கூட்டணி வட்டார தலைவர் வேல்முருகன், செயலாளர் கிறிஸ்டோபர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டதுணை செயலாளர் சத்தியமூர்த்தி அனைவரையும் வரவேற்று உரையாற்றியதுடன் தமிழர் நல உரிமை இயக்கத் தலைவர் அறிவரசன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார். இவ் உண்ணாவிரதத்தில் பல்வேறு ஆசிரியர் சங்கங்களின் நிர்வாகிகள், ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் பல்வேறு அமைப்புக்களை சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நேற்று மாலை உண்ணாவிரதத்தை பேராசிரியர் தொ.பரமசிவன் முடித்து வைத்தார். (அ-5)

# நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குக!

(கொழும்பு)

நாட்டு மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

பொருட்கள் சேவைகளுக்கான விலைகள் உயர்வடைந்துள்ளதாக கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

கண்டியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள புதுவருடத்தின் ஆரம்பத்திலேயே மக்கள் அதிக நெருக்கடிக்கு முகம் கொடுத்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு பொருட்கள் சேவைகளின் விலை ஏற்றங்களால் மக்கள் இந்த முறை நெருக்கடியான சூழலிலேயே தங்களின் புதுவருடத்தை ஆரம்பிப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)




**ST.JOHN'S COLLEGE, JAFFNA,**
**CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA**
**MERIT SCHOLARSHIP AWARD-G.C.E.(A/L)-2015 BATCH**

(ஆங்கில/தமிழ் மொழிமூலம்)

2012 O/L எடுத்து 2015 BATCH இல் க.பொ.த. (உ/த) எடுக்க இருக்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.பெயர்:..........................................................
2.2012 இல் O/L எடுத்த பாடசாலை..........................................
3.க.பொ.த. (உயர் தரத்தில்) பயில விரும்பும் துறை: கலை/ வர்த்தகம்/ உயிரியல்/ கணிதப்பிரிவு
4.பயில விரும்பும் மொழி: ஆங்கிலம்/தமிழ்
5.தந்தையார் தொழில்:..............................
தாயார் தொழில்:..................................
6.குடும்பவிபரம்:...............................................
7. விலாசம்:..................................................

அதிபரால் உறுதி செய்யப்பட்ட பிறப்புச்சான்றிதழ் போட்டோ பிரதியும் O/L பெறுபேற்றுச் சான்றிதழ் போட்டோ பிரதியும் இணைக்கப்படவேண்டும்.

விண்ணப்பங்கள் 10.04.2013 முன்னர் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆண்கள்: அதிபர், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.
பெண்கள்: அதிபர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

அதிபர்கள்

# வடக்கு தேர்தல் குறித்து மக்களுக்கு விளக்கம்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாணசபைத் தேர்தல் குறித்து மக்களுக்கு விளக்கம் அளிக்கப்படவுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் வடக்கில் தேர்தல் நடத்தப்படவுள்ளதாகவும் இதற்கான ஆரம்பப் பணிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் மாகாணசபைத் தேர்தல் நடைபெறாத காரணத்தினால் பிரதேச மக்களுக்கு அது குறித்து தெளிவுபடுத்தப்பட உள்ளதாக பவ்ரல் சுட்டிக்காட்டியுள்ளது.

வாக்களித்தல், தெரிவுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மன்னார் உள்ளிட்ட சில மாவட்டங்களில் ஏற்கனவே தேர்தல் தொடர்பில் விளக்கம் அளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-2)

# சிகரெட்டுக்களை கடத்திய இருவருக்கு 67 கோடி தண்டம்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு சிகரெட்டுக்களை இறக்குமதி செய்த இருவருக்கு 67 கோடி ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

சுங்கத் திணைக்களம் கடந்த 5 ஆம் திகதி மேற்கொண்ட தேடுதலின் போது சட்டவிரோத சிகரெட்டுக்கள் அடங்கிய கொள்கலன் ஒன்று கைப்பற்றப்பட்டது.வரிப் பணம் செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட பத்தரைக் கோடி ரூபா பெறுமதியான 45 இலட்சம் சிகரெட்டுக்கள் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இக் கொள்கலன் இறக்குமதி செய்த நாத்தான்டிய மற்றும் கொழும்பைச் சேர்ந்த இருவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியவேளை ஒருவருக்கு மூன்றரைக் கோடி ரூபாய் படி தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தண்டப்பணத்தை செலுத்த தவறியமையின் காரணமாக இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# கலந்துரையாடல்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை தமிழ்ப் பாடம் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்குமான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளத்திலுள்ள துணுக்காய் கல்வி வலயத்தின் கணனி வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக் காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (அ-3-15)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 3,<br>8 இல் செவ்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: IT Diploma<br>வியாபாரம் UK Student visa)<br>தொ.இ: B -1563 | பிறப்பு: 1969 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>உயரம்: 5'<br>கி.பா: 37, 2 இல் செவ்<br>தகைமை/ தொழில்: Doctor<br>விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: G -955 |
| பிறப்பு: 1981இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>உயரம்: 5'7"<br>கி.பா: 43, 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L, Election<br>அரசதொழில்<br>தொ.இ: B -1566 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 1,<br>8இல் செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/ தொழில்: MSc in Pharmacy (UKPR)<br>தொ.இ: G-1599 |
| பிறப்பு: 1983 றோ.க (குருகுலம்)<br>நட்சத்திரம்: பரணி 4, 2 இல் செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/ தொழில்: பல் வைத்தியர்<br>தொ.இ: B -1567 | பிறப்பு: 1989 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>உயரம்: 5'5"<br>கி.பா: 32,12 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>ஆசிரிய்ய<br>தொ.இ: G -1600 |
| பிறப்பு: 1985 றோ.க குருகுலம்<br>நட்சத்திரம்: திருவோணம் 1,<br>2இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: வைத்தியர்<br>தொ.இ: B -1568 | பிறப்பு: 1984 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>உயரம்: 5'1"<br>கி.பா: 11.75<br>தகைமை/ தொழில்: O/L<br>விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: G -468 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பொதுநூலகத்திற்கு காணி பெற்றுக் கொள்ள முடிபு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட சாவகச்சேரி பொதுநூலகத்திற்கு மேலதிக கட்டட வசதி தேவை எனவும் அதற்காக நூலகத்தை அடுத்துள்ள வெற்றுக்காணியை பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நகராட்சி மன்றத்தின் கீழுள்ள நூலகங்களுக்கான அபிவிருத்தி ஆலோசனை சபையினர் ஏகோபித்த தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர்.


நேற்று முன்தினம் சனிக்கிழமை பிரதம நூலகர் தலைமையில் நடைபெற்ற நூலக அபிவிருத்தி ஆலோசனை சபைக் கூட்டத்தில் உறுப்பினர்களால் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தற்போதுள்ள நூலகத்தில் இடவசதிகள் போதாமையினால் நூலகத்தின் பல்வேறு பகுதிகள் நெருக்கமாக அமைந்துள்ளன.

இதனால் மாணவர்களும் வாசகர்களும் சிறுவர்களும் பெரும் அசௌகரியங்கள் மத்தியிலேயே தமது நூலக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

இதனையடுத்து பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் நூலக அபிவிருத்தி ஆலோசனை சபை உறுப்பினர்களிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே மேற்படி காணியை நூலகத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

நன்றி: ஐலண்ட்




# தீவக வலயத்தின் தமிழ்த்தினப் போட்டி

(வேலணை)

தீவகக் கல்வி வலயத் தமிழ்த் தினப் போட்டிகள் எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

10 ஆம் திகதி புதன்கிழமை வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, பேச்சு, பாவோதல், இசைவும் அசைவும், வில்லுப்பாட்டு, விவாதம், தமிழறிவு, வினாவிடை என்பனவும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை இசை (தனி), இசை (குழு), நடனம், தனி நடனம், குழு நடனம், நாட்டிய நாடகம், நாட்டார் பாடல், மேடை நாடகம் என்பனவும் இடம்பெறும் எனத் தீவகக் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ் அறிவித்துள்ளார். (ந)

# மத்தியஸ்த சபை முற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

பிரதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று வரும் நல்லூர் மத்தியஸ்த சபை மாநாடு புத்தாண்டு காரணமாக எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறமாட்டாது.

இத்தினத்திற்கு பதிலாக எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை வழமை போல் இம்மாநாடு இடம்பெறும் என மத்தியஸ்த சபை தவிசாளர் நா.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (அ)


# பேருந்துகள் தரிப்பிடத்திற்குள் மிதிவண்டிகள் நிறுத்தப்படுகின்றன

(கரணவாய்)

நெல்லியடி பேருந்து தரிப்பிட வளாகத்தினுள் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டிகளை நிறுத்துவதால் பயணிகள் தரித்து நின்று பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையால் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்ட மேற்படி சாலை வளாகத்தினுள் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டிகள் ஆகியவற்றை நிறுத்துவதால் பேருந்துகளில் பயணம் செய்வதற்காக தரித்து நிற்கும் பயணிகள் இடநெருக்கடிகளை தாம் எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இந்நிலையை கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டிகளை பேருந்து சாலை வளாகத்தில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென



பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-60)




# கிராமக்கோடு சந்தியில் புத்தாண்டு சந்தை

(தும்பளை)

சதொச விற்பனை நிறுவனத்தினால் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தரால் நடத்தப்படும் திவிநெகும புத்தாண்டு விழா எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் புலோலி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு அருகாமையிலுள்ள கிராமக்கோடுச் சந்தியில் நடைபெறவுள்ளது.

இதன்போது உள்ளூர் உற்பத்திப் பொருட்கள், தைத்த ஆடைகள், கடலுணவுகள், மட்பாண்டங்கள், அலுமினிய பொருட்கள் ஆகியன விற்பனை செய்யப்படுவதுடன் புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சதொச விற்பனை நிலையம் ஆகியனவற்றிலும் விற்பனை செய்யப்படவுள்ளன.

இதன்போதே சதொச விற்பனை நிலையம் ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருட்களை ஆயிரம் ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படவுள்ளது. (அ-3-19)

# புதுவருடத்தை முன்னிட்டு வசந்தவிழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு வலி. வடக்கு கலாசார பேரவையினரால் நடத்தப்படும் வசந்த விழா (பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்) எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் உள்ள சந்திர மௌலீஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெறுமென தெல்லிப்பழை பிரதேச செயலாளர் கே.ஸ்ரீ மோகனன் அறிவித்துள்ளார்.

இதில் தயிர் முட்டி உடைத்தல், போர்த் தேங்காய் அடித்தல், மரதன் ஓட்டப் போட்டி, கைக்கொடிச் சவாரி, பலம் பார்த்தல் ஆகிய பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மேற்குறித்த போட்டிகளில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்டவர்கள் மட்டுமே பங்கேற்க முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இவ்விளையாட்டுக்களில் பங்கேற்க விரும்புவர்கள் தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பப் படிவங்களை பெற்று அதனைப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியுமென அவர் அறிவித்துள்ளார். (அ-2)

# சந்தை தராசுகளுக்கு முத்திரையிடப்படவில்லை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மீன் சந்தையில் முத்திரையிடப்படாத தராசுகளை பயன்படுத்தி மீன் வியாபாரம் செய்யப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

தராசு மற்றும் படிகள் புதுப்பிக்கப்படாத நிலையில் ஒரு சில மீன் வியாபாரி மீன் விற்பனை செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

மீன் வியாபாரம் செய்கின்றபோது தராசுப் படிகளோடு 2 கூடை மீனையும் வைத்து மீனை நிறுப்பதனையும் காண முடிகின்றது. இதனால் நுகர்வோர் பெரும் விசனம் அடைகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நுகர்வோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-10)




வர்த்தன வங்கியின் நெல்லியடிக் கிளை நேற்றுக் காலை 9.45 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் ஆராத்தி எடுத்து வரவேற்கப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வர்த்தன வங்கியின் நிறைவேற்று அதிகாரி லக்ஸ்மன் சில்வா நாடாவை வெட்டி கட்டடத்தை திறந்து வைப்பதனையும் வங்கியின் முதலாவது சேமிப்பு கணக்கினை பிரபல வர்த்தகர் எஸ்.பிரேம்குமார் ஆரம்பித்து கணக்குப் புத்தகத்தினை நிறைவேற்று அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்வதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசும் கூட்டமைப்பும் ஒற்றுமையுடன் செயற்படுவதே நாட்டுக்கு நல்லது

## அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் பிரதான இரு பாத்திரங்களை வகிக்கும் அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒற்றுமையுடன் செயற்படாவிட்டால் பிரச்சினைகளுடன் வாழ வேண்டிய நிலை ஏற்படும் என சிரேஷ்ட அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுக்கின்றது. அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டும் பேசுவதற்கு அரசாங்கம் மறுக்கின்றது. எனவே அரசியல் தீர்வு காணும் விடயத்தில் மாற்று வழியொன்று அவசியம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருவதற்கு மறுக்கின்றது. அப்படியானால் தீர்வை நோக்கிப் பயணிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லையோ என்ற சந்தேகம் எழுகின்றது.

அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் அங்கம் வகிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங் கேற்க வேண்டும். இல்லையேல் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியாது. பிரச்சினைகளுடன் வாழ வேண்டிய நிலையே உருவாகும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விரும்பவில்லை. அவர்கள் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தவே முன்வருகின்றனர். எனினும் அரசாங்கம் அனைத்துக் கட்சிகளுடனும் பேசித்தீர்வைக் காண முயற்சிக்கின்றது. இருதரப்புக்குமிடையில் பொதுவானதொரு இணக்கப்பாடுஏற்படமாற்றுத் தீர்வுப் பொறிமுறையொன்று அவசியம் .

அதேவேளை அரசாங்கத்துடன் காணப்படும் இணக்கப்பாடுகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னிலையில் வைக்கும் போது அதில் பங்கேற்பது குறித்து ஆராய லாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரி வித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# உயர் அதிகாரிகள் இருவர் கைது

தேசியபோக்குவரத்துஆணைக்குழுவின் உயர் அதிகாரிகள் இருவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நியதிகளுக்கு புறம்பாக பாதை போக்குவரத்து சான்றிதழை வழங்குவதற்காக பணம் பெற்றுக் கொள்ள முயற்சித்துள்ளனர்.

1.5 மில்லியன் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் குறித்த இரண்டு அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர். (அ-2)

# சிறப்பு பட்டிமன்றம்

யாழ்.பட்டிமன்றக் குழு வழங்கும் சிறப்புப் பட்டிமன்றம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 8 மணிக்கு துன்னாலை வில்லியானந்த பிள்ளையார் கோவிலில் இடம்பெறவுள்ளது.

சொல்வேந்தர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறும் இச்சிறப்புப் பட்டிமன்றம் "இன்றைய சமூகச் சீரழிவுகளுக்கு பெரிதும் காரணமானவர்கள் பெரியோர்களா? இளையோர்களா?" என்ற விவாதப் பொருளில் இடம்பெறவுள்ளது. (செ-5)

# தமிழக அழுத்தங்களுக்கு எதிராக இந்தியாவில் பாரிய போராட்டம்

(சென்னை)

தமிழக அழுத்தங்களுக்கு எதிராக இந்தியாவில் பிக்குகள் முன்னணியால் பாரிய போராட்டம் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மஹாராஸ்டிர மாநிலத்தின் நாக்பூர் நகரில் எதிர்வரும் 13ஆம் திகதி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது இந்திய பிரதமர், குடியரசுத் தலைவர், மாநில முதலமைச்சர் உள்ளிட்ட பலருக்கு இந்த போராட்டத்தின் போது மகஜர்கள் ஒப்படைக்கப்படவுள்ளன.

இந்தியாவில் அதிகளவிலான பௌத்தர்கள் மஹாராஸ்டிர மாநிலத்தில் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர்

## மாதுலுவே சோபிததேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் பொதுவான வேட்பாளர் ஒருவரை நிறுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக மாதுலுவே சோபித தேரர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஆண்டு அல்லது 2015 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதாகவும் இதில் எதிர்க்கட்சிகளின் சார்பில் பொதுவான வேட்பாளர் ஒருவரை நிறுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆளும் கட்சிக்கு முன்னதாகவே பிரசாரப் பணிகளை ஆரம்பிக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

நாட்டுக்கு அழிவை ஏற்படுத்தியுள்ள அரசியல் அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வேட்பாளர் ஒருவரை நியமிக்க பொதுவான வேட்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

பொது அமைப்புக்களும் எதிர்க்கட்சிகளும் சிவில் செயற்பாட்டாளர்களும் இவ்வாறு பொதுவான வேட்பாளர் ஒருவரை நியமிப்பதில் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# வீதிகளை மட்டும் புனரமைப்பதால் தமிழர்கள் வாழ்வு மேம்படுமா?

## தம்பர அமில தேரர் தெரிவிப்பு

வடக்கில் மீளக் குடியமர்த்தப்பட்ட தமிழ் மக்கள் இன்னும் பொலித்தீன் கூரைகளால் வேயப்பட்ட குடிசைகளிலேயே வாழ்கின்றனர். யுத்தம் முடிந்து 4 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் அவர்கள் கஷ்டப்பட்ட நிலையிலேயே வாழ்கின்றனர். நெடுஞ்சாலைகளைப் புரனமைப்பதன் மூலம் தமிழர்களது வாழ்க்கை மேம்பட்டுவிடுமா? என ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான தம்பர அமில தேரர் கேள்வியெழுப்பியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிக்க உதவின. அமெரிக்கா தொழில் நுட்பத்தை வழங்கியது. இந்தியா ரேடார் தொகுதிகளை வழங்கியது. இதனால்தான் நாம் யுத்தத்தை வெற்றி கொண்டோம்.

1987 இல் வடமராட்சி சமரின் போது இந்தியா யுத்தத்தை நிறுத்துமாறு கோரியது. ஆனால் இந்தத்தடவை இந்தியா அவ்வாறு செய்யவில்லை.

உலகம் இலங்கைக்குள் இருக்கின்றது என்ற ரீதியில் செயற்படாமல் இலங்கை உலகத்திற்குள் இருக்கின்றது என்ற யதார்த்தத்தைப் புரிந்து செயற்பட வேண்டும். மேலும் பிரபாகரனை விட மோசமான வன்முறைகளில் இந்த அரசாங்கம் ஈடுபடுகின்றது.

பிரபாகரன் இருந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான மோசமான சம்பவங்கள் இடம் பெறவில்லை.

தற்போது கோயில்கள், பள்ளிவாசல் மீது தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. பலசேனாக்களை அமைத்துக் கொண்டு பூசகர்கள், மத குருமார்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

அரந்தலாவ பிக்குகள் கொலையுடன் தொடர்புபட்ட சூத்திரதாரிகளும் இன்று அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

தாக்குதலை நடத்த ஆயுதம் விநியோகித்த கே.பி.யும் இன்று அரசுடனேயே இருக்கிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# மாத்தளை மனித புதைகுழி விசாரணை நடத்த விசேட குழு

## நியமித்தார் ஜனாதிபதி

மாத்தளை மனித புதைகுழி தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விசேட ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

பொலிஸார் நடத்தி வரும் விசாரணைகளை மேலதிகமாக இந்த ஜனாதிபதி விசேட ஆணைக்குழு விசாரணைகளை நடத்தும் என ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமர நாயக்க தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் புதிய கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு குழிகளை தோண்டிய சந்தர்ப் பத்தில் இந்த எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இதில் 150 இற்கும் மேற்பட்ட மனித உடல் எச்சங்கள் மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் மீட்கப்பட்டிருந்தன.

இந்த சடலங்கள் சித்திரவதை செய்யப்பட்ட ஜே.வி.பி உறுப்பினர்களின் சடலங்களாக இருக்கக் கூடும் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

1980களின் கடைக் கூற்றில் இந்த சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என தொல்பொருள் ஆய்வாளர்களால் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையும் இது தொடர்பில் பக்கச் சார்பற்ற சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி கோரிக்கை விடுத்து வருகின்றமையும் கவனிக்கத்தக்கது. (அ-2)



வலிகாமம் வலய பாடசாலைகளுக்கு இடையில் பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் விக்ரோரியாக் கல்லூரியின் துடுப்பாட்ட அணியினர் முதலாவது இடத்தினைப் பெற்றுள்ளதைப் படத்தில் காணலாம்.

# வலய மட்ட தமிழ்த் தினப்போட்டி

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு கல்வி வலய தமிழ் மொழித்தினப்போட்டிகள் இன்றும் நாளையும் வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் இடம் பெறவுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வலயமட்ட போட்டிகள் இன்று திங்கட்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலும் நாளை செவ்வாய்க்கிழமை வவு.இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

எனவே கோட்டமட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் வலய மட்ட போட்டிகளில் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார். (அ-2-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது இனவெறி அல்ல!

நக்கீரன்

இப்போது தேசிய ஊடகங்களில் தமிழர்களின் இனவெறி பற்றி விரிவாகவே விவாதிக்கப்படுகிறது. ஒன்றரை இலட்சம் தமிழர்கள் இலங்கையிலும் 540 தமிழக மீனவர்கள் கடலிலும் கொலை செய்யப்பட்டபோது சிங்கள இனவெறிக்கெதிராக தங்கள் கண்களையும் காதுகளையும் இதயத்தையும் இறுக மூடிக் கொண்டவர்கள் இப்போது தமிழ் இனவெறி பற்றி உரத்த குரலில் முழங்குகிறார்கள்.

முதலாவதாக தமிழகத்தில் இலங்கையிலிருந்து வந்த சில புத்த பிக்குகள் தாக்கப்பட்ட சம்பவத்தையொட்டி தேசிய ஊடகங்கள் உணர்ச்சிவசப்பட்டு எழுதின. இப்போது வரும் ஆறாவது ஐ.பி.எல். போட்டிகளில் சென்னையில் நடக்கும் பந்தயங்களில் இலங்கை வீரர்கள் பங்கேற்கக் கூடாது என்ற மாணவர்களின் கோரிக்கையை தமிழக அரசு ஏற்று இலங்கை வீரர்கள் வருவதற்குத் தடை விதித்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் சென்னையில் இலங்கை வீரர்களை தனது வர்த்தக நலன்களில் பொருட்டு விளையாட அனுமதிப்பதில்லை என்ற முடிவை ஐ.பி.எல். நிர்வாகம் எடுத்துள்ளது. இது பலரையும் கொந்தளிக்க வைத்திருக்கிறது.

இலங்கையில் நூற்றாண்டின் மிகப் பெரிய மனிதப் பேரவலமும் இனப் படுகொலையும் நிகழ்ந்த 2009 ஆம் ஆண்டின் இலங்கை அரசின் ஊதுகுழலாகச் செயற்பட்டதுடன் அந்தப் படுகொலைகள் பொதுமக்கள் பார்வைக்கு வராமல் பார்த்துக் கொண்ட ஹிந்து நாளிதழ் இப்போது எந்தக் கூச்சமும் இல்லாமல் இலங்கை வீரர்களை தடைசெய்தது தமிழர்களின் இனவெறியைக் காட்டுவதாக தலையங்க்ம் எழுதுகிறது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் சோனியா காந்திக்கும் டபுள் ஏஜென்டாக வேலை செய்து வரும் சுப்ரமணியசுவாமி தமிழக அரசின் இந்த முடிவை ஏதோ தேச துரோகக் குற்றம் போல வர்ணித்து தாக்குதல் நடத்துகிறார். இந்த முடிவிற்காக தமிழக அரசை 356 பிரிவைப் பயன்படுத்தி உடனடியாக கலைக்க வேண்டும் என்றும் சென்னையைப் பதற்றப் பகுதியாக அறிவித்து சென்னை சேப்பாக்கம் மைதானத்தை சிறப்பு ஆயுதப் படையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து இலங்கை வீரர்களை வைத்து போட்டிகளை நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அணியின் முன்னாள் கப்டன் அர்ஜுனா ரணதுங்க, சென்னையில் இலங்கை வீரர்கள் விளையாடாவிட்டால் இந்தியாவில் அவர்கள் வேறு எங்குமே விளையாடக்கூடாது என்று ஆவேசத்துடன் பேட்டி அளித்தார். தமிழரான புகழ் பெற்ற இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் இந்த கோஷ்டி கானத்தில் சேர்ந்து கொண்டு பின்வருமாறு சொல்கிறார். இலங்கையில் கடந்த காலத்தில் போர்ச்சூழல் இருந்தது. நான் 20 வருடங்களாக இலங்கைக்கு கிரிக்கெட் விளையாடினேன். எனக்கு அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. தமிழர்களாகிய நாங்கள் நடந்ததை எல்லாம் மறந்துவிட்டு எப்படி அமைதியாக வாழ்கிறோம் என்பதை இந்திய அதிகாரிகள் வந்து பார்க்க வேண்டும்.

இந்தப் பொய்களுக்கு நடுவே சில போலி அமைதிப் புறாக்களின் குரல்கள் வேறு கேட்கின்றன. விளையாட்டையும் அரசியலையும் பிரித்து பார்க்க வேண்டுமென்று வேதம் ஓதுகிறது ஒரு கோஷ்டி. இன்னொரு கோஷ்டி இலங்கையிலிருந்து வந்து விளையாடும் வீரர்கள் ஐ.பி.எல்லில் தனிப்பட்ட மனிதர்களாகத்தான் பங்கேற்கிறார்களே தவிர அந்த நாட்டின் பிரதிநிதிகளாக அல்ல என்று கயிறு திரிக்கிறது. இதில் குஷ்பு இலங்கை வீரர்களை அனுமதிக்க மறுக்கும் தமிழக அரசின் முடிவு தனக்கு வருத்தமளிப்பதாக, என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று தெரியாமலேயே கருத்துச் சொல்லியிருந்தார்.

காலங்காலமாக விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டு வீரர்கள் ஒரு தேசிய அடையாளத்தின் பிரதிநிதிகளாக இருந்து வந்திருக்கிறார்கள். இன்று ஒரு நாடு அமைதியான அரசியல் பொருளாதார சூழ்நிலைக்குள் இருக்கிறது என்பதை உலகிற்குக் காட்ட சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை அங்கே நடத்துவதுதான் முதன்மையான வழிமுறையாக இருக்கிறது. ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்காகவோ அல்லது சர்வதேச விவகாரங்களில் அதன் நிலைப்பாட்டைப் பொறுத்தோ அந்த நாட்டின் மீது அழுத்தம் கொடுப்பதற்கு விளையாட்டுப் போட்டிகள் முக்கிய ஆயுதமாகப் பயன்பட்டு வந்திருக்கின்றன.



தாய்வானை ஒலிம்பிக்குக்காக ஒரு நாடாக அங்கீகரித்ததை எதிர்த்து 1956 இலிருந்து 25 வருடங்கள் சீனா ஒலிம்பிக்கைப் புறக்கணித்தது. 1956 ஆம் ஆண்டில் சோவியத் யூனியனின் ஹங்கேரிப் படையெடுப்பைக் கண்டித்து நெதர்லாந்து, ஸ்பெயின், சுவீடன் போன்ற நாடுகள் ஒலிம்பிக்கைப் புறக்கணித்தன. 1980 ஆம் ஆண்டு மொஸ்கோவில் நடந்த ஒலிம்பிக்கை ஆப்கானிஸ்தானை சோவியத் யூனியன் ஆக்கிரமித்ததைக் கண்டித்து அமெரிக்கா உள்ளிட்ட 62 நாடுகள் புறக்கணித்தன. அதற்குப் பதிலாக 1984 ஆம் ஆண்டு அமெரிக்கா நடத்திய ஒலிம்பிக்கை சோவியத் உள்ளிட்ட 16 நாடுகள் புறக்கணித்தன. 1988 ஆம் ஆண்டு சியோலில் நடந்த ஒலிம்பிக்கை அரசியல் காரணங்களுக்காக வடகொரியா, கியூபா, எதியோப்பியா நாடுகள் புறக்கணித்தன. ஈராக், குவைத்தை ஆக்கிரமித்ததைக் கண்டித்து ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் விளையாட 1990 ஆம் ஆண்டு அந்த நாட்டிற்கு தடை விதிக்கப்பட்டது.

> **பாகிஸ்தான் வீரர்களை தடுத்தால் அது தேசபக்தி. தமிழர்கள் இலங்கை வீரர்களை எதிர்த்தால் அது இனவெறி. உங்கள் போலி நாடகங்களுக்கு ஒரு எல்லையே இல்லையா?**

தென்னாபிரிக்காவின் இனவெறிக் கொள்கைக்காக சர்வதேச சமூகம் நீண்ட காலமாக அதை விளையாட்டுப் போட்டிகளிலிருந்து ஒதுக்கி வைத்ததை நாம் அனைவரும் அறிவோம். மேலும் மொன்றியோல் நகரில் 1976 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக ஒலிம்பிக் போட்டியை ஆபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையை எதிர்த்து 22 ஆபிரிக்க நாடுகள் புறக்கணித்தன.

இந்தியா பாகிஸ்தானோடு எப்போதெல்லாம் கசப்பும் மோதலும் வருகிறதோ அப்போதெல்லாம் அதனுடனான கிரிக்கெட் பந்தயங்களை விலக்கிக் கொண்டிருந்திருக்கிறது. காஷ்மீரில் ஐந்து இராணுவ வீரர்கள் இறந்ததற்காக இந்தியா-பாகிஸ்தான் இடையே 2003 ஏப்ரலில் நடைபெற இருந்த ஹொக்கித் தொடரையும் இந்திய அணி பாகிஸ்தான் போவதற்கான அனுமதியையும் அரசு இரத்து செய்துள்ளது. 2013 ஜனவரியில் இந்திய எல்லையில் இந்திய இராணுவ வீரர் ஒருவர் தலையை அறுத்து கொல்லப்பட்டதற்கு எதிராக இந்தியா ஹொக்கி லீக்கில் விளையாடி வந்த ஒன்பது பாகிஸ்தான் வீரர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். 2013 மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட்டில் பாகிஸ்தான் மகளிர் அணி மும்பையில் ஆட வேண்டிய மூன்று போட்டிகளும் சிவசேனாவின் எதிர்ப்பினால் ஒரிசாவிற்கு மாற்றப்பட்டது.

இவ்வளவு ஏன் ஐ.பி.எல்லின் இலட்சணத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஒரு பைசா பெறாத உள்ளூர் கிரிக்கெட் வீரர்களையெல்லாம் கோடிக்கணக்கான ரூபாய்க்கு ஏலம் எடுக்கும் ஐ.பி.எல் அணிகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து ஒரு பாகிஸ்தான் வீரரைக் கூட வாங்காததன் மர்மம் என்ன? இன்று இலங்கை வீரர்களை அந்த நாட்டின் பிரதிநிதியாகக் கருதக் கூடாது என்பவர்கள் அந்த சலுகையை ஏன் பாகிஸ்தான் வீரர்களுக்குக் கொடுக்கவில்லை? இங்கு பாகிஸ்தான் வீரர்களை தடுத்தால் அது தேசபக்தி. தமிழர்கள் இலங்கை வீரர்களை எதிர்த்தால் அது இனவெறி. உங்கள் போலி நாடகங்களுக்கு ஒரு எல்லையே இல்லையா?

முத்தையா முரளிதரனின் உளறல்களை எடுத்துக் கொள்வோம். மலையகத் தமிழரான முத்தையா முரளிதரனுக்கு அங்கு மலையக மக்கள் இலங்கை அரசாங்கத்தால் காலங்காலமாக எவ்வளவு கொடூரமாக ஒடுக்கப் படுகிறார்கள் என்பதைப் பற்றி எந்த மன உறுத்தலும் இல்லை. சுழல் பந்து வீச்சில் அபூர்வமான ஆற்றல் படைத்த முரளியை இலங்கை அரசாங்கம் தனது தேசிய கிரிக்கெட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டது அவ்வளவுதான். உலகிலேயே அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய பெரும் சாதனையாளராக இருந்தபோதும்கூட அவரால் ஒருமுறைகூட இலங்கை அணியின் கப்டன் பதவியைப் பெற முடியவில்லை. ஐ.சி.சி விருதுக்கு அவர் பல ஆண்டுகளாக தேர்ந்தெடுக்கப்படாமலேயே இருந்தார். அதற்குக் காரணம் இலங்கை கிரிக்கெட் சபை அவர் பெயரை பரிந்துரைக்காமல் இருந்ததுதான்.

உண்மையில் முத்தையா முரளிதரனுக்கு மட்டுமல்ல, டக்ளஸ் தேவானந்தா, கருணா, கே.பி போன்ற தமிழர்களுக்கும் இலங்கை அரசாங்கத்தால் எந்தப் பிரச்சினையும் இல்லைதான். அதனுடைய வெற்றிக்கும் தேசிய பெருமிதத்திற்கும் யாரெல்லாம் துணையாக இருக்கிறார்களோ அந்த தமிழர்களுக்கெல்லாம் அவர்களது அன்பும் பாதுகாப்பும் கிடைக்கும். முரளி இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதையும் பல்லாயிரம் தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளானதையும் குழந்தைகள் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டதையும் கடந்த காலம் என்று எளிதாக மறந்து விடச் சொல்கிறார்.

முத்தையா முரளிதரன் போன்ற தங்கள் சொந்த நலனைத் தவிர வேறெதும் தெரியாத கார்ப்பரேட் விளையாட்டுக்களின் கூலி அடிமைகளுக்கு நடுவே நீதியையும் ஜனநாயகத்தையும் உயர்த்திப் பிடித்த சில விளையாட்டு வீரர்களை நினைக்காமல் இருக்க முடியவில்லை. வியட்நாமில் அமெரிக்கா நடத்திய கொடூரமான யுத்தத்தை கண்டித்து உலகப் புகழ் பெற்ற குத்துச் சண்டை வீரர் முகமது அலி அமெரிக்காவின் கட்டாய இராணுவப் பயிற்சிக்குச் செல்ல மறுத்தார். சிம்பாவேயின் முன்னாள் கிரிக்கெட் வீரரான ஹென்றி ஒலாங்கா தனது நாட்டில் தங்கள் அரசாங்கம் செய்து வந்த மனிதவுரிமை மீறல்களையும் படுகொலைகளையும் கண்டித்து உலகப் போட்டிகளில் கறுப்புப் பட்டை அணிந்து விளையாடினார்.


தமிழர்கள் சென்னையில் எந்த நாட்டு அணி சிறப்பாக விளையாடினாலும் இந்திய அணியை ஆதரிப்பது போலவே ஆதரிப்பவர்கள். சிறிய நாடான இலங்கை கடந்த காலத்தில் கிரிக்கெட் பந்தயங்களில் வெற்றி பெற்ற சந்தர்ப்பங்களில் அதை ஆசிய நாடுகளின் வெற்றியாகவே கொண்டாடியவர்கள்.

இன்று இலங்கை அரசு தமிழ் இனத்தை பேரழிவிற்கு ஆளாக்கியிருக்கும் சூழலில் அதற்கான எந்த சிறிய நியாயத்தையும் வழங்க இந்தியாவும் சர்வதேச சமூகமும் மறுத்துவரும் சூழலில் இலங்கை வீரர்களை எதிர்ப்பது என்பது ஒரு தார்மீக ரீதியான அரசியல் போராட்டமே தவிர அது இனவெறிப் போராட்டமல்ல. அதை இனவெறியாகச் சித்தரிக்க விரும்புகிறவர்களுக்கு ஒன்று அரசியல் தெரியவில்லை. அல்லது அவர்கள் தமிழர்களின் மீது ஆழமான இன வெறுப்பைக் கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தம்.

விளையாட்டு ஒரு அரசியல் கருவி. அது தேசிய அடையாளத்தையும் தேசிய நலன்களையும் வெளிப்படையாகப் பிரதிபலிக்கிறது. தேசிய வெறியை வளர்ப்பதில் அரசியலும் விளையாட்டும் பிரிக்க முடியாதவை. அந்த வகையில் இலங்கை அரசை எதிர்ப்பதற்காகவே தமிழர்கள் இலங்கை வீரர்களை எதிர்க்கிறார்கள். இனியும் எதிர்ப்பார்கள். இலங்கையில் திரும்பியிருக்கும் போலிமயமான அமைதிக்குப் பின்னே ஒளிந்திருக்கும் கொடூரத்தை இந்த உலகத்திற்குக் காட்ட இந்த எதிர்ப்பை பயன்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை.


★ ★ ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

08



## மருத்துமாமலைவனத்துக் காதல்

"அரச குடும்பத்தினரை எண்ணப் பயமா இருக்கிறது... யாழ்ப்பாண அரச குடும்பத்தினருக்கு மாறாத சாபம் போல... மூத்த பட்டத்து இளவரசர் சிங்கபாகு நஞ்சூட்டப்பட்டார். அடுத்து வீரபண்டாரம். பின் பட்டத்து ராணி... பட்டமேற்கும் உரித்துடைய பரநிருபசிங்கருக்கு என்ன நடக்குமோ?"

"ஒன்றும் நடக்காது பயப்படாதே உதயா!"

"கவனமாக இருங்கள். நீங்களும் இளவரசர் தானே..."

உதயவல்லி எழுந்திருந்தாள்: "நேரமாகிறது..." மீண்டும் பழைய நாய் ஊழையிட்டது. சங்கிலி விடைபெற்றான்.



-செங்கை ஆழியான்-

கார் முகில் எழினியாக நிலவை மறைப்பதை அவன் பார்த்தான். நினைவுகள் தறி கெட்டலைந்தன. உதயவல்லியை நீண்ட இடை வெளியின் பின்னர் சந்தித்துவிட்டு அரண்மனைக்குத் திரும்பி வந்த போது பரராசசேகரரின் சயன அறையில் பிரகாசமாக வெளிச்சம் தெரிந்தது. அங்கு யாழ்ப்பாண இராசதானியின் எதிர்காலம் நிர்ணயிக்கப்பட் டதைக் கேட்க நேர்ந்தது.

பரராசசேகரின் சயன மண்டபத்திலிருந்த வள்ளியம்மை தேவி" யார் சங்கிலியா? நம்ப முடியவில்லையே? இது என்ன வீண்பழி...?" என்றதை செவிமடுத்து சங்கிலி திகைத்துப் போனான்.

அரசர் பரராசசேகரர் மலர் மஞ்சத்தில் சாய்ந்திருந்தார். வள்ளியம்மை தேவியார் அவருடைய காலடியில் இருந்தார். மஞ்சத்தை அடுத்து காணப்பட்ட இருக்கையில் பரநிருபசிங்கர் அமர்ந்திருந்தார்.

"சும்மா வீண்பழி சுமத்தாதீர்கள். இந்தத் தகவல்கள் பொய்யானவை. கட்டுக் கதை..." எனப் பரநிருபசிங்கர் கொதித்தார்.

"அவ்வாறே இருக்கட்டும்... இரு பட்டத்து மைந்தர்களையும் இழந்து இரு கண்களையும் இழந்துவிட்டவன் போல் நான் தவிக்கிறேன். அமைதியாக இராச்சியத்தை பரிபாலிக்க வேண்டுமென்ற ஆசை. சதி, கொலை, மண்ணாசை என்பவற்றால் வீணாகி விட்டது. அரசைக் கவரும் நோக்கோடு சதி நடக்கிறது. பரநிருபா என் சொல்லைக் கேட்பாயா?"

"இது என்ன பேச்சு... கட்டளையிடுங்கள்... நிறைவேற்றுகிறேன் தந்தையே...?"

"பரநிருபா, உன்னிடம் ஒன்றை நான் யாசிக்கிறேன். எனக்கு ஈமக்கடன் செய்ய நீ இருக்க வேண்டும்... அதனால் இந்த மகுடம் உனக்கு வேண்டாம்."

அவ்விடத்தில் சில கணங்கள் பேய் அமைதி.

"தந்தையே தங்கள் கட்டளையை நான் ஏற்கிறேன். காரணமில்லாமல் பேசமாட்டீர்கள். நீங்கள் எனக்கு நன்மை செய்தாலும் தீமை செய்தாலும் சரி, நான் என் சிறிய தந்தையின் வைத்தியத்தொழிலைத் தொடர்ந்து செய்வேன். மன்னனாவது எனது ஆசை யல்ல."

"பரநிருபா... உன் முடியைப் பறிப்பது என் நோக்கமல்ல. அரியணை பஞ்சு மெத்தையல்ல. அரசியல் ஒரு சதுரங்கம். கெட்டிக்காரனே பிழைக்க முடியும். ஒரு புறம் வன்னியர்கள்... மறுபுறம் தென்னிலங்கை சிங்கள மன்னர்கள்... சூழவுள்ள சமுத்திரத்தில் போர்த்துக்கேய பறங்கிகள்.... இந்தச் சூழலில் அரசைக் காக்க ஒரு மாவீரன் தேவை. உன் வீரத்தை நான் குறைவாக மதிப்பிடவில்லை."

"என்னிலும் வீரனா? அது யார்? நான் நினைப்பது போல தம்பி சங்கிலியா தந்தையே?"

"சரியாகவே சொன்னாய் மைந்தா..."

தூண் மறைவில் நின்ற சங்கிலி திகைத்துப் போனான். விழிகள் நீரைச் சொரிந்தன. நம்பவே முடியவில்லை.

"அண்ணன்மாருக்குக் கொலை காரரால் ஏற்பட்ட தீமை சங்கிலிக்கு மட்டும் ஏற்படாதா?"

"இல்லை..." பரராசசேகருக்கு முன் வள்ளியம்மை தேவி குறுக்கிட்டாள்.

"சங்கிலி மன்னனாவதை நாட்டு மக்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமே? பரநிருபசிங்கன் இருக்க சங்கிலியா பெரிய பிள்ளை என்னவானான்? பரநிருபன் மறுத்தால் அவன் மூத்த மகன் பரராசசிங்கன் இருக்கிறானே? இவ்வளவு பேரைத் தாண்டி சங்கிலி மன்னனாக முடியுமா?" என்றாள் ராணி.

"அவற்றை நான் பார்க்கிறேன். தலையிடாதே... என்றார் மன்னர் பரராசசேகர்."

"எப்படியும் சங்கிலி மன்னனாக முடியாது சுவாமி."

"ஏன்?"

வள்ளியம்மைதேவி சிறிது நேரம் மௌனம் காத்தார்.


"ஏனென்று கூறு ராணி."

"சங்கிலி ஒரு வைப்பாட்டியின் மகன்."

எதை அவன் பிறர் வாயினின்று கேட்கப் பிரியப்பட மாட்டானோ அதையே சங்கிலி கேட்டான்.

(தொடரும்)

# போர்க்குற்றங்ளை மூடிமறைக்க கொழும்பில் நடந்த கலாசாரவிழா



கொழும்பில் இடம்பெற்ற Colombo scope என்கின்ற கலை விழாவுக்கு அவர்கள் இராணுவச் சீருடையில் வந்தமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இவ்வாறு இராணுவச் சீருடையில் கலை விழாவுக்கு வந்தமையானது இலங்கை அரசாங்கத்தின் மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அதற் கெதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் இவ்வாறான நடவடிக்கைகளை துணிச்சலுடன் எதிர்க்கின்ற ஒரு நகர்வாக இது அமைந்திருந்தது.

Standard Chartered என்கின்ற வங்கியின் நிதி ஆதரவுடன், பிரிட்டிஸ் கவுன்சில் மற்றும் Goethe நிறுவகம் ஆகியவற்றின் ஒழுங்கமைப்புடன் இலங்கையின் தலைநகரான கொழும்பில் நடாத்தப்பட்ட இக்கலைவிழாவில், கருத்துச் சுதந்திரத்திற்கான வரையறைகள் சிறிதளவேனும் மதிக்கப்படவில்லை.

இக்கலைவிழாவுக்கான நான்கு உறுப்பினர்களைக் கொண்ட குழுவில் மூன்று பேர் இலங்கை அரசாங்கப் பேச்சாளர்களாவர். நான்காவதாக நியமிக்கப்பட்டிருந்த உறுப்பினர் ஜேர்மனியப் போரின் போது ஊடகவியலாளராகக் கடமையாற்றியவராவார். இவர் உண்மையில் 2009-ல் இலங்கையில் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட உள்நாட்டு யுத்தம் தொடர்பாக செய்திகளை வெளியிடவில்லை. பிறிதொரு ஊடகவியலாளர் ஒருவர் இக்கலை விழாவுக்கு அழைக்கப்பட்டபோதிலும் இறுதியில் அவர் நீக்கப்பட்டிருந்தார். இக்கலைவிழாவானது மிக மோசமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பார்வையாளர்கள் இதில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே காணப்பட்டது. கலை விழாவை நடாத்திய நான்கு பேர் கொண்ட குழுவானது, தனது கருத்துக்களை மட்டும் முன்வைப்பதற்கான ஒன்றாக இது காணப்பட்டது.

நான் எழுதி வெளியிட்ட ***மரணங்கள் இன்னமும் எண்ணப்படுகின்றன*** என்ற நூலுக்கு சமனாக Counting the Bodies என்ற தலைப்பில் இக்கலைவிழாவில் விவாதம் இடம்பெற்றது. இக்கலைவிழாவில் எனது நூல் மிகத்தவறாக விமர்சிக்கப்பட்டது. நான் எனது நூலில் இலங்கையில் இடம்பெற்ற போரில் ஒரு இலட்சத்து47 ஆயிரம்பேர் வரை கொல்லப்பட்டதாக குறிப்பிட்டிருந்தேன். வெளிநாட்டவர்களின் உந்துதலின் பேரிலேயே இந்த எண்ணிக்கையை நான் குறிப்பிட்டதாக தலைவிழாவில் Counting the Bodies என்கின்ற தலைப்பில் இடம்பெற்ற விவாதத்தில் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு மக்கள் கொல்லப்பட்ட எண்ணிக்கையை மன்னார் ஆயர் முன்னர் குறிப்பிட்டிருந்த நிலையிலும், அரசாங்க புள்ளிவிபரங்களின் மூலமுமே நான் எனது நூலில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தேன்.

மன்னார் ஆயர் வெளிநாட்டவர் அல்லர். இவர் இலங்கையில் வாழும் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இலங்கை அரசாங்கத்தால் போரில் காணாமற்போனோர் தொடர்பில் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்களைக் கருத்திற் கொண்டே போரின்போது ஒரு இலட்சத்து 47 ஆயிரம் வரை கொல்லப்பட்டதாக நான் எனது நூலில் குறிப்பிட்டுள்ளதை கலைவிழாவில் விவாதத்தை மேற்கொண்ட இரு இராணுவப் பேச்சாளர்களும் கவனத்திற் கொள்ளவில்லை என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. இவர்கள் எனது நூலில் உள்ள விடயங்களை மிகத் தவறாக விமர்சனம் செய்திருந்தனர்.

யுத்தத்தின்போது பல பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் படுகொலை செய்யப்படவில்லை என இராணுவப்பேச்சாளர்கள் மிகத் தெளிவாக முன்வைத்த போது அதனை எவரும் எதிர்த்து கருத்துக்களைக் கூறவில்லை என்பதுடன் இதனைக் கேட்டுக்கொண்டிருந்த பார்வையாளர்கள் இராணுவப் பேச்சாளர்களின் கருத்துக்களை ஏற்று மகிழ்ச்சி தெரிவித்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த விவாதமானது போர்க் குற்றச்சாட்டுக்களை மையப்படுத்தியதாக இருந்தபோதிலும், யுத்தக் குற்றங்களைப் புரிந்தவர்கள் இவ் விவாதத்தில் பங்கு கொண்டதானது வேடிக்கையானதாகும். யுத்தம் இடம் பெற்றுக் கொண்டிருந்த போது பாதுகாப்பு வலயங்களுக்குச் சென்று அங்கு பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உதவி வழங்குவதற்கு எந்தவொரு சுயாதீன சாட்சியாளர்களுக்கோ, உதவிப்பணிப்பாளர்களுக்கோ அல்லது ஊடகவியாளர்களுக்கோ அனுமதி வழங்கப்படவில்லை.

நான் Counting the Bodies என்கின்ற தலைப்பில் இடம்பெற்ற விவாதத்தை You Tube இல் பார்த்தேன். இதற்காக நான் நுழைவுச் சீட்டை பெறவில்லை. அடுத்த ஆண்டில் நடாத்தப்படும் Colombo scope என்கின்ற கலைநிகழ்வில் 2009 முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போர் தொடர்பாக விவாதம் மேற்கொள்ளும் போது அதில் அனைத்துலக போர்க் குற்றங்களுக்கான மூன்று சட்டவாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் போருடன் எவ்விதத்திலும் தொடர்புபடாத அரசாங்கப் பிரதிநிதி ஒருவர் கலந்து கொள்வார்கள் என நான் நம்புகிறேன். இது இவ்வாண்டு இடம்பெற்ற விவாதத் தொடரை சமன் செய்வதாக இருக்கும்.

இக்கலைநிகழ்வில் இடம்பெற்ற விவாதம் தொடர்பாக கருத்துக்களைக் கூற கொழும்பிலுள்ள பிரிட்டிஸ் கவுன்சில் மறுப்புத் தெரிவித்துவிட்டது. ஆனால், இது கவுன்சிலுக்கு வெளியேயுள்ள யாரோ ஒருவரால் சுயாதீனமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு நிகழ்வு போன்ற ஒரு



பிரான்சஸ் ஹரீஸன்

தோற்றப்பாட்டை வழங்குகிறது. இலங்கை மீதான மனித உரிமைகள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்களை மூடிமறைப்பதற்காக எனது நிதியை பிரித்தானிய வரி செலுத்துனர் பயன்படுத்துகிறார் என்பதே உண்மையாகும்.

இவ்வாறான ஆபத்துமிக்க உயர் அரசியல் செல்வாக்கைக் கொண்டு மேற்கொள்ளப்படும் கலைவிழாவுக்கு பிரிட்டிஸ் கவுன்சில் நிதி செலுத்துவதில் எவ்வாறான பயனுமில்லை. இவ்வாறான ஒன்றை இது மீண்டும் நடத்த முன்வரக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சி தமிழர்களை அழிக்கும் தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனம்

**1961-ல் நடைபெற்ற சத்தியாக் கிரகப் போராட்டம் வடக்குக்கிழக்கு தமிழ்பேசும் மக்களை ஒன்றிணைத் தது. தமிழக மக்களிடையே புதிய எழுச்சியை எற்படுத்தியது. இந்திய அரசாங்கத்தை சிந்திக்கவைத்தது.**

**அகிம்சைவழிப் போரா்ட்டத்தால் தமிழர் தாயகத்தில் அதாவது வடக்குக் கிழக்கில் அரசாங்கத்தின் நிர்வாகம் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது. தமிழர் பிரச்சினை சர்வதேச மயப் படுத் தப்பட்டது. அதிக உயிரிழப்புக் களின்றி தமிழ்பேசும் மக்களின் ஒற்றுமை என்ற ஆயுதத்தால் இலங்கை அரசை அதிர வைத்த நிகழ்வே 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம்.**

தந்தை செல்வா தலைமையில் நடைபெற்ற இம்மாபெரும் சத்தியாக் கிரகப் போராட்டம் இராணுவத்தால்






முறியிடிக்கப்பட்டாலும் இலங்கை தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த பெரும் வெற்றி. அது தந்தை செல்வாவின் சாதனை.

1956-ல் தந்தை செல்வாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற வரலாற்று முக் கியத்துவம் வாய்ந்த திருமலை யாத் திரை, அதைத் தொடர்ந்து திருகோண மலை தலைநகரில் நடைபெற்ற மாநாட்டில் விடுக்கப்பட்ட அறைகூவலி னால், ஏற்பட்டதே பண்டா செல்வா ஒப்பந்தம்.

அதன் மூலம் ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்தார் தந்தை. ஒப்பந்தம் பின்வருவனவற்றை உறுதி செய்தது.

1.தமிழர் தாயகம் வடக்கும் கிழக்கும் என்பதை ஏற்கச் செய்தல்

2. தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்தல்

3. தமிழ் மொழியை தேசிய மொழி யாக்குதல்.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழில் நிர்வாகத்தை ஏற்படுத்துதல்.

5.இலங்கையின் தேசிய சிறு பான்மையினரின் மொழியாகத் தமிழை அங்கீகரிக்கச் செய்தல்.

6.பிரஜாவுரிமைப் பிரச்சினையை மீளாய்வு செய்தல்.

7. சுயநிர்ணய உரிமை பிரதேசங் களை இணைக்கும் உரிமைமூலம் உள்ளே கொண்டு வரப்பட்டது.

ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் கண்டி யாத்திரை, பௌத்த பிக்குகளின் எதிர்ப்பு என்பவற்றால் ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டாலும் தந்தை செல்வாவின் சமஸ்டி அடிப்படையில் ஒப்பந்தம் உருவானது, ஒரு முதற்படி. அது தந்தை செல்வாவின் சாதனை.

அடுத்து 1965-ல் டட்லி சேனநாயக் காவுடன் செய்துகொண்ட இரண்டா வது ஒப்பந்தம் மற்றொரு சாதனை. 24.03.1965ல் டட்லி- செல்வா கையொப்ப மிட்ட ஒப்பந்தம். டட்லிசேனநாயக்க ஒப்புக்கொண்டவை. இந்த ஒப்பந்தத் தில் கூறப்பட்டவை:

1. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழில் நிர்வாகம் நடப்பதற்கும் அவற்றைத் தமிழிலேயே பதிவதற் கும் தமிழ்மொழி விசேட விதிகளுக்கு அமைய உடனே நடவடிக்கைகள் எடுக் கப்படும். ஒரு தமிழ் பேசும் குடி மகன், நாடு முழுவதிலும் தமிழிலேயே காரியமாற்ற உரிமையுள்ளவன் என் பதே, தன் கட்சியின் கொள்கை என் பதையும் சேனநாயக்கா விளக்கினார்.

2. வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள சட்டபூர்வ நடவடிக்கைகளை நடாத்தவும், அவற்றைப் பதிவதற்கு- தமிழ், நீதிமன்ற மொழியாக இருப்பது தன் கட்சியின் கொள்கையென்று சேனநாயக்கா ஏற்றுக்கொள்கிறார்.

3. இரண்டு தலைவர்களின் பரஸ்பர சம்மதத்தின் பேரில் மக்கள்பாலுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப இலங்கையில் மாவட்ட சபைகள் அமைக்க நடவடிக் கைகள் எடுக்கப்படும். எனினும் தேசிய நன்மை கருதி சட்டங்களுக்கமைய மாவட்ட சபைகளுக்கு மேலான அதி காரங்கள் அரசாங்கத் திற்கு உண்டு என்று ஏற்றுக் கொள்ளப் பட்டது.

4. இலங்கைப் பிரஜைகள் காணிப் பங்கீடுகளில், காணி, மேலும் வன ணம் அபிவிருத்தி விதிகள் இருத்தி யமைக்கப்படும்.

இந்த ஒப்பந்தம் கிழித்து எறியப் பட்டாலும் சமஸ்டி அடிப்படையி லான தீர்விற்கு ஐக்கிய தேசியக்கட்சி யும் இணங்கியது ஒருவரலாறு. தவிர சிங்கள தலைமையுடன் இணைந்து பங்காளியாக இருந்தால் அவர்கள் தமிழர் உரிமையை வழங்குவர் என்ற ஒருபகுதியினரின் கருத்து இந்த தேசிய அரசாங்கம் மூலம் முறியடிக்கப்பட்டது.

தந்தை செல்வாவின் அகிம்சை வழி அணுகுமுறைக்குக் கிடைத்த இரண்டாவது சாதனை இதுவாகும். தந்தை செல்வாவை ஏமாற்றிய டட்லி சேனநாயக்காவின் கட்சி 1970-ல் படு தோல்வி அடைந்தது.

1960 யூலையில் சிறீமாவோ பண் டாரநாயக்கா, ஆட்சிக்கு வருவதற்காக பண்டா செல்வா ஒப்பந் தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்து வேன் என்று கொடுத்த உறுதிமொழியே டட்லி சேனநாயக்கா அரசை வீழ்த்தி சிறீமாவோ பண்டார நாயக்காவை அமர்த்த வழிவகுத்தது.

தந்தை செல்வா, இரண்டாவது தடவையாக, சிறீலங்கா சுதந்திரக் கட்சியை பண்டா- செல்வா ஒப்பந் தத்தை அங்கீகரிக்க வைத்ததன் மூலம் சாதனை படைத்தார். தேர்தலில் அமோக வெற்றியீட்டிய சிறீமாவோ பண்டார நாயக்க அரசு கொடுத்த வாக்கை நிறைவேற்றவில்லை; ஏமாற்றி விட்டார் என்றே சொல்ல வேண்டும்.

சிங்களத் தலைமைகளிடையே ஏமாற் றும் படலம் ஊறிப்போன விடயம். டி.எஸ்.சேனநாயக்கா தொடக்கம் ஆட் சிக்கு வந்த மகிந்த ராஜபக்ச வரை தமிழ்த் தலைமைகளை ஏமாற்றிய வர்களாகவே வரலாறு பதித்துள்ளது.

1960 தேர்தலின்பின் தமிழரின் போராட்ட முறையில் பெரும் மாற்றத் தைச் செய்தார் செல்வா; புதிய யுக்தி களைப் பரீட்சித்தார். அரசாங்கத்தை ஆக்குவது, அரசாங்கத்தை அழிப்பது, அரசாங்கத்தில் இணைவது. 1960 தேர்தல் முடிவுகள், அச்சந்தர்ப்பத்தை அளித்தது. தமிழ் மக்கள் சுயமரியாதை யுடன் வாழவழி செய்யும் சுயாட்சி அரசை அமைக்கும் தன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இந்த ஜனநாயக வழிகளைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுத்தார்.

அது சுதந்திர இலங்கையில் தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு கை யாண்ட நான்காவது உத்தி. முதலா வது, ஒத்துழைப்பு- ஜி.ஜி.பொன் னம்பலத்துடன் இணைந்திருந்த காலத் தில், அவர் அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்து தமிழர் பிரதேசத்தைப் பாதுகாக்கலாம் என்று டி.எஸ். சேன நாயக்கா அரசுடன் ஒத்துழைத்த காலத்தில் தமிழரின் நிலப்பறிப்பு தீவிர மடைந்தது. மலையகத் தமிழ் மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டது.

இரண்டாவது, சாத்வீகப்போராட் டம் தமிழரின் உரிமைகள் பறிக்கப் படுவதைத் தடுத்து நிறுத்தி அவர் களுக்கு சுயாட்சியைப் பெற்றுக் கொடுக்க இந்த உத்தியை தந்தை செல்வா கையாண்டார்.

1956 யூன் 05 ஆம் திகதி காலி முகத்திடலில் நடத்திய சாத்வீகப் போராட்டமே இதுவாகும். பாரத தேசத் திற்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்க மகாத்மாகாந்தி சாத்வீக வழியில் போராடினார். இச்சத்தியாக் கிரகத்தை தந்தை செல்வா மேற் கொண்டார்.

அதன் மகிமையை உணராத சிங்கள அரசும் சிங்களக் குண்டர் களும் பலாத்காரத்தை மேற்கொண்டு சத்தியாக்கிரகிகளை அடித்து, மிரட்டி னார்கள். அமிர்தலிங்கம் இரத்தக் கறையுடன் நாடாளுமன்றம் சென்று, இந்த அடாவடித்தனத்தை எடுத்துக் கூறினார். 1961- ல் வடக்குக் கிழக்குத் தமிழர்களை அணிதிரட்டி மாபெரும் சாத்வீகப் போராட்டத்தை நடத்தினர். அந்த சத்தியாக்கிரகப் போராட்டம் சிங்கள இராணுவத்தால் முறியடிக் கப்பட்டது.

தந்தை செல்வாவின் சாத்வீகப் போராட்டமும் வெற்றியளிக்கவில்லை. நாலாவது உத்தி- அரசாங்கத்தை ஆக்கு வதும் அழிப்பதும். 1960 மார்ச்சில் தந்தை செல்வா, டட்லி சேனநாயக்க அரசாங்கத்தைக் கவிழ்த்தார். 1960 யூலையில் சிறீமாவோ பண்டார நாயக்க அரசாங்கம் உருவாக உதவி னார். உதவியவரை சிறீமாவோ அம்மையார் உதறித்தள்ளினார். இது வும் தந்தை செல்வாவிற்கு ஏமாற்றம்.

ஐந்தாவது உத்தி- அரசாங்கத்தில் பங்கு கொண்டமை. 1965-ல் ஐ.தே. கட்சி, தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு தந்தை செல்வா ஆரவளித்தார். பின் வரும் கோரிக்கையின் அடிப்படை யில் அரசாங்கத்தின் பங்காளியாகச் சேர்ந்த தந்தை செல்வாவை மூன்று ஆண்டுகளின் பின், டட்லியும் ஏமாற்றி விட்டார். ஐந்தாவது உத்தியிலும் தந்தை செல்வா தோல்வி கண்டார்.

ஐக்கிய இலங்கைக்குள் சமஸ்டி அரசியல் அடிப்படையில் அதிகாரப் பகிர்வுடனான ஒரு சுயாட்சியைப் பெறுவதற்கு 30 வருடமாக அகி ம்சை வழியில் போராடிய தந்தை செல்வா சிங்கள ஆட்சியாளரால் ஏமாற்றப்பட்ட பின்னர், மாற்று வழியாக தமிழீழக் கோரிக்கையை வட்டுக்கோட்டை மாநாட்டில் நிறை வேற்ற வேண்டிய நிர்ப்பந்த நிலை.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை யும் ஒரு தேசிய இனத்திற்கான அடிப் படை உரிமைகளும் சிங்கள அரசாங் கங்களினால் மறுக்கப்பட்டதனால், தந்தை செல்வா தமிழீழக் கோரிக்கையை முன்னெடுத்தார். அதற்கான ஆயுதப் போராட்டம் தற்போது தோல்வி யடைந்த நிலையில், மீண்டும் ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் திர்வுகாண் பதற்கான சந்தர்ப்பம் சிங்கள அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. *(முற்றும்)*

-ஐ.தி.சம்பந்தன்-லண்டன்-


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

422

## ஆணியின் மதிப்பு



ஒரு கிராமத்தில் கோவிந்தன் என்ற ஒரு வாலிபன் இருந்தான். தினமும் அவன் தன் ஊருக்கு அருகேயுள்ள பெரிய நகரத்திற்குச் சென்று ஏதாவது கூலி வேலை செய்து காசு சம்பாதித்துக் கொண்டு வருவான். ஒருநாள் தன் ஊரிலிருந்து அவன் பட்டணத்திற்குச் சென்று கொண்டிருந்தான். அப்போது அந்நாட்டு மந்திரிகுமாரன் குதிரைமீது வெகு வேகமாக வந்துகொண்டிருந்தான். குதிரை தன்னைக் கடந்து செல்கையில் அதன் காலில் அடிக்கப்பட்டிருந்த லாடத்தின் ஆணி கழன்று விழுந்ததைக் கண்டான்.

உடனே கோவிந்தன் மந்திரிகுமாரனை உரத்த குரலில் கூப்பிட்டு ஐயா குதிரை லாடத்தில் ஒரு ஆணி கழன்று விழுந்துவிட்டது எனக் கத்தினான். ஆனால் மந்திரிகுமாரனோ அதைக்கேட்டுக் கொள்ளாதது போல் வெகு வேகமாகச் சென்று விட்டான்.

மந்திரிகுமாரன் சீக்கிரமாக நகரை அடைய வேண்டுமென நினைத்து குதிரையைக் குறுக்குவழியில் அடர்ந்த காட்டின் வழியாக செலுத்திச் சென்றான். ஆனால் குதிரையால் வேகமாகச் செல்லமுடியவில்லை. லாடத்தில் ஆணி இல்லாததால் லாடமே கழன்று விட்டது.

குதிரையோ மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது. இதற்குள் காட்டினுள் மறைந்திருந்த திருடர்கள் அவனைச்சூழ்ந்து கொண்டு அவனிடமிருந்து விலையுயர்ந்த பொருட்களைக் கவர்ந்து கொண்டு விட்டனர். பின்னர் அவனையும் ஒரு மரத்தில் கட்டிப் போட்டுவிட்டுப்போய்விட்டனர். இதற்குள் கோவிந்தன் பாதையில் விழுந்த லாட ஆணியை எடுத்துப் பத்திரமாக வைத்துக்கொண்டு நடந்து செல்லலானான். சிறிது தூரம் போனதும் ஒரு வண்டி ஒரு பக்கமாக சாய்ந்து நிற்பதையும் அதன் பக்கத்தில் வண்டியின் சொந்தக்காரன் நின்று கொண்டிருப்பதையும் கண்டான்.

அவன் கோவிந்தனைப் பார்த்ததும் அப்பா உன்னிடம் ஏதாவது ஆணி இருக்கிறதா இதன் கடையாணி தளர்ந்து விழுந்து விட்டது. அதற்கு ஒரு சிறு ஆணி வேண்டும். அது இருந்தால்தான் நான் வண்டியை செலுத்திக் கொண்டு பத்திர மாக நகரத்திற்குச் செல்லமுடியும்.

உடனே கோவிந்தனும் தன்னிடமிருந்த லாட ஆணியை எடுத்து வண்டிச் சக்கரத்தை நேராக வைத்து



## அம்புலிமாமா கதைகள்

இருசின் சிறு துவாரத்தில் அந்த ஆணியை வைத்து ஒரு கல்லால் அடித்தான். பின்னர் சக்கரம் நழுவாமல் சுழல ஏதுவாயிற்று. உடனே அந்தப் பணக்காரன் வெகுசந்தோசம் அடைந்தவனாய் கோவிந்தனையும் தன் வண்டியிலேயே அமர்த்திக் கொண்டு நகரத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கு சென்றதும் ஒரு தங்க நாணயத்தை அவனுக்கு கொடுத்தனுப்பினான்.

அப்பொற்காசைக் கண்டதுமே கோவிந்தன் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தான். ஒரு சின்ன லாடத்தின் ஆணிக்கு இவ்வளவு பெரிய மதிப்பா என நினைத்துக் கொண்டான். பின்னர் பட்டணத்தினுள் சென்று தன் வீட்டிற்கு வேண்டிய உணவுப்பொருட்களையும் குழந்தைகளுக்கு தின்பண்டங்களையும் வாங்கிக்கொண்டு தன் ஊருக்கு குறுக்குவழியாக புறப்பட்டான். அவன் நடுக்காட்டில் சென்று கொண்டிருக்கையில் யாரோ அழுவது போன்ற குரலைக்கேட்டான். உடனே கோவிந்தன் தான் சுமந்து வந்த மூட்டையை ஓர் இடத்தில் மறைவாக வைத்து விட்டு எங்கிருந்து சத்தம் வந்தது எனப் பார்க்கலானான். சற்று நேரத்திற்கெல்லாம் அவன் ஸ்திரீ குழந்தைகளுடன் ஒரு மரத்தடியே இருப்பதைக் கண்டான்.

கோவிந்தனைக் கண்டதும் அவள், ஐயா நான் ஒரு பணக்கார வியாபாரியின் மனைவி. என் கணவன் வியாபார விடயமாக வெளியூர் சென்றிருக்கிறார். அவர் வருவதற்கு சில மாதங்களாகும். நானும் என் குழந்தைகளும் பக்கத்துக் கிராமத்திலுள்ள என் உறவினர் வீட்டு திருமணத்திற்கு இந்த வழியாக வரும் போது சில வழிப்பறிக்கொள்ளையர்கள் என் குதிரை வண்டியை மறித்து என் ஆபரணங்களைத் திருடியதுடன் வண்டியையும் எடுத் துச் சென்று விட்டனர். வண்டிக்காரனையும் அடித்துக்காயப்படுத்தித் தூக்கிச் சென்றுவிட்டனர். நானும் குழந்தைகளும் இந்தக் காட்டில் நிர்க்கதியாய்த் தவிக்கையில் நீங்கள் தெய்வம் போல் எங்களைக் காப்பாற்ற வந்திருக்கிறீர்கள் என்றாள். உடனே கோவிந்தன் அவர்களை அழைத்துக்கொண்டு தான் தனது



மூட்டையை ஒளித்து வைத்திருந்த இடத்திற்கு வந்தான். அவர்களை உட்காரவைத்து தன்னுடைய மூட்டையை எடுத்து அதிலிருந்த தின்பண்டங்களை அந்த ஸ்திரீக்கும் குழந்தைகளுக்கும் பகிர்ந்து கொடுத்தான். அவர்களும் அதை உண்டு பசி தீர்ந்து அவனை வாழ்த்தினார்கள். கோவிந்தனும் அவர்களைப் பட்டணத்திற்குப் போகும் பாதையில் கொண்டு போய்விட்டு இனி நான் விடைபெற்றுக்கொள்ளட்டுமா? என்று கேட்டான்.

அதற்கு அந்த ஸ்திரீ, தயவு செய்து எங்களை எங்கள் வீட்டில் கொண்டுபோய் சேர்த்துவிடுங்கள். உங்களுக்கு கோடிபுண்ணியம் உண்டு. என்னால் இனி தனியாகப் போக முடியாது என வேண்டினாள். கோவிந்தனும் அவர்களை அழைத்துக்கொண்டுபோய் பட்டணத்தில் அவர்களது வீட்டில் கொண்டு போய் சேர்த்துவிட்டான். அந்தப் பணக்காரியும் கோவிந்தன் விடைபெற்றுக்கொள்கையில் ஒரு சிறு பரிசை அவனுக்குக் கொடுத்தாள். அதில் பத்து தங்கக்காசுகள் இருந்தன. கோவிந்தன் அதைப் பெற்றுக் கொண்டு தன்னுடைய வீட்டிற்கு வேண்டியபொருட்களையும் குழந்தைகளுக்கு தின்பண்டங்களையும் மீண்டும் வாங்கிக்கொண்டு தன் ஊருக்குப் புறப்பட்டான்.

நேரம் அதிகமாகிவிட்டதே என்று குறுக்குவழியாகவே போகலானான். நடுவழியில் யாரோ முக்கி முனகும் குரலைக்கேட்டு அந்தச் சத்தம் வந்த இடத்திற்குச் சென்றான். அங்கு மந்திரிகுமாரன் கட்டுண்டு விழுந்து கிடப்பதைப் பார்த்தான். உடனே அவனது கட்டுக் களை அவிழ்த்து மயக்கத்தைப் போக்கலானான். மந்திரிகுமாரன் கோவிந்தனை அடையாளம் தெரிந்து கொண்டு அப்பனே! நீ லாடா ஆணி இல்லையே எனக் கத்தினாய். அதைப் பொருட்படுத்தாமல் வந்ததன் பலன் இது என நடந்ததையெல்லாம் கூறினான். அதைக் கேட்டகோவிந்தன் உங்கள் ஆணி எனக்குச் செய்ததைப் பாருங்கள் என அவன் அந்த ஆணியால் அடைந்த பயனைக்கூறினான்.

அதைக்கேட்ட மந்திரிகுமாரன் சரி... கோவிந்தா உன்னைப்போல எச்சரிக்கையான ஆளே எனக்குத் தேவை. நீ என்னிடம் வேலைக்கு வந்துவிடு. உனக்கு இருக்க இடமும் நல்ல சம்பளமும் கொடுக்கிறேன் எனக்கூறினான்.

கோவிந்தனும் சரியென ஒப்புக்



கொண்டு தன்னுடைய கிராமத்தை விட்டு நகரத்திற்கு வந்தான். தன் குடும்பத்துடன் மந்திரிகுமாரன் கொடுத்த வீட்டில் வசித்து அவனுக்குச் சேவை செய்து வரலானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகளை வழங்கும் விஜய வருட பலன்கள்

ஜோதிடக் கலைமணி, சிவல்புரி சிங்காரம்

## சிம்மம்

### மகம், பூரம், உத்ரம் 1 ஆம் பாதம்

**சுபகாரியங்கள் நடைபெறும் வருடம்!**

**முயன்றால் எதிலும் வெற்றி பெறலாம் என்று சொல்லும் சிம்ம இராசி நேயர்களே!**

"**விஜய**" வருடம் உங்களுக்கு வெற்றியை வழங்கும் வருடமாகவே அமைகிறது. குருவின் பார்வை வருடத் தொடக்கத்தில் தனஸ்தானத்திலும் சுக ஸ்தானத்திலும் எதிரிகளின் ஸ்தானத்திலும் பதிகிறது. எனவே, பணத் தேவைகள் பூர்த்தியாகும். சுகங்களும் சந்தோஷங்களும் கூடும். சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

வைகாசிக்கு மேல் உங்களுக்கு வசந்த காலம்தான். செய்யும் தொழிலில் சிறப்பான லாபத்தை குரு வரவழைத்துக் கொடுக்கப் போகிறார். லாபஸ்தானம் புனிதமடைவதால் பணப்பற்றாக்குறை அகலும் வருடமாகவே இந்த வருடத்தைக் கருதலாம்.

**வி.ஐ.பிக்களின் பட்டியலில் இடம்பிடிப்பீர்கள்!**

ஆணையிடும் ஆற்றல் உங்களுக்கு அதிகமாகவே உண்டு. சுதந்திரமாக இருக்க பிரியப்படுவீர்கள். எந்த பொறுப்புகளை கொடுத்தாலும் பதவிகளை கொடுத்தாலும் தலைமைப் பதவிக்கு தகுதியானர்வர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவீர்கள். துன்பத்தை நீக்கு என்று. சொல்பவர்களுக்கு மத்தியில் வரும் துன்பத்தை தாங்கிக் கொள்ளும் சக்தியை எனக்கு கொடு என்று நீங்கள் இறைவனிடம் சொல்வீர்கள். வளர்ச்சி வரும் பொழுது என்னால்தான் நடந்தது என்று பெருமைப்படுத்துவீர்கள். தளர்ச்சி வரும் பொழுது விதியின் செயல் என்று எடுத்துரைப்பீர்கள்.

பொது நலத்தில் அக்கறை அதிகம் காட்டுபவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பீர்கள். உங்களுக்கு மற்றவர்களை தெரிகிறதோ, இல்லையோ உங்களை மற்றவர்கள் அனைவரும் தெரிந்து வைத்திருப்பர். செலவு செய்ய வேண்டிய நேரத்தில் அளவுக்கு அதிகமாக செலவு செய்வீர்கள். சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரத்தில் கடைப்பிடிப்பீர்கள்.

**நந்தன வருடம் பங்குனி மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 11.52 மணிக்கு தனுசு லக்னம், கார்த்திகை நட்சத்திரம் ரிஷப இராசியில் அமிர்த யோகத்தில், விஜய வருடம் பிறக்கிறது.**

சனி உங்களுக்கு சப்தமாதிபதியாக இருப்பதால் பொருத்தம் பார்த்து செய்யும் திரும்ணங்களால்தான் வருத்தமில்லாத வாழ்க்கை அமையும்.

**விஜய ஆண்டின் தொடக்கம் வேண்டியதெல்லாம் கிடைக்கும்**

வருடத் தொடக்கத்தில் இராசிநாதன் சூரியன் உச்சம் பெற்று செவ்வாய், சுக்கிரன், கேதுவுடன் இணைந்

## இனி என்ன? வசந்தகாலம்தான்!

திருக்கிறார். சுக்ரனும் செவ்வாயும் அஷ்டமனத்தில் இருந்தாலும்கூட அவை சேர்க்கை பெற்றிருப்பது யோகம்தான். தொழில் வளர்ச்சி மேலோங்கும். துணையாக இருப்பவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். அழியாத புகழுக்கு அஸ்திபாரமிடும் நீங்கள், இக்காலத்தை ஒரு பொற்காலமாக மாற்றிக் கொள்வீர்கள்.

குரு பார்க்க கோடி நன்மை என்பதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிட்டும். தொல்லைகள் அகன்று ஓடும். கட்டளைக்கு அடிபணியும் ஆட்களை அடிக்கடி மாற்றம் செய்வீர்கள். விட்டுப்போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரும்.

உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பெண் வழி வருமானங்கள் பெருகும். பிரச்சினைகள் அனைத்தும் நல்ல முடிவுக்கு வரும். இந்த நேரத்தில் கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். தொழில் முயற்சி வெற்றி தரும். கூட்டாளிகள் உங்கள் குணமறி



ந்து நடந்து கொள்வர்.

ஒரு சொத்தை விற்று மற்றொரு சொத்தை வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். 3 இல் சஞ்சரிக்கும் இராகு தன் பார்வை பலத்தால் பூமி லாபத்தை வழங்கும்.

பூமி விற்பனையில் தடைகள் ஏற்படும் பொழுதெல்லாம் அரவு கிரகங்களுக்குரிய சர்ப்ப சாந்தியும் அருள் தரும் வைரவருக்குரிய அலங்கார பூஜையும் முறையாக அனுகூலம் தரும், நாளில் செய்தால் முன்னேற்றத்திற்கு மேல் முன்னேற்றம் வந்து சேரும்.

கார்த்திகை நட்சத்திரத்தில் அதாவது உங்கள் இராசிநாதனான சூரியனுடைய நட்சத்திரத்திலேயே இந்த ஆண்டு பிறப்பதால் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும் ஆண்டாக அமைய சூரிய வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**லட்சியங்களை நிறைவேற்றும் லாபஸ்தான குருவின் சஞ்சாரம்!**

இதுவரை உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் வைகாசி மாதம் 14 ஆம் திகதி 28.05.2013 அன்று மிருகசீரிட நட்சத்திரம் 3 ஆம் பாதத்தில் மிதுன இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். அதன் பார்வை பலம் உங்கள் இராசிக்கு 3,5,7 ஆகிய இடங்களில் பதிவாகிறது.

இதன்விளைவாக முன்னேற்றப் பாதையில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். எண்ணற்ற நல்ல காரியங்களைச் செய்யப்போகிறீர்கள். உடன்பிறப்புகள் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறி மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழிலில் தொல்லை கொடுத்து வந்தவர்கள் இனி தானாகவே விலகுவர். தன்னம்பிக்கையும் தைரியமும் எதையும் சாதிக்கும் வல்லமையும் உருவாகும். பூர்வ புண்ணிய ஸ்தானம் புனிதமடைவதால் பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரும்.

உங்கள் வாரிசுகள் வளர்ச்சியடைய கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சந்தோஷங்களுக்கு குறுக்கீடாக உறவினர்களே நிற்கலாம். அவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பிரிந்த தம்பதியர் ஒன்று சேர்வர். விருப்பப்படியே திருமணம் செய்யும் வாய்ப்பு வந்தாலும் யோசித்து ஏற்றுக்கொள்வதே நல்லது. வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

இடம்வாங்கும் சூழ்நிலை தோன்றும் பொழுது செவ்வாய் பலம் பெற்றவர்களின் பெயர்களில் வாங்குவது நல்லது. வியாழன் தோறும் விரதமிருந்து வெற்றி தரும் குருவை வழிபட்டு வந்தால் மற்றவர்கள் போற்றும் வாழ்க்கை அமையும். மகத்தான பொறுப்புகளும் வந்து சேரும்.

**மந்தன் சனியால் வரும் மாற்றங்கள்!**

சனி 3 ஆம் இடத்தில் உச்சம் பெற்று வருடத் தொடக்கத்திலேயே வக்ரம் பெற்றுத்தான் சஞ்சரிக்கிறார். 14.04.2013 முதல் 04.07.2013 வரையிலும் மீண்டும் 01.03.2014 முதல் 13.04.2014 வரை சனி வக்ரம் பெறுகிறார்.

இதற்கிடையில் ஏப்ரல், மே, ஆகஸ்ட், செப்ரம்பர், ஒக்டோபர் ஆகிய மாதங்களில் சனி, செவ்வாயின் பார்வை காலம் ஏற்படுகிறது. இதுபோன்ற காலங்களில் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது.

உங்கள் இராசிக்கு 6,7 க்கு அதிபதியான சனி வக்ரம் பெறும் பொழுது எதிரிகளின் பலம் குறையும். லாப நோக்கத்தோடு பழகியவர்கள்



உங்களை விட்டு விலகுவர். சேமிப்பு சிறிது கரைந்து, வீண் செலவுகளுக்கும் ஆட்பட நேரிடும். குடும்பசுமை கூடும்.

தம்பதியர்களுக்குள் புரிந்து கொள்ளும் தன்மை குறைந்து பகை உணர்வு மேலோங்கலாம். இதுபோன்ற காலங்களில் யார் எதைச் சொன்னாலும் ஒரு காதில் வாங்கி மற்றொரு காதில் விட்டு விடுவது நல்லது.

வாக்குவாதம் செய்வது, பிறரை விமர்சிப்பது போன்றவற்றை நீக்குவதன் மூலம் இக்காலத்தில் அமைதியையும் ஆனந்தத்தையும் வரவழைத்துக் கொள்ள இயலும்.

சொத்துக்களால் பிரச்சினைகளும் சொந்த பந்தங்களின் பகையும் ஏற்படலாம். கூடுமானவரை அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதே நல்லது. ஊர்ப் பயணங்களை மாற்றி அமைப்பீர்கள். வாகனத்தால் பழுதுச் செலவுகளும் எதிர்பாராத இடையூறுகளும் ஒரு சிலருக்கு வந்து சேரும்.

எனவே, கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டிய நேரமாகக்கூட இந்த நேரத்தைக் கருதலாம். சனி கவசம் பாடி சனிபகவானை வழிபட்டால் மணியான வாழ்க்கையில் வந்த துன்பங்கள் அகன்று மகிழ்ச்சியை வரவழைத்துக் கொடுக்கும்.

**குருவின் வக்ர காலமும், செவ்வாயின் வக்ர காலமும்!**

13.11.2013 முதல் 12.03.2014 வரை குரு மிதுனத்தில் வக்ரம் பெறுகிறார். இதன்விளைவாக சில நல்ல காரியங்களும் இல்லத்தில் நடைபெறும். பஞ்சம, அஷ்டமாதிபதியாக குரு விளங்குவதால் வாழ்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். நேசித்தவர்கள் உங்களை விட்டு விலகினாலும் யோசிக்க வேண்டாம். ஆசைப்படியே அடுத்த நண்பர்கள் அறிமுகமாகிவிடுவார்கள்.

குழந்தைகள் நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். பெண் குழந்தைகளைப் பின்னணியாக இருந்து பார்த்துக் கொள்வது நல்லது. அல்லது அவைகளாகவே சில முடிவுகளைத் தானாகத் தேர்ந்தெடுக்கலாம். அதற்கு நீங்கள் அங்கீகாரம் செய்வது போல ஆகிவிடும்.

பூர்வீக சொத்துக்களில் பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுத்து வரலாம். எனவே, நெட்டையோ, குட்டையோ என்று பார்க்காமல் பஞ்சாயத்துகளை விரைவில் முடித்துக் கொள்வது நல்லது.

**பலன் தரும் பரிகாரம்!**

**ஞாயிற்றுக்கிழமை தோறும் சிவனையும் உமையவளையும் வழிபட்டு வாருங்கள். பொன்னான வாய்ப்புகள் [illegible] நாளும் வந்து சேரும்.**

தேக நலனிலும் நீங்கள் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். தீட்டிய திட்டங்களை நிறைவேற தென்முகக்கடவுளை இன்முனத்தோடு வழிபடுவது நல்லது.

செவ்வாயின் வக்ர காலமான 01.03.2014 முதல் 13.04.2014 வரை குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு வைத்தியச் செலவுகள் உருவாகலாம். குறிப்பாக தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. வாகன மாற்றம் செய்வது நல்லது. உற்றார், உறவினர்களின் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

**சிம்ம இராசியில் பிறந்த பெண்களுக்கு சிறப்பான வாழ்க்கை அமையப் போகிறது. குருவருள் உங்களுக்கு இருந்தால் குடும்பத்தில் இருக்கும் குழப்பங்கள் அகலும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். வீட்டிற்குள் சண்டை, வெளியில் பிரச்சினை என்ற நிலை மாறி ஆற்றல் மிக்கவர்களின் ஆலோசனைகளைக் கேட்டுப் பின்பற்றுங்கள். சொத்து பிரச்சினைகள் ஏற்படும்.**

**பரிகாரங்களைத் தேர்ந்தெடுத்துச் செய்தால் வைகாசிக்கு மேல் வளர்ச்சி கூடும். வருமானம் திருப்தி தரும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகலாம். விஸ்வரூபம் எடுத்த பிரச்சினைகளில் வியக்கும் விதத்தில் மாற்றம் ஏற்படும். சண்முகநாதர் வழிபாடும் சர்ப்ப சாந்திகளும் நன்மைகளை வழங்கும்.**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டர்களின் தாக்குதல்களை படையினர் வேடிக்கை பார்க்கின்றனர்

## கருணாரட்ன கண்டனம்

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தும் போது மட்டும் கண்ணீர்ப்புகைக்குண்டுகள், குண்டாந்தடிகள் கொண்டு தாக்கி விரட்டியடிக்கும் பொலிஸாரும் இராணுவத்தினரும் அவர்களின் கண்முன்னே நடைபெற்ற பெப்பிலியான வர்த்தக நிலையத்தாக்குதலையும் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தையும் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காது வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தமையானது மிகவும் கண்டனத்துக்குரியது என நவசமசமாஜக் கட்சித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

தற்போது நாட்டில் அடாவடித்தனங்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இதுபோன்ற செயல்களுக்குப் பொலிஸாரும் இராணுவத்தினரும் துணைபுரிகிறார்கள். அவர்களின் கண்முன்னே தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றாலும் அதை வேடிக்கை பார்த்துவிட்டு பின்னர் எமக்கு சந்தேக நபர்களைக் கைது செய்ய உதவுங்கள் என மக்களிடம் கேட்கிறார்கள். இது மிகவும் கேலிக்கிடமானதாகும்.

பெப்பிலியான வர்த்தக நிலையம் தாக்கப்பட்ட சம்பவமானாலும் சரி கிளிநொச்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலானாலும் சரி இரண்டுமே பொலிஸார் இராணுவத்தினர் முன்னிலையிலேயே நடைபெற்றவை. ஆனால், இவற்றுக்கு எந்தவித மறுப்பும் தெரிவிக்காது இவர்கள் இருந்தமைக்கு ஊடகங்களும் சாட்சி.

அதேபோன்று எதிர்க்கட்சிகளாகிய நாம் அரசுக்கு எதிராக வீதியில் இறங்கி எந்தவொரு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டாலும் இவர்கள் கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும் குண்டாந்தடிகளையும் கொண்டு எம்மைத் தாக்கி விரட்டியடிக்கின்றனர்.

இவ்வாறு நடந்து கொள்கின்ற இந்தப் படையினரும் பொலிஸாரும் அப்பாவி மக்களையும் அவர்களின் உடைமைகளையும் குண்டர்கள் தாக்கும்போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது மஹிந்த அரசுக்கு மிகவும் வெட்கக் கேடாகும். இது போன்ற பொலிஸார் இராணுவத்தினர் வேறு எங்கும் இருக்கமாட்டார்கள் என விக்ரமபாகு கருணாரட்ன மேலும் தெரிவித்தார். (அ-2)

# கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரிப்பு

(நெட்பானா)

வவுனியா நெளுக்குளம் பிரதேச சபை அமைந்துள்ள பிரதான வீதிகளில் கட்டாக்காலி நாய்கள், கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் நாளாந்தம் பயணிகள் பாதிப்படைவதனால் விபத்துக்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்பாக அமைகின்றது.

அத்துடன் இரவு வேளைகளில் இவ்வீதி முழுவதும் கால்நடைகளின் ஆதிக்கமே அதிகரித்துக் காணப்படுகின்றது.

நெளுக்குளம் சந்தி தொடக்கம் வீரபுரம் வரையும் இரவுவேளைகளில் கால்நடைகள் படுத்துறங்கும் இடங்களாக பிரதான வீதிகள் காணப்படுகின்றன.

எனவே நாளாந்த செயற்பாடுகளையும் போக்குவரத்துக்களையும் இலகுபடுத்தி விபத்துக்களை தவிர்ப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-260)

# புதிய உயர்ஸ்தானிகருக்கு விசா வழங்கப்படவில்லை

(கொழும்பு)

இந்தியாவிற்கான புதிய உதவி உயர்ஸ்தானிகருக்கு இன்னமும் விசா வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவிற்கான இலங்கை உதவி உயர்ஸ்தானிகராக கடந்த டிசம்பர் மாதம் சுபாரு ல்லா கா்னின் நியமிக்கப்பட்டார்.

எனினும் அவருக்கான விசா அனுமதி கடந்த மூன்று மாதங்களாக வழங்கப்பட வில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இந்திய மத்திய அரசாங்கம் இன்னமும் சுபருல்லாவின் நியமனத்தை இன்னும் ஏற்றுக் கொள்ளப்படாமையே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்னும் உதவி உயர்ஸ்தானிகருக்கு விசா வழங்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ள வெளியுறவுகள் துறை அமைச்சின் பேச்சாளர் கருணாதிலக அமுனுகம அவரது நியமன அங்கீகாரத்தை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். (அ-2)

# 42 மூடை தேயிலை லொறியுடன் கொள்ளை

(கொழும்பு)

பசறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தேயிலை லொறி ஹப்புத்தளை கஹகல்ல பிரதேசத்தில் வழி மறித்து கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பசறைபிரதேசத்திலுள்ளதேயிலை கம்பனி ஒன்றிற்குச் சொந்தமான லொறியொன்று அண்மையில் 42 தேயிலை மூடைகளுடன் கொழும்பு நோக்கிச் சென்றது.

குறித்த லொறி ஹப்புத்தளை சந்தியை நெருங்கிய போது அருகாமையிலுள்ள கஹகல்ல தோட்டப் பகுதியில் கப்வாகனமொன்றில் வந்த சிலர் லொறியினை வழிமறித்து சுமார் 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 42 மூடையுடன் லொறியினை பண்டாரவளை ஹீல்ஓய பிரதேசத்திற்கு கடத்திச் சென்றுள்ளனர். (அ-2)

# மோசம் போய்விட்டோம்; ஆஸி. அகதிகள் கதறினர்

அவுஸ்திரேலியாவுக்கு படகுமூலம் அழைத்துச் செல்வதாகக் கூறி தங்களை மோசம் செய்துவிட்டதாக இந்தியாவில் கைது செய்யப்பட்ட இலங்கை அகதி கோரிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழகம் வேளாங்கன்னி கடற்பரப்பில் நிர்க்கதியான நிலையில் இருந்த 120 இலங்கை அகதிக் கோரிக்கையாளர்களை இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட 120 இலங்கை அகதிக் கோரிக்கையாளர்களும் தமிழகத்தின் பல்வேறு முகாம்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பெருந்தொகையான பணம் அறவீடு செய்யப்பட்டதாக அகதிக் கோரிக்கையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தங்களை பாதுகாப்பாக அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாக தெரிவித்த சிலர் தமிழகத்தில் இருந்து சுமார் 15 கிலோ மீற்றர் தொலைவுக்கு அழைத்துச் சென்று படகில் இருந்து தப்பிச் சென்றுவிட்டதாக மீட்கப்பட்ட அகதிகள் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளனர். (அ-2)




★217-ரோம் பேரரசின் மன்னன் கரகல்லா படுகொலை செய்யப்பட்டான்.

★1767-தாய்லாந்தின் ஆயுத்தயா பேரரசு பர்மியரிடம் வீழ்ந்தது.

★1857-பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் வங்காள இராணுவத்தைச் சேர்ந்த மங்கல் பாண்டே என்ற சிப்பாய் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டமைக்காக தூக்கிலிடப்பட்டான்.

★1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: லூசியானாவில் மான்ஸ்ஃபீல்ட் என்ற இடத்தில் கூட்டமைப்பு படைகள் கூட்டுப் படைகளை தோற்கடித்தன.

★1866-ஆஸ்திரியா- ஹங்கேரிக்கு எதிராக இத்தாலியும் புருசியாவும் அணி திரண்டன.

★1867-முதலாவது உலக கண்காட்சி பாரிஸ் நகரில் ஆரம்பமானது.

★1899-மார்த்தா பிளேஸ் என்பவர் மின் இருக்கையில் மரண தண்டனை பெற்ற முதற் பெண்.

★1919-பஞ்சாபில் நுழையக் கூடாதென்ற தடையை மீறியதால் மகாத்மா காந்தி டில்லி செல்லும் வழியில் கைது செய்யப்பட்டு மும்பைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

★1929-டில்லி மத்திய அரசு கட்டடத்தில் பகத் சிங் மற்றும் பத்துகேஷ்வர் தத் ஆகியோர் துண்டுப் பிரசுரங்களையும் குண்டுகளையும் வீசி தாமாகவே சரணடைந்தனர்.

★1942-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் பிலிப்பைன்சின் பட்டான் மாநிலத்தைக் கைப்பற்றினர்.

★1950-இந்தியாவும் பாகிஸ்தானும் லியாக்கட் நேரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

★1957-எகிப்தில் சுயஸ் கால்வாய் மீளத்திறக்கப்பட்டது.

★1973-சைப்பிரசில் 32 குண்டுவெடிப்புகள் இடம்பெற்றன.

★2004-சூடான் அரசுக்கும் இரண்டு போராளிக் குழுக்களுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது.

### பிறப்புக்கள்

★1911-மெல்வின் கால்வின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1997)

★1938-கோபி அன்னான், நோபல் பரிசு பெற்ற முன்னாள் ஐக்கிய நாடுகள் அவைப் பொதுச் செயலர்

### இறப்புக்கள்

★1857-மங்கள் பாண்டே, பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் படை வீரர் (பி.1827)

★1931-எரிக் கார்ல்ஃபெல்ட், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர்(பி.1864)


★1936-ரொபேர்ட் பாரானி, மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1876)

**★1973-பாபிலோ பிக்காசோ, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற ஓவியர் (பி.1881)**

★1984-பியோத்தர் காப்பிட்சா, நோபல் பரிசு பெற்ற ரசியர் (பி.1894)

★1992-டானியேல் போவெட், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1907)

### பாபிலோ பிக்காசோ



பாபிலோ பிக்காசோ 1881 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி ஸ்பெயன் நாட்டிலுள்ள மலாகா என்னுமிடத்தில் பிறந்தார். இவர் வரலாற்றில் சிறந்த ஓவியராக குறிப்பிடப்படுகின்றார்.

பிக்காசோவின் ஆக்கங்களைப் பல்வேறு காலப்பகுதிகளாகப் பிரித்துக் குறிப்பிடப்படுகின்றது. அவை நீலக்காலப்பகுதி (1901-1904) இக்காலத்தைச் சேர்ந்த இவரது ஓவியங்கள் பெரும்பாலும் நீல நிறச்சாயை கொண்டவையாகக் காணப்படுவதோடு கழைக் கூத்தாடிகள், விபச்சாரிகள், பிச்சைக்காரர்கள், கலைஞர்கள் போன்றவர்கள் இக்காலத்தில் இவர் வரைந்த ஓவியங்களில் பெரும்பாலும் சித்தரிக்கப்பட்டன.

அடுத்து ஆபிரிக்கச் செல்வாக்குக் காலப்பகுதியாகும். (1908-1909) ஆபிரிக்கக் கலைப் பொருட்களிலிருந்து கிடைத்த அகத் தூண்டல்களின் அடிப்படையில் உருவான ஓவியங்களே இக்காலப்பகுதியில் இவரது படைப்புக்களில் முதன்மை பெற்றிருந்தன.

மூன்றாவது காலப்பகுதியில் பகுப்பாய்வுக் கியூபிசம் (1909-1912) என கூறப்படுகின்றது. இது பிக்காசோவும் பிராக்கும் இணைந்து உருவாக்கிய ஓவியப் பாணியாகும். இந்த ஓவியங்கள் மண்ணிறத் தன்மை கொண்ட ஒரு நிற ஓவியங்களாக இருந்துள்ளன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சித்தர்களால் வழிபடப்பெற்ற பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம்

ஈழநாட்டிலே பெருமைமிகுந்த வழிபாட்டு தலங்கள் பல உண்டு. இவற்றில் ஆண்டு தோறும் பங்குனி மாதத்தில் பெருமை பெற்று விளங்குவது மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயம்.

பங்குனி மாதத்தில் வருகின்ற திங்கட் கிழமைகளில் அதிகாலை முதல் மாலை சூரிய அஸ்தமனம் வரை பொங்கல் செய்து வழிபாடு செய்யும் மரபு இங்கு உண்டு.

குறிப்பாக வடபகுதி மக்கள் அனை வரும் நாலாபக்கத்திலும் இருந்து இங்கு வருவார்கள். பொங்கல் செய்வார்கள்- படையல் செய்வார்கள்- அம்பாள் வழிபாடு செய் வார்கள்- அம்பாள் அவரவர் நேர்த்திகளை நிறைவேற்றி பல அற்புதங்கள் காட்டியுள்ள அற்புதத் அதய்வம் பன்றித்தலைச்சி அம்மன்.

பன்றித்தலைச்சி என்னும் பெயர் வரக் காரணமான செய்தியை சாவகச்சேரி வித்துவான் பொன்னம்பலம்பிள்ளையால் 1934 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூலில் இடம் பெற்றிருக்கிறது.


இவர்களால் இயற்றப்பட்ட ஊஞ்சல் பாடலும் உண்டு. எல்லா நூல்களும் பசு மாட்டைக் கொலை செய்த அம்பாள் பக்தனுக்காக மாட்டுத்தலையை பன்றித்தலையாக மாற்றிய அற்புதச் செயலையே கூறுகின்றன.

**கா. சிவபாலன்**

பன்றித்தலைச்சி அம்பாள் வரலாறு இன்று வரை பூரணமாக வரவில்லை. இதன் பூர்வீகம் எவராலும் அறியமுடியாது இருக்கிறது. ஆயினும் 1750 ஆம் ஆண்டு நாகர் கதிர்காமர் என்பவரால் கட்டப்பட்டது என்ற செய்தியை கி.பி.1884 இல் வெளிவந்த யாழ். கச்சேரி செயலக பதிவு காட்டுகின்றது.

ஈழநாட்டிலே பிரசித்தி பெற்ற சித்தர் பரம்பரையான செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகளுக்கு 1910 ஆம் ஆண்டு 2 ஆம் பங்குனித் திங்களில் திருவடி தீட்சை வழங்கியுள்ளார்.

இதனை யோகர் சுவாமிகளின் 100 ஆவது பிறந்த நாளில் வெளிவந்த இதழில் காலம் சென்ற வடமாநில கல்விப்பணிப்பாளர் திருமதி. இரத்தினம்மா நவரத்தினம் மிகவும் அழகாகவும் தெளிவாகவும் எழுதியிருக்கிறார்.



அம்மையாரின் ஆங்கில நூலில் வெளி வந்தது. அன்று தொடக்கம் இன்றுவுரை யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையினர் இங்கு வருவதும் வழிபாடு செய்வதும் பொங்கல் படையல் செய்வதும் வழமையாக உள்ளது.

யோகர் சுவாமிகளின் சீடர்கள் பரம்பரையாக அடியார்களுடன் சேர்ந்து வழிபாடு செய்து வருவதால் இத்தலம் பெருமை பெறுகின்றது. அம்பாளின் அற்புதங்களால் பலரும் பலவாறு எழுதியும் பேசியும் வருகின்றார்கள். ஒரு காலத்தில் பல மருதமரங்கள் அடியார்களுக்கு நிழல் தந்தது. இன்று இவை கால வெள்ளத்தால் அருகியுள்ளது. ஆயினும் பண்டிதமணி அவர்களால் அம்பாளின் தீர்த்தம் கங்கா தீர்த்தம் எனும் பெருமை பெறும் தீர்த்தம். அடியார்களுக்கு தீர்த்தக் கேணி தீர்த்தத்தை வழங்குகின்றது. மதுரை மீனாட்சி அம்பாள் போன்று பன்றித் தலைச்சி அம்பாளின் இராஜகோபுரம் பொலிவு தருகிறது.

இத்தகைய பெருமை மிகுந்த பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தின் சமையல் செய்யும் மட்டுவில் கத்தரிக்காயும் பொங்கலும் நீர்க்கஞ்சியும் அனைத்து அடியார்களுக்கும் திருவருட்பிரசாதமாக அமைகின்றது.

வழிபாட்டுப் பெருமை பெற்ற பன்றித் தலைச்சி அம்மனை பங்குனித் திங்களில் வழிபாடு செய்வோமாக!

# லண்டனில் பொதுநலவாய நடவடிக்கைக்குழு கூட்டம்

(கொழும்பு)

பொதுநலவாய அமைய நாடுகளின் மாநாட்டை நடத்துவது தொடர்பில் ஆராய்வதற்கான கூட்டமொன்று லண்டனில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அமைச்சர்கள் சார்ந்த பொதுநலவாய நடவடிக்கைக்குழுவின் கூட்டமே எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் 2013 ஆம் ஆண்டுக்கான உச்சமாநாட்டை இலங்கையில் நடத்த வேண்டாம் என்று பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வருகின்ற நிலையிலேயே இந்த நடவடிக்கைக்குழு கூடவிருக்கின்றது. (அ-2)

# வலய மட்ட எல்லே போட்டிகள்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு கல்வி வலய எல்லே போட்டிகள் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளதாக வலயக் கல்விக்கணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தெரிவித்துள்ளார்.

ஆண்களுக்கான எல்லே போட்டிகள் முஸ்லிம் மகா வித்தியாலய அஸ்ரப் மைதானத்திலும் பெண்களுக்கான போட்டிகள் தமிழ் மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும் இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நாளையதினம் 15,16,19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்ட போட்டிகள் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2-266)

# அரசிலிருந்து மு.கா. விலகும் ஆனாலும் விலகாது

## மு.கா. செயலாளர் ஹசன் அலி

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட ஹலால் தொடர்பான அமைச்சரவை உப குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலேயே அரசாங்கத்தில் தொடர்ந்தும் இருப்பதா இல்லையா என்ற இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயலாளர் நாயகம் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இந்த உப குழுவின் அறிக்கை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் அடிப்படைத் திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அரசாங்கத்தரப்புடன் விரிவாக கலந்துரையாடியதாகவும் எனினும் எவ்விதமான உரிய முடிவுகளுக்கு வரமுடியாமல் போனமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து விலகுமாறு முஸ்லிம் காங்கிரசுக்கு முஸ்லிம் சமூகத்திடமிருந்து அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருவதாக கூறப்படுவது தொடர்பில் பதிலளித்துள்ள அவர் அவ்வாறான சில கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள முடியும் என எதிர்பார்த்துள்ளதாகவும் செயலாளர் நாயகம் கூறியுள்ளார். (அ-2)

# 19 ஈழ அகதிகளை காப்பாற்றுங்கள்

## மன்மோகனுடன் பேசினார் வைகோ

கடலில் தத்தளித்த 120இலங்கை தமிழர்களை மீட்க கோரியும் டுபாயில் உள்ள 19 ஈழத்தமிழர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படாமல் தடுக்கக்கோரியும் பிரதமர் மன்மோகன்சிங்குடன் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பாக மதிமுக தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

தற்போது டுபாயில் உள்ள 19 ஈழத்தமிழர்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டால் கடுமையாக சித்திரவதை செய்யப்படுவார்கள். ஏற்கனவே இசைப்பிரியா என்ற தமிழ்ப் பெண் இலங்கை இராணுவத்தால் கொடூரமாகக் கற்பழிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட காட்சிகள் சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியது. தமிழ் மக்களை மிகவும் வேதனை அடையச் செய்துள்ளது. அதேபோன்றதொரு கொடூரம் இப்போது டுபாயில் உள்ள ஹிருணி என்ற பெண்ணுக்கும் மற்றவர்களுக்கும் நேர்ந்து விடக்கூடாது என்பதற்காக உங்களை கேட்கின்றேன்.

அவர்களை எக்காரணம் கொண்டும் கொழும்புக்கு அனுப்ப விடாமல் தடுத்து நிறுத்துங்கள் என்று வைகோ கேட்டுக்கொண்டார். அதற்கு பிரதமர் வெளிவிவகாரத்துறை மூலம் இது குறித்துக் கவனிக்கின்றேன் என்றார் பிரதமர். (அ-2)

# 2100ஆம் ஆண்டளவில் கடல் நீர் மட்டம் உயரும்

## கொழும்பு, காலிக்கு பாதிப்பு

கடல் மட்டம் 2100 ஆம் ஆண்டளவில் உயர்வடையும். இதனால் முக்கிய சில பகுதிகள் நீரில் மூழ்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக சுற்றாடல் அமைச்சின் தொழில்நுட்ப ஆலோசகர் டபிள்யு.எல். சுமதிபால தெரிவித்துள்ளார்.

கடல் மட்டம் உயர்வதனால் வடக்கு, கொழும்பு மற்றும் காலி ஆகிய பிரதேசங்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்பிரகாரம் வடக்கு, வடக்கு அண்டிய சிறிய தீவுகள், காலி வீதி, புகையிரதப் பாதை போன்றன நீரில் மூழ்கக் கூடிய அபாயம் காணப்படுவ தாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த அனர்த்தத்தை எதிர்நோக்க தற்போதிருந்தே ஆயத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக தீவுகளில் வாழ்ந்து வரும் மக்களை வேறும் இடங்களில் மீள்குடியேற்றுவது குறித்த திட்டங்கள் முன்கூட்டியே வகுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கையர்களுக்கு எந்தவித பாதிப்புமில்லை

வடகொரியா விடுத்துள்ள எச்சரிக்கையின் காரணமாக தென்கொரியாவிலுள்ள இலங்கையர்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை என வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவ்வாறாக பாதுகாப்பு பிரச்சினைகள் இருக்கும் பட்சத்தில் இலங்கையர்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார். இலங்கைமக்கள் 25ஆயிரம்பேர் அங்கு கடமையாற்றுவதாக அவர் குறிப்பிட்டார். (அ-2)

# தேசிய மட்டத்தில் சித்தியடைந்த தமிழ் மாணவர்களின் தகவல்கள்வேண்டும்

## இஸ்லாமிய ஆசிரிய சங்கம் கோரிக்கை

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தமிழ் மொழிமூலம் தோற்றி தேசிய மட்டத்தில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் தகவல்களை வெளியிடுமாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு பல நாட்கள் கழிந்து விட்டபோதிலும் இதுவரை தமிழ்மொழிமூலம் தேசிய மட்டநிலை வெளியிடப்படவில்லை.

இதேவேளை சிங்கள மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் தேசிய மட்ட நிலையானது பெறுபேறுகள் வெளிவந்து சில மணிநேரத்திற்குள் வெளியாகியதுடன் அதில் தெரிவானவர்கள் உடனடியாக ஜனாதிபதியினால் கௌரவிக்கப்பட்டுமுள்ளனர். இதே நிலைமை க.பொ.த உயர்தரப்பரீட்சை பெறுபேறுகள் விடயத்திலும் காணப்பட்டது. இச்செயற்பாடானது தமிழ்மொழிமூல மாணவர்களிடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு விடயமாகும்.


இன,மத, மொழி வேறுபாடுகளுக்கப்பால் நீதியாகவும் நேர்மையாகவும் வினைத் திறனாகவும் செயற்பட்டு குறித்த காலத்திற்கு முன்னதாகவே பெறுபேறுகளை வெளியிட்டு சாதனை படைத்துவரும் தங்களது நிர்வாகத்தின் கீழ் இப்படியானதொரு நிலைமை ஏற்படு வது எவராலும் ஏற்றுக் கொள்ளமுடியாது

எனவே இந்நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மேலும் தாமதியாது தமிழ் மொழி மூல பெறுபேறுகளின் தேசிய மட்ட நிலைகளை துரிதமாக வெளியிட்டு கல்வியில் சமவாய்ப்பையும் பாராட்டுதல்களையும் பெற்றுக் கொள்வதற்கு வழியேற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மாடிக்கட்டடம் நான்கு மாடியானது

## கொழும்பில் பயங்கரம்



(கொழும்பு)

கொழும்பு கோட்டை மலிபன் சந்தியில் அமைந்துள்ள ஆறுமாடிக் கட்டடமொன்றின் முதல் இரு மாடிகளும் உடைந்து விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றின் மாடிக்கட்டடமே உடைந்துள்ளதாகவும் கீழ் மாடிகள் நான்கிற்கும் எந்தவித சேதங்களும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேல்மாடிகள் உடைந்து விழும் போது நிலத்தோடிருந்த கீழ் பகுதியுள்ள மாபிள் உடைந்துள்ளது. எனினும் அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறியமையின் காரணமாக உயிர் தப்பியுள்ளனர்.

குறித்த கட்டடத்திற்கு அருகில் மற்றுமொரு கட்டடத்தின் நிர்மாணப்பணிகள் இடம்பெற்று வருவதன் காரணமாகவே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# புலிகள் மீதான தடையை இந்தியா நீக்க வேண்டும்

## வைகோ கோரிக்கை

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஈழப்பிரச்சினைகளுக்காக ஓங்கிக் குரல் கொடுத்து வரும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்று முன்தினம் பெங்களூரில் நடைபெற்ற ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான தமிழ் அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழத்தில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை உலக நாடுகள் இனப்படுகொலை குற்றவாளியாக அறிவித்து தண்டிக்க வேண்டும்.

இந்தியாவில் விடுதலை புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும். இலங்கை அரசு மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும்.தனி ஈழம் அமைய பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என தெரிவித்தார். (அ-2)

# மீனவர்களை விடுவிக்கக்கோரி போராட்டம்

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள 30 மீனவர்களை விடுதலை செய்யக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர். இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 30 பேரை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து இலங்கைக்கு கொண்டு வந்தனர்.

இது தொடர்பாக மீனவர்கள் அமைப்பு கூட்டம் நேற்றையதினம் இராமேஸ்வரத்தில் நடைபெற்றது. இதில் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் இன்று தொடக்கம் காலவரையற்ற போராட்டம் நடத்தப் போவதாகவும் எதிர்வரும் 12 ஆம் திகதி வீதி மறியலில் ஈடுபடவும் முடிவு செய்துள்ளனர். (அ-2)

# ஆட்சிமாறும் அரசியல்வாதிகளின் பதவிகள் பறிக்கப்படவேண்டும்

## கர்தினால் ரஞ்சித்

நாட்டில் கட்சி மாறும் அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கத்தோலிக்க திருச்சபையின் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பிலான யோசனைகள் குறித்த பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் உரையாற்றும் போது கர்தினால் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கட்சி மாறுதல்களைச் செய்யும் அரசியல்வாதிகளின் பதவிகளை பறிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காக இலங்கையின அரசியல் யாப்பில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் சகலருக்கும் நீதி கிடைக்கும் இந்த அரசியல் யாப்பு அமையவேண்டும். மேலும் ஒரு கட்சியில் சபைகளுக்குதெரிவாகி வேறொரு கட்சியில் இணைகின்றவர்களின் பதவிகள் இரத்துச் செய்யும் வகையில் அரசியல் அமைப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஆட்கடத்தல்கள் தொடர்பில் விசாரணைகள் வேண்டும்

## ஐ.நா.முகவர் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

பவவந்தமான காணாமல் போதல்கள் மற்றும் கடத்தல்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென சட்டவிரோத் கடத்தல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் செயற்குழு கோரியுள்ளது. அக்குழு மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு,

கடத்தல்கள், காணாமல் போதல்கள் தொடர்பில் நிலுவையில் உள்ள முறைப்பாடுகள் உரிய முறையில் துரித கதியில் விசாரணை செய்யப்பட வேண்டும்.

கடத்தல், காணாமல் போதல்கள் தொடர்பிலான 5 ஆயிரத்து 676 முறைப்பாடுகள் இன்னமும் நிலுவையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போதல் தொடர்பில் நான்கு முறைப்பாடுகள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் முறைப்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்தின் பதில்கள் திருப்தி அடையக் கூடிய வகையில் இல்லை.

சகல பிரஜைகளையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை எனக் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# ஐக்கிய நாடுகளின் மகள் மலாலா தன்னம்பிக்கையின் சின்னம்

## பான் கீ மூன் புகழாரம்

தலிபான்களால் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட மாணவி மலாலா தன்னம்பிக்கையின் சின்னம் என்று தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஐக்கிய நாடுகள் சபையானது எப்போதும் உனக்கு பக்கபலமாக இருக்கும் எனவும் உன்னைப் போன்ற ஏராளமான மக்களுக்கும் துணையாக இருக்கும் எனவும் மலாலாவிடம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் தலிபான்களால் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட மாணவி மலாலா தற்போது இங்கிலாந்தில் வசித்து வருகிறார். அங்கு மலாலா நிதி என்ற பெயரில் ஓர் நிதியத்தை உருவாக்கி அதன் மூலம் பாகிஸ்தான் பெண் கல்விக்காக அவர் பல்வேறு உதவிகளை செய்து வருகின்றார்.

இந்நிலையில் ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுடன் வீடியோ மூலம் கலந்துரையாடியபோதே பான் கீ மூன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மலாலாவின் உடல் நிலை குறித்து பான் கீ மூன் வினவியதாகவும் அதற்கு பதிலளித்த மலாலா என்னால் நடக்க முடிகிறது, பேச முடிகிறது, என்னால் எதுவும் செய்ய முடியும் என்று பதிலளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த பான் கீ மூன் ஐக்கிய நாடுகளின் மகளான மலாலா தன்னம்பிக்கையின் சின்னம் என்று புகழ்ந்ததுடன் ஐக்கிய நாடுகள் சபை எப்போதும் உனக்கு பக்கபலமாக இருக்கும். உன்னைப்போன்ற ஏராளமான மக்களுக்கும் துணையாக இருக்கும் என தெரிவித்திருந்தார்.

மேலும் நாம் ஒரு பெண்ணுக்கு கல்வியறிவு வழங்குவதன் மூலம் ஒரு குடும்பத்திற்கு ஒரு சமுதாயத்திற்கு ஒரு நாட்டிற்கு கல்வியறிவை வழங்குகிறோம் என பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

இதன்போது தாம் எதிர்காலத்தில் ஒரு தலைவராகி ஒட்டுமொத்த உலகத்திற்கும் சேவையாற்ற விரும்புவதாகவும் பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக உழைக்கப் போவதாகவும் மலாலா தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து மலாலாவின் பேச்சு தன்னை மிகவும் கவர்ந்து விட்டதாகவும் அவரை நேரில் சந்திக்கும நாளை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும் பான் கீ மூன் தெரிவித்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-5)

# விஜய் ரசிகர்கள் பிரதமருக்கு தந்தி அனுப்பி போராட்டம்

தென்னிந்திய நடிகர் விஜய்யின் இரசிகர்கள் தந்தி அனுப்பும் போராட்டத்தில் ஈடுபட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கோவை மாவட்ட விஜய் மக்கள் இயக்கம் சார்பில் இந்திய பிரதமருக்கு தந்திஅனுப்பும் போராட்டம் நடைபெற்றுள்ளது .

அங்குள்ள தந்தி அலுவலகத்தில் இருந்து கோவை மாவட்ட விஜய் மக்கள் இயக்க தலைவர் சம்பத்குமார் தலைமையில் 100 இற்கும் மேற்பட்டோர் தந்தி அனுப்பியுள்ளனர். அவர்கள் அனுப்பிய தந்தியில் இலங்கையில் நடக்கவுள்ள பொதுநலவாய மாநாட்டுக்கு இந்தியா செல்லக்கூடாது. இலங்கையில் பொது வாக்கெடுப்பு நடத்தி தமிழர்களை பாதுகாக்க வழிவகை செய்ய வேண்டும் போன்ற வாசகங்கள் அடங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)






இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் காரைக்கால் அம்மையார் குருபூசை வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையுரையாற்றுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- பூந்தோட்டம் செய்தியாளர் )*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த உயிரிழப்புக்களை கணக்கெடுக்க வெளிநாட்டு உதவி அவசியமில்லை

## கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

யுத்த உயிரிழப்புக்கள் தொடர்பில் கணக் கெடுப்பு நடத்த வெளிநாட்டு உதவிகள் அவசியமில்லை.

முல்லைத்தீவு உள்ளிட்ட யுத்தம் இடம் பெற்ற அரசாங்க அதிபர் காரியாலயங்களில் யுத்த உயிரிழப்புக்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் உயிரிழந்தவர்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள புலம்பெயர் தமிழர்கள் மற்றும் வெளிநாடுகளின் ஒத்துழைப்பு அவசியம் என அரசாங்கம் அறிவித்திருந்தது.

சர்வதேச சமூகத்தையும் நாட்டு மக்களையும் திசை திருப்பும் மற்றுமொரு முயற்சியாகவே அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை கருத வேண்டும். யுத்தம் தொடர்பான அரசாங்கத்தின் புள்ளி விபரத் தரவுகள் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் 70 ஆயிரம் மக்கள் யுத்த வலயத்தில் சிக்கியிருப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. பின்னர் 2 இலட்சத்து 87 ஆயிரம் இடம்பெயர் மக்கள் அரசாங்க முகாம்களில் அடைக்கலம் புகுந்தனர்.

உள்நாட்டு தரவுகளைக் கொண்டே சரியான விபரங்களை வெளியிட முடியாத நிலையில் வெளிநாட்டு உதவிகளையும் பெற்றுக் கொண்டால் புள்ளி விபரங்கள் மேலும் குழப்பமாகவே அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# காணாமல் போதல் நிகழ்வுகளை கிடப்பில் போட்டுவிட முடியாது

## எம்.ஏ.சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக கடத்தல், காணாமல் போதல்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டியது நல்லிணக்கத்தின் அடிப்படையாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் குறித்த முறைப்பாடுகளை அப்படியே கிடப்பில் போட்டுவிட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கடத்தல்கள், காணாமல் போதல்கள் தொடர்பில் இதுவரையில் உரிய முறையில் விசாரணை நடத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நம்பகமானதும் சுயாதீனமானதுமான சர்வதேச விசாரணைகளைநடத்துவதன்மூலம் இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வினை வழங்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் முன்னிலையில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போதல் மற்றும் கடத்தல்கள் தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க அரசாங்கம் தவறியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# புத்தாண்டுக்கு முன்னர் திடீர் சுற்றிவளைப்புக்கள்

## வர்த்தக நிலையங்களில்

(கொழும்பு)

தமிழ், சிங்களப் புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகளை கட்டுப்பாடின்றி தமது விருப்பின் பேரில் அதிகரிக்க இடமளிக்கப்பட மாட்டாதென அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நிறைகுறைவாக உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள், பாவனைக்கு உதவாத உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சீனி உட்பட உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் ஆகியோரும் வளைத்துப் பிடிக்கப்படுவர். நாடு பூராகவும் இதற்கான திடீர் தேடுதல் களை நடத்துமாறு பாவனையாளர் அதிகார சபைக்கு அமைச்சர் உத்தரவுகளை வழங்கியுள்ளார்.

இதற்கமைய இன்று முதல் நாடு முழுவதும் கடைகளின் பொருட்கள் புரிசோதிக்கப்படும் பாவனையாளர்கள் சேவை அதிகார சபையின் அதிகாரிகளும் பொது சுகாதாரப் பரிசோதகர்களும் இதற்குத் தயாராகவுள் ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் பாவனைக்கு உதவாத அத்தியாவசியப் பொருட்களை விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வந்த 2 ஆயிரம் வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அபராதம் திரட்டவும் பாவனையாளர் சேவை அதிகர்ர சபைநடவடிக்கை எடுத்தது. (அ-2)

# இடநெருக்கடியால் இடம் மாறிய சந்தை

(கரணவாய்)

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு கரவெட்டி பொதுச்சந்தையில் அங்காடி வியாபாரிகளுக்கு வதிரி முன்பள்ளி வளாகத்தில் இடம் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த பொதுச்சந்தையில் அங்காடி வியாபாரிகளுக்கு இடவசதி போதாமையாலேயே மேற்குறித்த இடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபை தவிசாளர் அறிவித்துள்ளார். (அ-3-60)

# மாங்குளத்தில் பொதுச்சந்தை அமைக்குமாறு கோரிக்கை

(மல்லாவி)

மாங்குளத்தில் பொதுச்சந்தை இல்லாத காரணத்தினால் பொதுமக்கள், விவசாயிகள், உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இப் பொதுசச்சந்தையானது ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கும் சொந்தமானது. வன்னி இறுதி யுத்தத்திற்கு முன் மிகவும் சிறப்பாக இயங்கியது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மாதாந்த அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக பலமுறை சுட்டிக் காட்டப்பட்ட போதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது இதற்கென ஒதுக்கப்பட்ட காணியும் அத்துமீறி பலரால் அபகரிக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. மேலும் இச்சந்தை ஏ9 வீதிக்கு அண்மையில் இருப்பதால் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் முன்னர் இதனை பயன்படுத்தி வந்தனர்.

7 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளும் உற்பத்தியாளர்களும் தமது மரக்கறி உற்பத்திப் பொருட்கள் உட்பட தமது உற்பத்திப் பொருட்களை இங்கு சந்தைப்படுத்தி வந்த நிலையில் தற்போது பெரும் பணம் செலவு செய்து கிளிநொச்சி, மல்லாவி ஆகிய இடங்களில் உள்ள பொதுச் சந்தைகளையே நாட வேண்டியுள்ளது.

இங்குள்ள தனியார் கடைகளில் சுகாதார மற்ற முறையிலும் அதிக விலையிலும் மரக்கறி விற்பதால் தாம் பாதிக்கப்படுவதாக நுகர்வோர் கூறுவதுடன் தமக்கு மிக விரைவாக பொதுச்சந்தை ஒன்றை ஆரம்பித்து தரவேண்டும் என இத் துறைசார்ந்த அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-15)

# விரைவாக விண்ணப்பிக்குக!

வன்னியில் இடம்பெற்ற போரின் போது வீடுகள், உடைமைகள் உட்பட சொத்தழிவுக்கு உட்பட்ட பொதுமக்களை மிக விரைவாக இழப்பீட்டிற்காக விண்ணப்பிக்குமாறு முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லை.மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு, துணுக்காய் மாந்தை கிழக்கு ஒட்டுசுட்டான், கரைதுற்றைப்பற்று வெலிஓயா ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் நிரந்தரமாக வசித்து போரின் போது பாதிக்கப்பட்ட மக்களை மேற்படி நஷ்டஈட்டிற்காக விண்ணப்பிக்குமாறு கோரியுள்ளார். விண்ணப்பிக்கவுள்ளோர் தங்கள் பகுதி பிரதேச செயலகங்களோடு தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களை பெற்று பூரணப்படுத்தி தங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாகவே புனர்வாழ்வு மறுசீரமைப்பு அமைச்சுக்கு காலதாமதம் செய்யாது உடன் அனுப்புமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# க.பொ.த.(சா/த) பரீட்சை முடிபுகள்-2012

**யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்**

கி.சாய்ரூபன்- 9ஏ, க. மதனாகரன்- 9ஏ, ஸ்ரீ.கார்த்திக்- 9ஏ, க.பூங்குன்றன் -8ஏசி, வி.சத்தியப்பிரியன்-8ஏசி, த.அனோசன்-8ஏஎஸ், கி.அபிரா-8ஏஎஸ், ச.விதுர்ஷா-8ஏஎஸ், நே.ராஜமனோகரி-8ஏஎஸ், ர.செந்தூரன்-7ஏ2பி, வி.அஜந்தன்-7ஏ2பி, த.தினேஸ்-7ஏபிசி, யோ.சஜந்தன்-7ஏபிசி, பி.ராம்கி-7ஏபிசி, ச.சுதாகர்-7ஏபிசி, சி.சுஜீபன்-7ஏபிசி, ஏ.அலன்றொக்ஸி-6ஏ 2பிசி, சி.கோகுலன்-6ஏ2பிசி, தி.நிருசன்-6ஏ2பிசி, நா.துஷானி-5ஏ4பி, பா.ஆதர்சன்-5ஏ2பி2சி, சி.தனுசன்-5ஏபி3சி, அ.அஜித்தா-5ஏபி3சி.

**ஆங்கில மொழிமூலம்**

த.துவாரகா-8ஏ பி, லி.விதுர்ஷா -7ஏபிசி, ம.ஆரணி-6ஏ2பிசி பி.மயூரியா- 6ஏ2பிஎஸ்.

**யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

க.பிரியங்கா -9ஏ , கி.கஜானி -8ஏபி , சு.வராயினி-8ஏபி , சு.ரம்ஜயா -8ஏபி , உ.உதிர்சியா -7ஏபிசி , ச.ஜெயந்தினி-6ஏ3பிசி, நி.கஜிந்சனா -6ஏபி2சி , ந.தர்சினி- 6ஏ3சி எஸ் , செ.செந்தாரகா -5ஏபி3சி.

**யா/மகாஜனக் கல்லூரி**

இ.மகிந்தன் -7ஏபிசி (இக் கல்லூரி மாணவர்களின் (சா/த) முடிபுகள் ஏற்கனவே வெளியாகி விட்டன)

**யா/ஹாட்லிக் கல்லூரி**

ஆர்.கீர்த்தனன்-9ஏ ,கே.பானுகோபிகன்-9ஏ, எஸ்.கௌசிகன்-9ஏ, ஆர்.துஷானன்-9ஏ, ஆர்.கோகுலன்-8ஏபி, எஸ்.பிரதீஸ்-8ஏபி, எம்.மனோஜ்- 8ஏபி, எம்.சிவதர்சன்-8ஏபி, ரி.நிதாகரன்-8ஏபி, கே.இசைப்பிரியன் -8ஏபி, ஜே.கௌதமன்-8ஏபி, கே.மகிந்தன்-8ஏசி, ஜே.வசீ கரன்-8ஏசி, ஆர்.இராமகிருஷ்ணன்-8ஏசி, ஜே.அமுதீசன்-8ஏசி. (19)

# புத்தாண்டு காலத்தில் விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

தமிழ், சிங்களப் புத்தாண்டு காலத்தில் பொருட்களை கொள்வனவு செய்யவரும் பாவனையாளரின் பாதுகாப்புக்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

மாறுவேடம் தரித்த பொலிஸார் பிரதான நகர நெடுந்தூர பஸ்களில் ஈடுபடுத்தப்பட்டு முடிச்சிமாறிகளிடம் இருந்து பிரயாணிகளைப் பாதுகாக்கும் தீட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

நடமாடும் ரோந்து சேவைகளும் தீவிரப் படுத்தப்படும். பாதசாரிகளினதும் வாகனம் செலுத்துநர்களினதும் தவறுகள் தொடர்பாக கடும் கண்காணிப்பும் மேற்கொள்ளப்படும்.

இத்தகையோரைக் கைது செய்யவும் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க சிரிவர்தன தெரிவித்தார். (அ-2)





சரசாலை வடக்கு நித்திலா மகளிர் சங்கம் மக்கள் வங்கி சாவகச்சேரி கிளையுடன் இணைந்து சர்வதேச மகளிர் தின வாரத்தை முன்னிட்டு "வனிதையருக்கான சேமிப்பு" [illegible] நிகழ்வொன்று நடைபெற்றது. இதன்போது மக்கள் வங்கி முகாமையாளர் க. சண்முகலிங்கம் [illegible] கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இருமல் கிழவியை கலைத்துவிட
தும்மல் கிழவி வந்தாளாம்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தந்தை அரிசி தந்தார் தனயன் உமி தருகிறார்

மன்னார் ஆட்சி காலத்துக் கதை இது. ஒரு நாட்டைக் கஞ்சத்தனம் மிக்க மன்னன் ஒருவன் ஆட்சி புரிந்து வந்தான். மக்களிடமிருந்து அதிக வரியை - அதிக பொருட்களைப் பெற்றுக் கொள்வதே சிறந்த ஆட்சி என்பது அவனின் நினைப்பு.

இம்மன்னன் ஒருநாள் நாட்டு மக்களுக்கு ஒரு அறிவித்தலை விடுத்தான்.

மக்களே! நீங்கள் உங்களிடம் வைத்திருக்கின்ற நெல் மூடைகளை என்னிடம் கொண்டு வந்து தாருங்கள்.

நீங்கள் தரும் பத்து மூடை நெல்லுக்கு ஒரு மூடை அரிசி என்ற கணக்கில் உங்களுக்கு அரிசி தரப்படும் என்றான்.

மன்னனின் அறிவித்தலைக் கேள்வியுற்ற மக்கள் கதிகலங்கினார்கள். என்ன செய்வது! மன்னர் கட்டளையாயிற்று என்று பயந்து தங்களிடம் இருக்கக்கூடிய நெல் மூடைகளை கொண்டு சென்று மன்னனிடம் ஒப்படைத்தனர்.

மன்னனின் இம்மோசடியைச் சகிக்க முடியாத மக்கள் இந்த மன்னன் மிகவும் கொடுமையானவன் என்று மன்னனைத் திட்டினார்கள். மக்களின் திட்டல் மன்னனுக்கு மகா வேதனையைக் கொடுத்தது.

ஒருநாள் தன் மகனை அழைத்து மகனே! மக்களிடம் பத்து மூடை நெல்லைப் பெற்று ஒரு மூடை அரிசியைக் கொடுக்கிறேன். இருந்தும் மக்கள் என்னைக் குறை கூறுகிறார்கள். நான் என்ன செய்வேன்?

இந்த நாட்டு மக்கள் என்னை நல்ல மன்னன் என்று சொல்வதற்கு நான் என்ன செய்தாக வேண்டும் என வினவினான் மன்னன்.

தந்தையின் கவலையைப் புரிந்து கொண்ட இளவரசனாகிய மகன், தந்தையே! நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறேன். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். இதைச் செய்யுங்கள். நான் உங்களுக்கு நற்பெயர் ஏற்பட உதவி செய்கிறேன் என்றான்.

மகனின் விருப்பப்படி தந்தை ஓய்வெடுக்க தனயன் அரியணை ஏறினான். புதிய மன்னனின் ஆட்சியில், புதிய அறிவிப்பு. நாட்டு மக்களே! உங்களிடம் இருக்கக்கூடிய அத்தனை நெல் மூடைகளையும் மன்னனிடம் கொண்டு வந்து கொடுங்கள்.

பத்து மூடை நெல்லுக்கு ஒரு மூடை உமியென்ற கணக்கில் மன்னன் உங்களுக்கு உமி தருவார் என்று அறிவித்தான்.

புதிய மன்னனின் அறிவிப்பால் மக்கள் குழம்பினர். அட! முந்தைய மன்னன் எவ்வளவோ திறம் என்று வாழ்த்தினர்.

இந்தக் கதையை நினைக்கும் போது, இந்தியப் பிரதமராக இருந்த காலஞ்சென்ற ராஜீவ் காந்தி, அவரின் மகன் ராகுல் காந்தியும் ஞாபகத்துக்கு வருவர்.

ராஜீவ் காந்தி ஈழத் தமிழர்களுக்கு அரிசி தந்தார். ஆனால் அவரின் மகன் ராகுல் காந்தியோ எங்களுக்கு உமி தருகிறார். இதில் உமியைத் தரும் ராகுல் காந்தி நல்ல மொட்டைக் கறுப்பன் அரிசி கொடுத்தேன் - கொடுப்பேன் என்று கூறுவதுதான் மிகப் பெரிய கொடுமை.

இந்தக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாயின் அதற்கு ஆட்சி மாற்றம் தான் ஒரே வழி.

# மதம் சார்ந்த தாக்குதல்களுக்கு கிறிஸ்தவ அமைப்பு கண்டனம்

(பூந்தோட்டம்)

கடந்த சில மாதங்களாக முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் தங்களின் மத அனுஷ்டானங்கள் சம்பந்தப்பட்டவைகளில் பலவித தாக்குதல்களுக்கு உள்ளான சம்பவத்தினை தாம் கண்டிப்பதாக இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேச ஐக்கியத்துவம் அமைப்பு நேற்று அறிக்கையொன்றினை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் பெரும்பான்மை அல்லாத சமயத்தை பின்பற்றுவோருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட நடவடிக்கைகள் குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

அத்துடன் முஸ்லிம் மதத்தினருக்கு சொந்தமான வியாபார ஸ்தாபனங்கள் தாக்குதலுக்கு உள்ளானதோடு, முஸ்லிம் பெண்கள் தங்களின் மத சார்பான உடையுடன் செல்லும்போது தாக்குதலுக்கும் அசௌகரியத்திற்கும் உள்ளானார்கள்.

இத் தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டோருக்கு தண்டனை அமுல்படுத்தப்படவில்லை. பல சம்பவங்களுக்கு புகைப்பட, வீடியோ ஆதாரங்கள் இருந்தும், பல சம்பவங்கள் கண் எதிரே நடைபெற்ற போதும் இச் சம்பவங்களில் ஈடுபட்டோர் கைது செய்யப்படவோ, தண்டனைகள் வழங்கப்படவோ இல்லை.

சிறுபான்மை மதத்தினரின் மனித உரிமைகள், சுதந்திரம், மத உரிமை, கலாசாரம், பொருளாதாரம் என்பவைகள் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்ட போது சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அதிகாரிகள் பலர் பாராமுகத்துடன் அலட்சியமாக செயல் பட்டார்கள்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலான யுத்தத்திற்கு பின்னால் ஐக்கியத்தையும் ஒப்புரவையும் நோக்கிய இலங்கையின் பயணத்தில் சிறுபான்மையினருக்கு எதிரான அச்சுறுத்தல்களும் தாக்குதல்களும் தொடர எவ்விதத்திலும் இடமளிக்கக் கூடாது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குழுவின் முன்னிலையில் கூறப்பட்டவைகளில் இரண்டு நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த இலங்கை கால அவகாசம் கேட்டுள்ள நிலையில் இவ்விதமான சிறுபான்மையினருக்கு எதிரான அச்சுறுத்தல்களும் தாக்கங்களும் இலங்கையின் நம்பிக்கையை குறைத்து, கோரப்பட்ட கால அவகாச வேண்டுகோளை போலியானதொன்றாகவும் அமைக்கிறது.

இச் சம்பவங்களில் இரண்டு பயமுறுத்தும் காரணிகளை காணலாம். முதலாவது இத்தாக்குதல்கள் இரண்டு குழுவினரால் ஒழுங்கு படுத்தப்பட்டு முன்னெடுக்கப்படுகிறதாக தெரிகிறது. இதனால் அக் குழுக்கள் தொடர்ந்து செயல்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள்.

இரண்டாவது காரணி இவ் இரண்டு குழுக்களும் அதிகாரிகளின் ஆதரவையும் தயவையும் பெற்றிருப்பதால் தண்டனைக்குட்படாதபடி செயல்படக் கூடியவர்களாக இருக்கிறார்கள் எனவும் தெரிகிறது.

இலங்கை யாப்பின் படி வழங்கப்பட்டுள்ள மனிதவுரிமைகளை அனுபவிக்க போராடுவதோடு நாமும் எமக்கு எதிராக குற்றம் செய்பவர்களுக்கு எதிராக இப்போதும் இனியும் பதில் தாக்குதல் தொடுக்க மாட்டோம்.

எனினும் இ.தே.கி.சு.ஐ. ஆனது பல மத, கலாசார சமூகத்தின் சமத்துவத்தை பேணுவதில் இலங்கை அரசாங்கமானது தனது நிலைப்பாட்டை தெளிவாக கூற வேண்டும் எனவும் தீவிரவாதக் குழுக்களை ஆதரிக்கும் நடவடிக்கைகளையும் ஆதரிக்கும் பேச்சுக்களையும் அரசியல் ஆதரவுகளையும் தவிர்க்கும் படியும் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அதிகாரிகள் பெரும்பான்மையினருக்கு ஆதரவை அளிப்பதை தவிர்க்கும் படியும் சட்டத்தை நிலைநிறுத்தி சமாதானத்தை நிலை நாட்டுமாறும் வலியுறுத்துகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-266,160)

## முன்னாள் பொலிஸ் அதிகாரி சடலமாக மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை அன்புவெளிபுரம் பகுதியில் உயிரிழந்த நிலையில் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அவர் ஏற்கெனவே 13 வயதான சிறுமியொருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மீதான விசாரணைகள் இடம்பெற்று வந்த தருணத்தில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். எனினும் குறித்த மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்ற ரீதியில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் அவரது வீட்டில் இருந்து நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டமை குறித்து விரிவான விசாரணை முன்னெடுக்கு மாறு திருகோணமலை பதில் நீதவான் ரி.திருச்செந்தில்நாதன் உத்தரவிட்டுள்ளார். (செ-4)

# உதவிக்கரம் நீட்டுங்கள்

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் தற்போது இரு சிறுநீரகங்களும் பழுதடைந்துள்ளமையால் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்கும், சிறுநீர்ப்பை, முள்ளந்தண்டு ஆகியவற்றில் காணப்படும் வெடிகுண்டு துகள்களை அகற்றுவதற்கும் கோபாலகிருஸ்ணன் ராகுலன் (வயது 28) என்ற இளைஞருக்கு உதவிக்கரம் நீட்டுமாறு கைதடி வறுமையின் கரங்கள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி சத்திர சிகிச்சைக்கு பெருமளவு நிதி தேவைப்படும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ள நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இவரது தந்தையார் குறித்த தொகைப் பணத்தை திரட்ட முடியாமையாலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவருக்கான ஆரம்ப மருத்துவ செலவுகளை வறுமையின் கரங்கள் அமைப்பு பொறுப்பேற்றுள்ளதுடன் இறுதிக்கட்ட மருத்துவ செலவுக்கு பொது மக்கள், நலன்விரும்பிகளின் நன்கொடையினை குறித்த அமைப்பு கோரியுள்ளது. எனவே உருக்கமான இவ்வேண்டுகோளை ஏற்று இவ் உயிரைக் காத்து உதவிக்கரம் நீட்டுமாறு வேண்டப்படுகிறது.

மேற்படி நிதியுதவி புரிய விரும்பு வோர் இலங்கை வங்கியின் 74090026 என்ற வங்கிக் கணக்கில் நிதியினை வைப்பில் இட முடியும் என்பதோடு மேலதிக விபரங்களை 0773713129 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (செ-5)

## மாகாண மட்ட மரதன் ஓட்ட போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மரதன் ஓட்ட போட்டி கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி வலயம் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளதாக வடமாகாண கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் தெரிவித்துள்ளார். இதனடிப்படையில் போட்டி முடிவுகள் வருமாறு,

**ஆண்கள் பிரிவு :** முதலாமிடம் ரி.அன்டன்டெல்மன் கிளிநொச்சி வலயம், கிளிநொச்சி மத்திய கல்லூரி. இரண்டாம் இடம் பி.சுகந்தன் கிளிநொச்சி வலயம், வட்டக்கச்சி மகா வித்தியாலயம். மூன்றாம் இடம் ஆர்.சாந்தன் வவுனியா வடக்கு வலயம், சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை.

**பெண்கள் பிரிவு :** முதலாமிடம் ரி.தர்சிகா வவுனியா வடக்கு வலயம் சின்னடம்பன், பாரதி வித்தியாலயம். இரண்டாம் இடம் கே.ரதிகா வவுனியா வடக்கு வலயம், புளியங்குளம் இந்துக் கல்லூரி. மூன்றாம் இடம் [illegible] வவுனியா வடக்கு வலயம், நெடுங்கேணி மகா வித்தியாலயம். (செ-2,266)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### சாந்தம்



நாம் உடலால் வேறுபட்டு இருக்கின்ற போதிலும் உள்ளம் என்ற நிலையால் நமக்கும் தெரியாமலே உலக மக்கள் அனைவரோடும் ஒன்றுபட்டே இருக்கின்றோம்.

ஆகவே நாம் சிந்தனை செய்யும் போது நமது அறிவின் கூர்மைக்கும், வேகத்திற்கும் ஏற்ப, பல அறிஞர்களோடு ஒன்றுபடுகின்றோம். நமது அனுபவத்திற்கு எட்டாத விடயங்கள் பலவற்றை நாம் அறிந்து கொள்வதே இதற்கு சான்று.

இதேபோன்று நாம் கோபம் அடையும் போது பல முரடர்களோடும் முட்டாள்களோடும் ஒன்றுபடுகின்றோம். நாம் விரும்பாத, நாமே வெட்கப்படத்தக்க, நாமே வருந்தத்தக்க சில செயல்களை நாம் கோபத்தின் போது செய்து விடுவதே இதற்கு சான்று ஆகும்.

நமது கோபத்தை அடக்கிக் கொள்ள நம்மால் முடியவில்லை எனில் பிறர்மீது எப்படி ஏன் கோபம் கொள்ளவேண்டும் என்று ஒரு கேள்வியை எழுப்பிக் கொள்ளவேண்டும்.

நாம் சாந்தமாக இருக்கும்போதெல்லாம் நாம் கோபத்தை ஒழித்துவிடுவேன் என்ற திடசங்கற்பத்தைப் பல தடவை செய்து கொண்டு விழிப்போடு இருந்தால் முதலில் சில சமயங்களில் தோல்வி அடைந்தாலும் பின்பு நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

வருமானம் கிடைக்கும் போது சேமித்து வைக்கும் பணம் தேவையான போது உதவியாவதைப் போல் சாந்தமாக இருக்கும் போது கொள்ளும் உறுதி, கோபம் எழும் போது வாழ்வில் ஒரு புதிய திருப்பம் உண்டாக முன்வந்து நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறைக்கு 70 கோடி ஒதுக்கீடு

## ஜெயலலிதா கோரிக்கை

புதுடில்லியில் முதல் மந்திரிகள், நீதிபதிகள் மாநாடு நடைபெற்று வருகிறது. இதில் தமிழகத்தின் சார்பில் அளிக்கப்பட்ட அறிக்கையில் முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்திருப்பதாவது,

தமிழக முதலமைச்சர் நீதித்துறை கட்டமைப்புக்களை வலுப்படுத்த மத்திய அரசு நிதி ஒதுக்க வேண்டும்.

கடந்த 2010 ஆண்டுக்கு பின்பு இரண்டு முறை நீதித்துறைக்கான நிதியை மத்திய அரசு தரவில்லை.

மேலும் நீதித்துறை கட்டமைப்புக்களை வலுப்படுத்த நீதித்துறைக்கு ஆண்டுக்கு 70 கோடி ரூபாவை மத்திய அரசு ஒதுக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழக அரசு நீதித்துறைக்கு வரவு செலவில் 675 கோடி ரூபா ஒதுக்கியுள்ளது. நடப்பாண்டு மாநிலத்தில் 105 நீதிமன்றங்கள் அமைக்க உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் நகராட்சி நிர்வாகம், சட்டம், நீதிக்கான அமைச்சர் கே.பி.முனுசாமி இந்த மாநாட்டில் பங்கேற்று முதலமைச்சர் ஜெயலலிதாவின் அறிக்கையை மாநாட்டில் வாசித்தார். அறிக்கையில்,

பிராந்திய மொழி வழக்காடு மொழியாக இருக்க வேண்டும். அப்போதுதான் சாதாரண மக்களும் நீதித்துறை நடவடிக்கைகளில் தங்களை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்ள முடியும். எனவே சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாகப் பயன்படுத்த வேண்டும் என்று ஜெயலலிதா கூறியுள்ளார். (அ)

# முட்டை இல்லாமல் குஞ்சை ஈன்ற கோழி

## ஆந்திராவில் அதிசயம்

ஆந்திராவில் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் கோழி ஒன்று முட்டையிடாமல் நேரடியாக குஞ்சை ஈன்ற அதிசயச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கிழக்கு கோதாவரி மாவட்டம் ரவுத்துலபுரம் கிராமத்தில் ஒருவர் வளர்த்து வந்த நாட்டுக் கோழி வீட்டில் உள்ள கூடையில் முட்டையிட்டு வந்துள்ளது.

சம்பவ தினத்தன்று அவர் கூடையில் இருந்த முட்டையை சேகரிக்க சென்றபோது கூடையில் முட்டைக்குப் பதில் 2 கோழி குஞ்சுகள் இருந்துள்ளன. முட்டைக்குப் பதிலாக கோழி நேரடியாக குஞ்சை ஈன்று இருந்தது. எனினும் சிறிது நேரத்தில் அந்த குஞ்சு இறந்துவிட்டது.

குறித்த தகவல் கிராமம் முழுவதும் பரவியது. இந்த அதிசயத்தை காண கிராம மக்கள் அனைவரும் அவரது வீட்டில் குவிந்துவிட்டதுடன் கால்நடைத்துறை வைத்தியரும் குஞ்சை பரிசோதித்திருந்தார்.

மேற்படி சம்பவத்திற்கு கோழியின் உடலில் கல்சியம், பொஸ்பரஸ் சத்து இல்லை எனவும் முட்டை ஓடு தயாராகாமல் குஞ்சு இறந்து தான் பிறந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# 8 பேரின் தூக்குக்கு இடைக்கால தடை

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கடந்த மாதம் தூக்கு தண்டனைக்காக காத்திருந்தவர்கள் அனுப்பிய கருணை மனுக்கள் குறித்து இறுதி முடிவு எடுத்துள்ளார். அவற்றில் 8 பேரின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து அவர்களின் மரண தண்டனை உறுதி செய்யப்பட்டன.

இந்நிலையில் நீதிபதிகள் பி.சதாசிவம் மற்றும் எம்.வை.இக்பால் ஆகியோர் அடங்கிய பெஞ்ச் நேற்று முன்தினம் ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் அமைப்பைச் சேர்ந்த என்.ஜி.ஓ.ஊழியர் ஒருவர் தாக்கல் செய்திருந்த பொது நல வழக்கை விசாரித்தனர்.

அதில் மிக காலதாமதமாக கருணை மனுக்கள் ஜனாதிபதியால் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு உள்ளன. இதனை அடுத்து இந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு உள்ளன.

எனவே இச்சூழ்நிலையை கருத்தில் கொண்டு மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனை தொடர்ந்து நீதிபதிகள் குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டனர். (அ)

# பாரதத்தில் ஊழல் மோசமாக பெருகி விட்டது-ஹசாரே

சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே மத்திய அரசுக்கு எதிராக ஜன தந்திரா யாத்திரை மேற்கொண்டு வருகின்றார்.

அரியானாவில் ஹிசார் நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் அன்னா ஹசாரே பேசுகையில், ஆங்கிலேயர்களை விட நமது நாட்டு அரசியல்வாதிகள் பெருமளவு ஊழல் செய்து வருகின்றனர்.

கடந்த 150 ஆண்டுகள் ஆங்கிலேயர் ஆட்சியில் இல்லாத அளவிற்கு இந்திய அரசியல்வாதிகளின் ஊழல்கள் பெருகிவிட்டன. லோக்பால் மசோதா கொண்டுவரும் விவகாரத்தில் மத்திய அரசு மக்களை ஏமாற்றுகிறது. இதனை விரைவில் உணர்ந்தமக்கள்வரப்போகும்பொதுத் தேர்தலில் வெளிப்படுத்துவார்கள் என்றார். (அ)

# கட்டட இடிபாடுகளுக்கு மத்தியில் உயிர் தப்பிய பச்சிளங் குழந்தை

மும்பை புறநகர் பகுதியான தானேயில் அடுக்குமாடி கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 73 ஆக உயர்ந்துள்ள நிலையில் இடிபாடுகளில் சிக்கிய 10 மாத குழந்தை அதிர்ஷ்டவசமாக உயிர்பிழைத்துள்ளது.

மும்பை புறநகர் பகுதியான தானேயில் புதிதாக கட்டப்பட்டு வந்த 7 மாடி கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை திடீரென இடிந்து விழுந்தது.


இதில் அந்த அடுக்கு மாடியின் முதல் 4 மாடிகளில் வசித்து வந்த 35 குடும்பங்களை சேர்ந்தவர்களும் கட்டடத் தொழிலாளர்களும் சிக்கிக் கொண்டனர்.

இந்த விபத்தில் பலியான நபர்களின் எண்ணிக்கை 73ஆக உயர்ந்துள்ள நிலையில் இடிபாடுகளில் மீட்கப்பட்டவர்களில் 10 மாத குழந்தை ஒன்று அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளமை அப்பகுதி மக்களிடையே வியப்பினை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த குழந்தையின் பெற்றோர் உயிருடன் தான் இருக்க வேண்டும் என மருத்துவர்கள் கருதுவதோடு குழந்தையின் பெயர் தெரியாத காரணத்தினால் மருத்துவர்கள் அக்குழந்தையை குடியா என செல்லமாக அழைத்து வருகின்றனர். (அ-5)

# பூமியை நோக்கி வரும் விண்கல்லை தடுத்து நிறுத்தி ஆராய முயற்சி

## நாசா விஞ்ஞானிகள் களத்தில்



பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கும் விண்கல்லை சந்திரனிற்கு அருகில் நிறுத்தி மேலதிக ஆராய்ச்சிகளை மேற்கொள்ள நாசாவின் விண்வெளி ஆய்வு மையம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கும் 25 அடி உயரமும் 500 தொன் எடை கொண்ட ஒரு சிறிய விண்கல்லை ஆராயவே ஒரு தானியங்கி விண்கலம் ஒன்றை நாசா வடிவமைத்து வருகிறது.

குறித்த விண்கல்லை ஆராய்வதற்கும் அதை நிலவுக்கு அருகிலேயே நிறுத்தி ஆராய்வதற்கும் நாசா விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் முயற்சி எடுத்து வருகின்றனர்.

மேலும் அந்த விண்கல்லில் ஆராய்ச்சியாளர்களை இறக்கி அதன் பாறைகளை வெட்டி எடுத்து வந்து ஆராய 4 வருட திட்டம் ஒன்றையும் நாசா குழு வடிவமைத்து செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டம் எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு நிறைவடையும் என கூறப்படுகிறது.

இதேவேளை, பூமியில் மோதி அழிவை ஏற்படுத்தும் எந்த ஒரு பெரிய விண்கல்லையும் முன்கூட்டியே தாக்கி அழிக்கக்கூடிய ஒரு கூட்டுத்திட்டத்திற்கு உலக நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் நாசா கேட்டுக் கொண்டுள்ளது.

சூரிய மண்டலத்தில் ஆயிரக்கணக்கான விண்கற்கள் சுற்றி வரும்நிலையில் மிகச் சிறிய அளவிலான கற்கள் முதல் 50 கிலோ மீற்றர் விட்டமுடைய விண்கற்கள் வரை சுற்றி வருகின்றன.

இவற்றில் ஒரு கிலோ மீற்றர் விட்டமுடைய விண்கல் ஒன்று பூமியில் மோதுமானால் அது பூமியில் அனைத்து உயிரினங்களையும் அழித்துவிடும் அபாயம் உள்ளது என கூறப்படுகிறது. (அ-5)

# வடகொரிய தீபகற்பத்தில் எந்நேரமும் போர் மூளலாம்

## சீனாவின் உதவியை கேட்கிறது வல்லரசு

**கொரிய தீபகற்பத்தில் நிலவும் போர்ப் பதற்றத்தை தணிப்பதற்காக சீனாவின் உதவியை அமெரிக்கா நாடி யுள்ளது. அமெரிக்கா தென்கொரியா பகுதிகள் மீது எந்த நேரத்திலும் ஏவுகணையை வீசி வடகொரியா தாக்குதல் நடத்தலாம் என்ற சூழ் நிலை தற்போது உருவாகியுள்ளது.**

இந்நிலையில் போர் பதற்றத்தை தணிப்பதற்காக சீனாவின் உதவியை அமெரிக்கா நாடியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து பெயர் வெளியிட விரும்பாத அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறுகையில், தொடர்ந்து மிரட்டி வரும் வடகொரியா தனது நிலையை மாற்றிக் கொள்ள சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையென்றால் கொரிய தீபகற்பத்தில் அமெரிக்கா தனது இராணுவ பலத்தை மேலும் அதிகரிக்கும் என தெரிவித்துள்ளார்.

கொரிய தீபகற்பத்தில் ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகளை நிறுவுவது, போர்க் கப்பல்களை நிறுத்தியுள்ளது குறித்து சீனாவிடம் அமெரிக்க அதிகாரிகள் விளக்கியுள்ளனர். மேலும் அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி மற்றும் பலர் சீனா செல்லவுள்ளனர்.

போர் மூண்டால் வெளிநாட்டு தூதரகங்களுக்கு பாதுகாப்பு தர முடியாது என்பதால் அனைவரும் வெளியேற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே தனது கிழக்கு எல்லையில் இரண்டு மத்திய தூரக ஏவுகணைகளை ஏவுவதற்காக தயார் நிலையில் வடகொரியா வைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


இதுவரை சோதனை செய்யப்படாத 3000 முதல் 4000 கிலோ மீற்றர் தூரம் வரை செல்லும் முசுடான் ஏவுகணையைக் கொண்டு தென் கொரியா மற்றும் ஜப்பானில் எந்த பகுதியையும் அமெரிக்காவுக்கு சொந்தமான குவாம் தீவையும் தாக்க முடியும்.

இதற்கிடையே அமெரிக்க ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் கூறியதாவது, முசுடான் ஏவுகணை சோதனை நடத்தவும் வடகொரியா தயங்காது. சர்வதேச விதிகளை வடகொரியா கடைப்பிடிக்க வேண்டும்.

தற்போதைய சூழலில் அச்சோதனை மேற்கொள்வது பதற்றத்தை மேலும் அதிகரிக்கும். ஏவுகணை சோதனை மேற்கொண்டால் அமெரிக்க அதை கடுமையாக எடுத்துக் கொள்ளும் என எச்சரித்துள்ளது.

இதற்கிடையே ஜப்பானில் ஆளில்லா உளவு விமானங்களை நிறுத்த அமெரிக்க முடிவு செய்துள்ளது.

இதன்மூலம் கொரிய தீபகற்ப பகுதியை தீவிரமாக கண்காணிக்க முடியும். வடக்கு ஜப்பானில் உள்ள மிஸ்வா விமானப்படை தளத்தில் உளவு விமானங்கள் நிறுத்தப்படுகின்றன. (அ-2)




அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் நகரிலுள்ள வோஷிங்டன் பல்கலைக்கழக நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்டன் (இடது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.

# புனே வாரியர்ஸ் அணியை எளிதில் வீழ்த்தியது பஞ்சாப்



ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் 6-வது லீக் போட்டி நேற்று மாலை 4 மணிக்கு புனேயில் உள்ள சுப்ரதா றோய் சஹாரா அரங்கில் நடைபெற்றது.

இதில் புனே வாரியர்ஸ் இந்தியா - கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற புனே வாரியர்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிந்து கொண்டது.

அதன்படி உத்தப்பா - மனிஷ் பாண்டே தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர்.

பண்டே ஓட்டமெதுவும் எடுக்காமல் பிரவீன் குமார் வீசிய பந்தில் போல்டாகி வெளியேறினார்.

அதன் பின்னர் வந்த புனே வாரியர்ஸ் வீரர்கள் பஞ்சாப் அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

புனே வாரியர்ஸ் அணி ஒரு கட்டத்தில் 10 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 38 ஓட்டங்களை எடுத்து பரிதாபகரமான நிலையில் காணப்பட்டது.

தொடர்ந்து வந்த வீரர்களும் அணிக்கு தோள் கொடுப்பார்கள் என்று பார்த்தால் அவர்களும் வருவதும் செல்வதுமாக இருந்ததனால் அவ்வணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 99 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

பஞ்சாப் அணியின் பந்துவீச்சில் மஹ்மூத், ரியான் ஹரிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இவ் சுண்டங்காய் வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய பஞ்சாப் அணியின் இன்னிங்ஸை கில்கிறிஸ்ட் வான வேடிக்கையுடன் ஆரம்பித்து வைத்தார்.

இவ்வாறு அதிரடி காட்டிய கில்கிறிஸ்ட் அதேவேகத்தில் 15 ஓட்டங்களுடன் மூடை கட்டிக் கொண்டு வெளியேறினார்.

தவிர மற்றொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான மன்டீப் சிங் 31 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இறுதியில் பஞ்சாப் அணிக்கு 12.2 ஓவர்களில் வெற்றியிலக்கு 8 விக்கெட்டுக்களால் கனிந்தது.

வேரா 43 ஓட்டங்களுடனும், டேவிட் ஹசி 8 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.

பந்து வீச்சில் மத்யூஸ், ராகுல் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இவ்வெற்றியின் மூலம் பஞ்சாப் அணி 2 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.

## இன்றைய போட்டி


ராஜஸ்தான் றோயல்ஸ்

எதிர்

கொல்கத்தா நைட் ரைடர்ஸ்

இரவு : 8 மணி

# பெங்களூருக்கு எதிரான போட்டி சுப்பர் ஓவரில் சன் ரைசர்ஸ் வெற்றி






ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் 7-வது போட்டி நேற்று ஹைதராபாத்திலுள்ள ராஜிவ் காந்தி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூரு றோயல் ச்லஞ்சர்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தது.

அவ்வணி 20 ஓவர்களின் முடிபில் 8 விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.


துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக அதிகபட்சமாக விராட் ஹோலி 46 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

131 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் 20 ஓவர்கள் முடிபில் அதே ஒட்ட இலக்கைப் பெற்றதால் ஆட்டம் சுப்பர் ஓவர் என்ற முடிபை நோக்கிச்சென்றது.

பெங்களூரு அணி ஒரு ஓவரைக் கொண்ட சுப்பர் ஓவரில் 15 ஓடட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

16 ஒட்டங்களை வெற்றியிலக்காக் கொண்டு களமிறங்கிய சன்ரைசர்ஸ் அணி இறுதி பந்தில் வெற்றியிலக்கை அடைந்தது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சன் ரைஸர்ஸ் அணியின் விஹாரி தெரிவானார்.



# இலங்கை விஜயத்தை..

இராணுவத்தை அகற்ற வேண்டும் என்று ஐ.நா.சபை பல தடவை கூறிவிட்டது. ஆனால் இதுவரை அது நடைபெறவில்லை.

இலங்கையின் வடக்குப் பகுதியில் இராணுவம் தொடர்ந்து தமிழர்கள் மீது அத்துமீறல்களில் ஈடுபட்டு மனித உரிமைகளை மீறி வருகிறது.

இராணுவத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து துடைத்தெறியப்பட்டுள்ளனர். அவர்களது குடும்பங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. சொந்தங்களை இழந்து தமிழர்கள் தவிக்கிறார்கள். இராணுவத்தால் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாவதை பல தடவை ஐ.நா. மனித உரிமை கண்காணிப்புக் குழு ஆவணப் படுத்தியுள்ளது.

இலங்கையில் நடந்துள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. சபையில் இரண்டு தடவை தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டுள்ளது. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் சுதந்திரமான நம்பகத்தன்மையான விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்த இரண்டு தீர்மானங்களையும் ஆதரித்து நமது நாடு வாக்களித்துள்ளது.

நமது பிரமர் மன்மோகன் சிங் மற்றும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு சார்பில் இலங்கையில் தமிழர்கள் உண்மையான அதிகாரம் பெறுவதற்கு வழிவகுக்கும் 13-வது சட்டத்திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளனர். என்றாலும் இந்தியாவின் இந்தக் கோரிக்கையை இலங்கை அரசு இன்னும் ஏற்கவில்லை.

இதற்கிடையே காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இலங்கையின் வடக்குப் பகுதியில் உள்ள ஈழத் தமிழர்களின் மறுவாழ்வுக்கு நிதி உதவிகளை செய்துள்ளது.

தமிழர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவும், அத்தியாவசிய மருந்துகள் வாங்கவும் உதவிகள் செய்துள்ளது.

என்றாலும், இந்திய அரசால் செய்யப்படும் இத்தகைய ஆக்கபூர்வமான உதவிகளை ஈழத்தமிழர்கள் பெறும் வகையில் இலங்கை அரசு சரியானபடி செய்யத் தவறிவிட்டது.

இந்தியாவில் உள்ள தொழில் கழகங்களில் உயரிய மதிப்பில் உள்ள இந்திய வணிக தொழில் கூட்டமைப்பு, ஈழத்தமிழர்களின் வேதனையையும், தமிழக மக்களின் மன வேதனையையும் அறிந்திருக்க வேண்டும். தற்போதுள்ள சூழ்நிலையில் இலங்கைப் பயணத்தை மேற்கொண்டால் அது அப்பாவி ஈழத்தமிழர்களின் விடயத்தில் ஆழமான காயம் ஏற்படுவதாக இருக்கும்.

எனவே, இந்திய வணிக தொழில் கூட்டமைப்பு ஈழத்தமிழர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். தற்போது இலங்கைக்கு எம்.பிக்கள் குழுவை அனுப்புவதை நிறுத்த வேண்டும். இது தொடர்பாக எம்.பிக்களுக்கு நான் தனியே கடிதமொன்றை எழுதியுள்ளேன்.

இது தமிழக மக்களின் கோபத்துக்கும், கவலைக்கும் எதிரானதாகும். எனவே, ஈழத் தமிழர்கள் வேதனை மற்றும் தமிழர்களின் கோபத்தை உணர்ந்து உங்கள் பயணத்தை இரத்துச் செய்ய கேட்டுக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார். (செ-4)

# கிழக்கு சிவில் நிர்வாகத்தில்...

பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் இயங்கும் பொது பல சேனாவின். அடாவடித்தனமான செயற்பாடுகளால் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் ஹர்த்தாலில் ஈடுபடும் ஒரு துர்ப்பாக்கிய நிலைமை இருப்பதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டியதுடன் முஸ்லிம் மக்கள் கிழக்கு மாகாணத்தில் ஆத்திரத்துடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன்போது கிழக்கு மாகாணத்தின் சிவில் செயற்பாடுகளில் இராணுவத்தினரின் தலையீடு இருப்பதை ஏற்க முடியாதென அமைச்சர் ரவூப் ஹக்கீமும் தெரிவித்ததுடன் மக்களை ஆத்திரமூட்டும் மிகத் தவறான வேலையை பாதுகாப்பமைச்சு செய்துவருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

கிழக்கில் சாதாரண ஒரு விடயத்துக்கும் பள்ளிவாசல் சபைத் தலைவர்களும், உலமாக்களும் இராணுவ முகாம்களுக்கு அழைத்து விசாரிக்கப்படுவதாகத் தெரிவித்திருக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பொலிஸார் மட்டுமே மக்களின் தொடர்பாடல்செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாமேயொழிய இராணுவம் அல்லவெனவும் தெரிவித்தார்.

கிழக்கில் வேறுவேலைகள் இல்லாமல் விவசர்யிகளின் காணிகளில் விவசாயத்தில் ஈடுபடும் வேலைகளிலும் மக்களின் காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருக்கும் இராணுவம், சிவில் நிர்வாகத்தில் தலையிடுவது முஸ்லிம் மக்களை கடுமையாக ஆத்திரப்படுத்தியுள்ளதாகவும், ஏதாவதொரு பிரச்சினையை பேசவேண்டுமானால் பொலிஸார் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடன் பேசாலாமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட இதர முஸ்லிம் அமைச்சர்மாரும் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் இந்தக் குற்றச்சாட்டை ஆதரித்துள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை நன்கு செவிமடுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்த விடயத்தை பாதுகாப்புச் செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வரவுள்ளதாகத் தெரிவித்தார். (செ-11)

noolaham.org | aavanaham.org

## பொதுநலவாய...

மாநாடு நடப்பது எவ்விதத்திலும் பொருத்த மானதோ ஏற்கக்கூடியதோ அல்ல என்று 25ஆம் திகதி மார்ச் மாதம் சென்னையில் நடைபெற்ற தி.மு.க தலைமைச் செயற்குழு அவசர கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் அம் மாநாட்டை எக்காரணம் கொண்டும் இலங்கையில் நடத்திடக் கூடாது என்று பொதுநலவாய நாடுகளை இக் கழகச் செயற்குழு கேட்டுக் கொள்கின்றது என்று தீர் மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் பொதுநலவாய மாநாட் டை நடத்தக்கூடாது என்ற கருத்தை தி.மு.கவும் டெசோ அமைப்பில் உள்ள மற்ற இயக்கங் களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

பல்வேறு தமிழ் அமைப்புகளும் தமிழின உணர்வாளர்களும் இதே கருத்தை வலியு றுத்தி வருகிறார்கள்.

லண்டன் மாநகரில் அமைச்சர்கள் சார்ந்த பொதுநலவாய நடவடிக்கைக்குழுவின் கூட் டம் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறப்போ வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தக் கூடாது என்று வலியுறுத்தப்பட்டு வரு வதைப் பற்றி அந்தக் கூட்டத்தில் ஆராய்ந்து பரிசீலனை செய்து முடிபெடுக்க வேண் டும் என்று டெசோ அமைப்பின் சார்பில் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர்கள் சார்ந்த பொதுநலவாய நட வடிக்கைக் குழுவில் இடம்பெற்றுள்ள நாடு களின் தூதர்களை தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்களும் டெசோ அமைப்பின் உறுப்பினர்களும் நேரில் சந்தித்து இலங்கை யில் பொதுநலவாய மாநாட்டை நடத்தக் கூடாது என்பதை விளக்கி வலியுறுத்துவார் கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

A/L - 15
(கலை, வணிகம்)
ஏப்பிரல் 13
8 மணி
DMI
Jaffna

## தமிழர்களின் வடுக்களை...

தமிழ் மக்களின் கடந்த கால வடுக்களை ஆற்றுவதற்கு சர்வதேச விசாரணையே நீதி யானது என்பதையும் இந்திய ஜனாதிபதி புரிந்து கொள்ள வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மூன்று தசாப்த காலமாக நீடித்து வந்த உள்நாட்டு யுத்தம் முடிவுற்றதால் அரசியல் தீர்வு காண இலங்கைக்கு தற்போது சிறந்த வாய்ப் புக் கிட்டியுள்ளது. இந்த வாய்ப்பை இலங்கை அரசு சரியாகப் பயன்படுத்தி நீதியான தீர்வு காண வேண்டும். அதற்கு இந்தியா முழு ஆதரவு வழங் கும் என்று இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அறிக்கையூடாக வலியுறுத்தியிருந்தார்.

இந்திய ஜனாதிபதியின் இந்த அறிவித்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச் சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்து வெளியிடும் போது தெரிவிக்கையில்,

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந் தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என மகிந்த ராஜபக்ஷ அரசை பல தடவைகள் இந் திய மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது. அத்துடன் நேரடிப் பேச்சுக்களையும் நடத்தியுள்ளது. ஆனால், மகிந்த அரசு எவ்விதமான முன்னே ற்ற நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இந்தியப் பிரதமர் மற்றும் அந்நாட்டு வெளி விவகார அமைச்சரிடம் அளித்த உறுதிமொழிகள் எதனையும் மகிந்த அரசு நிறைவேற்றவில்லை.

இந்நிலையில், இலங்கை அரசு என்ன நிலைப்பாட்டில் நிற்கின்றது என்பது இந்தியா வுக்கு விளங்கும்.

இலங்கை ஜனாதிபதி மகிந்தவும் அவரின் சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவும் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு தேவையில்லை என்பதில் பிடிவாதமாக நிற்கிறார்கள்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 4-ம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற இலங்கை யின் சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றும்போது, தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு தேவையில்லை எனவும், வடக்குக் கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மட்டும் முன்னெடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இவரின் இந்த உரையானது இந்தியா உட்பட சர்வதேச நாடுகளிலிருந்து வெளி வரும் பத்திரிகைகள் மற்றும் இணையத்தள செய்திகளில் கடும் விமர்சனத்திற்கு உள்ளா கியிருந்தது.

எனவே, இந்த அரசா தமிழருக்கு தீர்வைப் பெற்றுத்தரும்? இந்த அரசு தனது முயற்சியால் தமிழருக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க பின்னடிப்பதனால்தான் ஜெனிவாவில் கட ந்த மாதம் இலங்கைக்கு எதிராக இரண்டா வது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் இனப் பிரச்சினைக்கு நீதியான அரசியல் தீர்வு காண இலங்கை அரசு முன்வர வேண்டும் எனவும், அதற்கு இந்தியா முழு ஆதரவு வழங்கும் என்றும் இந்திய ஜனாதிபதி பிர ணாப் முகர்ஜி அறிக்கையூடாகத் தெரிவித்து ள்ளார்.

இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்து ரையாடிய பின்னர் தனது ஆதங்கத்தை இந் திய ஜனாதிபதி அறிக்கையூடாக வெளி யிட்டுள்ளார்.

இது நல்ல விடயம்தான். ஆனால், மகிந்த அரசு இதை இனிமேல் கவனத்தில் எடுத்துச் செயற்படுமா என்பது கேள்விக்குறி. இதை இந்திய அரசு உணர வேண்டும்.

எனவே, இலங்கையில் இனப்பிரச்சினை க்கு நிரந்தர அரசியல் தீர்வு காணுமாறு மகிந்த அரசுக்கு இந்தியா அறிக்கைகள் ஊடாக அழுத்தங் களைக் கொடுக் காமல் அதற்கு அப் பாற் சென்று ஆக்க பூர்வமான வகை யில் கொள்கை வழிமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண் டும்.

அதேவேளை, தமிழ் மக்களின் கட ந்த கால வடுக்களை ஆற்றுவதற்கு சர்வதேச விசாரணையே நீதியானது என்பதையும் இந்திய ஜனாதிபதி புரிந்து கொள்ள வேண் டும் என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன். (செ-4)

## ஐ.நா வாக்கெடுப்பை...

போன்ற நாடுகளைச் சுட்டிக்காட்டிய இவ் வூடகம், இது மோசமான கூட்டணி என்றும் விமர்சித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இளந்திரையனின்...

இருக்கிறாரா இல்லையா என்றே தமக்குத் தெரியாது என இளந்திரையனின் குடும்பத்தார் தன்னிடம் கூறியதாக லோகினி தெரிவித்தார்.

டுபாயில் ஐநா அகதிகள் உதவியமைப்பின் (யுஎன்எச்சிஆர்) பொறுப்பில் இருந்துவரும் இலங்கைத் தமிழர்களில் லோகினியும் ஒருவர்.

தமிழகத்திலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல முயன்றபோது, சிங்கப்பூர் கடற்படையால் காப்பாற்றப்பட்டு டுபாயில் தற்போது யுஎன்எச்சிஆர் பொறுப்பில் இருக் கும் 19 இலங்கைத் தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பக்கூடாது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடந்த சனியன்று கோரியிருந்த நிலையில் லோகினி ரதிமோகன் பிபிசி தமிழோசையிடம் மேற்படி தகவலை தெரிவித்துள்ளார். (செ-4)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
பிரஞ்சு மொழியை பிரஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
French மொழியை கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இச் சர்வதேச நிறுவனத்தில் France மற்றும் Canada முதலிய நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்க விரும்பும் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.
மேலும் தரமான CERTIFICATE ஐ பெறுங்கள்.
(2319)
உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள். அழையுங்கள் 021 222 8093
61, Kachcheri-Nallur Road, Jaffna. E-mail: alliancejaffna@yahoo.com
(றக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம்)

# மரண அறிவித்தல்

## கந்தையா சுப்பையா



யாழ்ப்பாணம் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட **கந்தையா சுப்பையா** நேற்று (07.04.2013) ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் கந்தையா பார்வதி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்புச் சகோதரரும், செல்லம் மாவின் அன்புக் கணவரும், கணேசலிங்கம் (Assistant Director of Education, Valikamam Education Zone), யோகேஸ்வரலிங்கம் (ஆசிரியர், யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரி), கு.சண்முகாதேவி, பரமேஸ்வரலிங்கம் (Accountant,SLRCS, Jaffna Branch) ஆகியோரின் பாசமிகு தந்தையும், க.சித்திவிநாயகர் சட்டத்தரணி (Solicitor, London) அவர்களின் சிறிய தந்தையும், க.அமிர்தநாயகி, யோ.சோதீஸ்வரி, ப.ஜோதிலட்சுமி (ஆசிரியர், சுன்னாவில் அ.த.க பாடசாலை- பூநகரி), கு.ரங்கநாதன் (முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்வி அலுவலம்-தீவகம்), சி.சாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், க.மாதங்கி (யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவி), வீணாவாகினி (Trainee Banking Assistant, Indian Bank), க.மதுராந்தகி, ரவிதர்சன், மாதுரி, சஜமுகன், அபிஷஜனி, செந்தூரன் (லண்டன்), பிரணவன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் **இன்று (08.04.2013) திங்கட்கிழமை 10.30 மணிளவில்** அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய் வீதி, இணுவில். (2342) தகவல்: குடும்பத்தினர்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
Excellent Teachers' Panel & Individual Attention

Diploma in English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

Spoken English With Grammar-Quick Learning Course (1½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்காகவே நடாத்தப்படுகின்றது.
தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல் சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில்நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகின்றது.

Advanced Diploma in English (4 Months)
◈ ஆங்கில மொழியையும் ஆங்கில இலக்கிய அறிவையும் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்பவர்களுக்கும் மேலும் மொழியைச் சிறப்பாகக் கற்று அதற்கு வேண்டிய தகைமையை ஏற்படுத்த உதவி செய்யும்.
◈ இந்த நெறி ஆங்கிலத்தில் சரிவர விளங்கிக்கொள்ளவும் அதோடு ஆங்கில அறிவையும், இலக்கியத்தினையும் விருத்தி செய்ய உதவும்.

IELTS Academic / General — Duration : (2½ Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

A1 Exam-Sponsor/Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
* U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது.
* நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
* சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
* ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது.

B1 Exam-Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிப்பட்டதுடன்
Duration : 2 Months

Young Learners for English (YLE) (வயதெல்லை : 7 - 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்.
* British Council உடன் பரீட்சைக்கான பதிவுகள் March 15ஆம் திகதிக்கு முன் பதியவும்.
* பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் May 8ஆம் திகதிகளில் நடைபெறும்.

Batch I - 08.04.2013 Batch II - 13.04.2013 Batch III - 15.04.2013 Batch IV - 20.04.2013
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org